விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 16 வெள்ளிக்கிழமை (30.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 042

# அதிரடி சலுகைகளுடன் இடைக்கால பட்ஜெட்

(கொழும்பு)

- அரச ஊழியர்களுக்கு ரூபாய் 10,000 சம்பள உயர்வு
- ஓய்வூதியக் கொடுப்பனவு ரூபாய் 1000 அதிகரிப்பு
- பால்மா விலை ரூபாய் 61ஆல் குறைப்பு
- மண்ணெண்ணெய் ரூபாய் 6ஆல் குறைப்பு
- சமையல் எரிவாயு ரூபாய் 300ஆல் குறைப்பு
- மோ.வாகன வரி 15 வீதம் குறைப்பு (1000சிசிக்குள்)
- சீனியின் விலை ரூபாய் 10ஆல் குறைப்பு
- கோதுமை மா ரூபாய் 12.50ஆல் குறைப்பு
- விவசாயக்கடனுக்கு 50 வீதம் வரிச்சலுகை
- கல்விக்கான ஒதுக்கீடு 6 வீதம் (தேசிய வருமானத்தில்)
- சமுர்த்திக் கொடுப்பனவு ரூபாய் 200 ஆல் அதிகரிப்பு



23 ஆம் பக்கம் பார்க்க...

## சர்வதேச விசாரணை விரைவாக நடக்கும்!

தாமதங்கள் ஏற்படாது என்கிறார் பிரி.அமைச்சர்



(யாழ்ப்பாணம்)

இலங்கை மீதான சர்வதேச விசாரணையில் தாமதம் ஏற்படாது என தெரிவித்துள்ள பிரிட்டன் வெளி விவகார அமைச்சர் குகோஸ்வைர்,

24 ஆம் பக்கம் பார்க்க...

## அரச ஊழியர்களுக்கு ரூ.10 ஆயிரம் உயர்வு

(கொழும்பு)

அரச ஊழியர்களின் தற்போதைய சம்பளம் அவர்களின் வாழ்க்கைச் செலவுக்கு போதுமானதாக இல்லை என்பதால் அரச ஊழியர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்படும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இடைக்கால வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றிய அமை

24 ஆம் பக்கம் பார்க்க...

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும்

ஜனாதிபதியிடம் வட மாகாணசபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தில் கீழ் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி வட மாகாண சபை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் இக்கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்,

1979ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்தல் எனத் தலைப்பிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பட்ட கடிதத்தின் முழு விவரம் வருமாறு,

2014 ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்வில் ஒருமனதாக நிறைவேற்ற

24 ஆம் பக்கம் பார்க்க...

## ஜனாதிபதியின் செலவு

2008ஆம் ஆண்டு - 634 கோடி ரூபாய்
2009ஆம் ஆண்டு - 765 கோடி ரூபாய்
2010ஆம் ஆண்டு - 5,063 கோடி ரூபாய்
2011ஆம் ஆண்டு - 5,063 கோடி ரூபாய்
2012ஆம் ஆண்டு - 5,936 கோடி ரூபாய்
2013ஆம் ஆண்டு - 6,244 கோடி ரூபாய்
2014ஆம் ஆண்டு - 10,497 கோடி ரூபாய்
2015ஆம் ஆண்டு - 9,593 கோடி ரூபாய்

**9,303 கோடி ரூபாய் குறைப்பு**

மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய ஜனாதிபதியின் செலவு 290 கோடி ரூபாய ஆகும்.

(செ-11)

## பாணின் விலை 6 ரூபாய் குறைப்பு

கோதுமை மாவின் விலை கிலோவிற்கு ரூபா 12.50 குறைக்கப்பட்டுள்ளதால் 450 கிராம் பாணின் விலை ஒரு இறாத்தலுக்கு 6 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

புதிய பாணின் விலை ரூபாய் 54 ஆக நிர்ணயம செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இன்று 30-ம் திகதி நள்ளிரவு தொடக்கம் இந்த விலை குறைப்பு அமுலுக்கு வருவதாக இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## சொந்த இடங்களுக்கு விரைவில் செல்வீர்கள்

முகாம் மக்களிடம் பிரி.அமைச்சர் உறுதி



(யாழ்ப்பாணம்)

உங்களுடைய சொந்த இடத்திற்குச் செல்லும் காலம் விரைவில் வரும் என யாழ் வந்த பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர், வலி. வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து சபாபதிப்பிள்ளை முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு கூறியுள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் குகோஸ்வைர் வட

24 ஆம் பக்கம் பார்க்க...



காரைநகர் மணற்காடு
முத்துமாரி அம்மன் ஆலயம்
கும்பாபிஷேகப் பெருவிழா
02.02.2015 திங்கள் மு.ப. 9.36 - 10.45
எண்ணெய்க் காப்பு : 31.01.2015
சனி காலை 8.00 மணி முதல்
01.02.2015 ஞாயிறு மாலை 03.00 மணி வரை
ஆலய திருப்பணிச் சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம நீதியரசர் பொறுப்பிலிருந்து ஒரு நாளில் ஷிராணி ஓய்வு



(கொழும்பு)

நேற்று முன்தினம் புதன்கிழமை மீண்டும் பதவி அமர்த்தப்பட்ட பிரதம நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க நேற்று வியாழனன்று பொறுப்பிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற பிரதம நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கவை வரவேற்கும் வைபவத்தில் உரையாற்றிய போதே அவர் தான் ஓய்வுபெற்ற பின்பு வெற்றிடமாகும், இலங்கையின் 44ஆவது பிரதம நீதிபதி பதவிக்கு தற்போது உச்ச நீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாக செயற்படும் கே.ஸ்ரீபவன் நியமிக்கப்பட்டால் அது தொடர்பாக தான் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினார்.

நீதித் துறையில்தான் பதினாறு வருட காலம் சேவையாற்றியுள்ளதாக கூறிய ஷிராணி பண்டாரநாயக்க, அந்தக் காலப் பகுதியில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டதான் முயற்சிகளை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

ஆயினும் அடிப்படையற்ற முறையில் சமர்ப்பிக்கப்பட்ட கண்டன தீர்மானமொன்று காரணமாக தனது சேவை காலத்தில் 746 நாட்கள் பறிக்கப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டினார்.

அந்த காலப் பகுதிக்குள் தனது குடும்பத்தினர் மற்றும் தனக்கு ஆதரவளிக்க முன்வந்தோர் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்ததாக கூறிய நீதிபதி ஷிராணி அச்சுறுத்தல்கள் மத்தியில் தன்னை ஆதரித்த பொது மக்கள், வழக்கறிஞர்கள் மற்றும் கீழ் நீதிமன்றங்களில் செயற்படும் நீதிபதிகளின் துணிச்சலை தான் வரவேற்பதாகவும் கூறினார்.

ஆயினும் பிரதம நீதிபதியாக ஷிராணி பண்டாரநாயக்க நியமிக்கப்பட்ட முறையை தனக்கு ஏற்றுக்கொள்ள முடியாதென்று மூத்த வழக்கறிஞர் ஸ்ரீநாத் பெரேரா கூறினார் .

பிரதம நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க நீக்கப்பட்ட நாடாளுமன்ற தீர்மானம் முறையாக நிறைவேற்றப்படாத காரணத்தினால், அவர் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டு மொஹான் பீரிஸ் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

இந்த முறையை தனக்கு ஏற்றுக் கொள்ள முடியாதென்று கூறிய ஸ்ரீநாத் பெரேரா, இவ்வாறு நீதிபதிகள் நீக்கப்பட்டால் எதிர்காலத்தில் ஆட்சி அமைக்கும் அரசாங்கங்களும் தான் விரும்பியவாறு நீதிபதிகளை நீக்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்படலாமென்றும் எச்சரித்தார்.

ஆயினும் மொஹான் பீரிஸ் பதவி நீக்கப்பட்டாலும் கூட அவர் வழங்கிய தீர்ப்புகள் செல்லுப்படியற்றவை என்று கருதப்பட மாட்டாதென்று வழக்கறிஞர் எம்.ஏ.சுமந்திரன் கூறினார்.

இந்த வைபவத்தில் உச்ச நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற மற்றும் மஜிஸ்ட்ரேட் நீதிமன்ற நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் கலந்துகொண்டனர்.

இதேவேளை கொழும்பு உச்ச நீதிமன்ற சிரேஷ்ட நீதிபதி கே.ஸ்ரீபவன் 44ஆவது பிரதம நீதியரசராக பதவியேற்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் பிரதம நீதியரசராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆட்சி காலத்தில் பதவி வகித்த மொஹான் பீரிஸின் நியமனமும் சட்ட பூர்வமற்றதாக கருதி நீக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மைத்திரிபால இடத்தை ஜயசிங்க நிரப்பினார்

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் வெற்றிடம் ஏற்பட்டது. அவரது இடத்திற்கு டி. ஆர். ஜயசிங்க பண்டார நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர் நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பொலநறுவை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட்ட ஜயசிங்க, 21 ஆயிரத்து 878 விருப்பு வாக்குகளை பெற்றிருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் 5-வது இடத்தை அவர் பெற்றிருந்ததுடன் பொலநறுவை மாவட்டத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டனர்.

1991 ஆம் ஆண்டு உள்ளூராட்சிசபைத் தேர்தலில் திம்புலாகல பிரதேச சபைக்கு தெரிவான ஜயசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். (செ-11)

# பிரதம நீதியரசர் ஸ்ரீபவன்

## ஊடக சந்திப்பில் அமைச்சர் ராஜித அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் அடுத்த பிரதம நீதியரசராக கே.ஸ்ரீபவன் நியமிக்கப்பட உள்ளதாக அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

ஸ்ரீபவன் சிரேஷ்ட சட்டத்தரணியாகவும் உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதியரசராகவும் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சிரேஷ்ட ஆலோசகராகவும் பிரதி சட்டமா அதிபராகவும் பணியாற்றியுள்ளார். இந்த நிலையில், இலங்கை மிக உயர்ந்த பதவிகளில் ஒன்றான பிரதம நீதியரசர் பதவியை அவர் தன்வசப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக நியமிக்கப்பட உள்ள கே.ஸ்ரீபவன் பற்றிய சிறு குறிப்புக்கள் வருமாறு,

கனகசபாபதி ஜே.ஸ்ரீபவன் 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். யாழ்.இந்து கல்லூரியில் ஆரம்ப கல்வியை கற்ற அவர் சட்ட கல்லூரியில் இணைந்து கொண்டதுடன் 1976 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியின் பரீட்சையில் முதல் தரத்தில் சித்தியடைந்தார்.

1978 ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணிக்கு சேர்ந்த ஸ்ரீபவன், பதில் சட்ட ஆலோசகராக பணியாற்றினார். 1989 ஆம் ஆண்டு சிரேஷ்ட சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

1996 ஆம் ஆண்டு பிரதி சட்டமா அதிபராக நியமனம் பெற்ற அவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகவும் பணியாற்றியுள்ளார்.

புதிய சட்டக்கல்வியை தொடர்ந்தும் கற்று வந்த ஸ்ரீபவன், 1992 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழிற்சட்டம் சம்பந்தமான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

அத்துடன் அதே ஆண்டில் லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்டம் தொடர்பில் விசேட பட்டத்தையும் பெற்றுள்ளார்.

2002 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்ட ஸ்ரீபவன் 2007 ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவராக நியமிக்கப்பட்டார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் நிஹால் ஜயசிங்க ஓய்வுபெற்ற பின்னர் ஸ்ரீபவன் 2008 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார். தற்போது ஸ்ரீபவன் இலங்கையின் பிரதம நீதியரசராக பொறுப்பேற்கவுள்ளார். (செ-11)

# சிகரட் பக்கட்களில் 80 வீதமான எச்சரிக்கை படங்கள் பிரசுரிக்கப்படும்

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

சிகரட் பக்கட்களில் 80 வீதமான எச்சரிக்கை படங்களை இடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. சிகரட் பக்கட்களில் 80 வீதமான எச்சரிக்கை படங்களை இடுவது தொடர்பிலான சட்ட மூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய இந்த புதிய உத்தேச சட்டம் விரைவில் பாராளுமன்றில் சட்டமாக்கப்பட உள்ளது.

அரசாங்கத்தின் நூறு நாள் திட்டத்தில் இந்த விடயம் முக்கியமான இடத்தை வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த அரசாங்கம் பக்கட்களில் 60 வீதத்தை விட எச்சரிக்கை படங்கள் இருக்கக் கூடாது என வலியுறுத்தி வந்ததாக அப்போதைய எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வந்தன. (செ-11)

# வாளால் வெட்டிய பெண்; யுவதிகள் இருவர் காயம்

(கரணவாய்)

அயல்வீட்டு பெண் ஒருவரின் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த யுவதிகள் இருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் பருத்தித்துறை கற்கோவளம் புனித நகர் கிராமத்தில் இடம்பெற்றது.

குறித்த சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த நகுலன் சுஜாதா (வயது 25) சதீஸ் குசந்தினி (வயது 22) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி பகுதியில் வசிக்கும் குறித்த யுவதிகளின் அயல்வீட்டு பெண் ஒருவர் நகுலன் சுஜாதா என்பவரை முதலில் வாளால் வெட்டியுள்ளார். அதனை தடுக்க முயன்ற மற்றொரு யுவதியின் மீதும் பின்னர் வாள்வெட்டை நிகழ்த்தி விட்டு குறித்த பெண் தப்பியோடியுள்ளார் எனினும் பின்னர் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் படுகாயமடைந்த இரு பெண்களும் சிகிச்சைக்காக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு [illegible]


**வேலையாட்கள் தேவை**

- சமையல்காரர்
- சப்ளையர்

**கோல்டன் ஸ்ரார் ரெஸ்றோரன்ட்**
(ஆரியகுளம் அருகில்) யாழ்ப்பாணம்
T:P:-0778890888 (9288)



**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

Allied Health Science Unit
Academic Programme

The Academic Programme for the New Batch (9th) (2013 A/L) of Allied Health Science Students will commence on Monday 16th February 2015. An Inauguration Programme will be held on 16th February 2015 at 9.00 am in the Hoover Auditorium, Faculty of Medicine. The new students are requested to bring their parents (Mother & Father) or Guardian to the Inauguration Programme

Registrar (C-9961) 28.01.2015



## மரண அறிவித்தல்



**திருமதி கண்மணி சுந்தரலிங்கம்**

அன்னை மடியில் 18.01.1937 | ஆண்டவன் அடியில் 27.01.2015

இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல.996, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணையை (அரசடி) தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி சுந்தரலிங்கம் (27.01.2015) சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசுவாமி-மங்கையர்க்கரசி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொ.கு.சுந்தரலிங்கத்தின் (சட்டத்தரணியும், நொத்தாரிசும்) பாசமிகு மனைவியும், தங்கவேல், காலஞ்சென்றவர்களான நடராசா, வெங்கடாசலம், சந்திரசேகரம், நகுலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சூரியகுமார், காலஞ்சென்ற சுரேஸ்குமார், சுந்தரகுமார், ஜனார்த்தனி, சுபேந்திரகுமார், ஜனரஞ்ஜனி ஆகியோரின் பாசமிகு தாயும், சூரியகுமார், விமலாம்பிகை (தாதி உத்தியோகத்தர், பொது வைத்தியசாலை, திருகோணமலை), கனகேஸ்வரி, பவானி, சற்குணராஜா, சாந்தினி, நிரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியும், கஸ்தூரி, தனோஜன், மாதங்கி, மாதுமி, சங்கவி, சகானா, அக்ஷயா, நிவேதன், டிலக்ஷன், வசந், சஜெந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நகுலேஸ்வரி, மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சண்முகலிங்கம், மகாலிங்கம், அழகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2015) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
996, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (9287)
க.சுந்தரகுமார் (குட்டி மகன்)
Tel:0750421268


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு ஈழ அகதிகளை திருப்பி அனுப்புவது

# கொலைக்களத்திற்கு அனுப்புவதற்கு ஒப்பானது

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு



(சென்னை)

**இந்தியாவிலுள்ள ஈழத்தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது அவர்களைக் கொலைக்களத்திற்கு அனுப்புவதற்கு ஒப்பானது என தமிழர் தேசிய முன் னணியின் தலைவரும் ஈழத் தமிழரின் உரிமைக்காக தொடர்ந்து குரல்கொடுத்து வருபவருமான பழ.நெடுமாறன் மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கை அரசு உறுதியான நம்பத்தகுந்த நடவடிக்கைகளை எடுத்த பிறகே இங்குள்ள அகதிகளை அவர்கள் தாயகத்திற்கு திருப்பி அனுப்புவதற்கான நடைமுறை குறித்து மத்திய அரசு ஆலோசிக்க வேண்டும் என்று கூறி அக்கூட்டத்தை தள்ளி வைக்குமாறு பிரதமர் நரேந்திரமோடிக்கு தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் கடிதம் எழுதியிருப்பதை வரவேற்று பாராட்டுகிறேன்.

இலங்கையில் உள்நாட்டிலேயே 5 இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கோ, வீடுகளுக்கோ திரும்ப முடியாமல் தவிக்கும் நிலையில் தமிழ்நாட்டில் உள்ள அகதிகளை திரும்ப அனுப்புவது அவர்களை கொலைக் களத்திற்கு அனுப்புவது போலாகும்.

இந்தியாவில் உள்ள அகதிகளை திரும்ப அழைப்பதில் இலங்கை அரசு காட்டும் அவசரத்திற்கு பின்னணி உள்ளது. இந்தியாவை பின்பற்றி மேற்கு நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கும் அகதிகளை அந்தந்த நாட்டு அரசுகள் திரும்ப அனுப்பத் தொடங்கிவிடும். அதற்காகவே இலங்கை அரசு இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது.

மேற்கு நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் அந்தந்த நாட்டு அரசுகளுக்கு உண்மை நிலைகளை தெரிவித்ததன் பேரில்தான் அந் நாடுகள் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களையும் இனப்படு கொலைகளையும் கண்டித்து ஐ.நா. மனித உரிமை குழுக் கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வந்து ஐ.நா. விசாரணைக்குழு ஒன்று அமைக்க வழி வகுத்தனர்.

எனவேதான் வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களை திரும்ப அழைப்பதற்கு இலங்கை அரசு அவசரப்படுகிறது.

தமிழக அரசின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாத கூட்டத்தினால் எந்த பயனும் இல்லை. எனவே அக்கூட்டத்தை இந்திய அரசு தள்ளி வைக்க வேண்டும் என வற்புறுத்துகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பாலித எம்.பிக்கு மறியல் நீடிப்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெருமவின் விளக்கமறியல் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அவர் ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை முழந்தாளிட வைத்து துன்புறுத்தியதாக அவருக்கு எதிராக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இதனையடுத்தே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ

## பஸ் விபத்தில் 15 பேர் காயம்

(கொழும்பு)

கெலிஓயா- பிட்டவத்தைப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 15 பேர் காய மடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியும் தனியார் பஸ் வண்டியும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்கள் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ

## ஆசிரிய கலாசாலை பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து கடந்த ஆண்டு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரிய மாணவர்களின் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தால் கலாசாலை அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான சான்றிதழ்களைக் கையளிக்கும் வைபவம் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அன்றைய தினம் தவறாது சமுகமளித்து தமக்குரிய சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கலா சாலை அதிபர் அறிவித்துள்ளார். இதேவேளை நாடு முழுவதும் உள்ள கலாசாலைகளுக்குக் கிடைத்த பெறுபேறுகளின்படி கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய சித்திர பாட ஆசிரியர் சந்தனம் மோகன்ராஜ் 14 பாடங்களிலும் விசேட சித்தியை (ஏ) பெற்று உயர் பெறுபேற்றை எய்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ

## பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் யாழ். மாவட்டத்தில் முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற் பயிற்சி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மரவேலை தொழில் நுட்பவியலாளர் (Carpentary), கட்டட நிர்மாண உதவியாளர் (Masanary) ஆகிய கற்கைநெறிகள் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்திலும் காய்ச்சி இணைப்பாளர் கற்கைநெறி (Welding) கைதடி தொழிற் பயிற்சி நிலையத்திலும் வெளியிணைப்பு இயந்திர திருத்துநர் (OutBoard Mechanic), இரு சக்கரமோட்டார் வாகன திருத்துநர் (Motor Cycle Mechanic) கற்கைநெறிகள் ஊர்காவற்றுறை தொழிற் பயிற்சி நிலையத்திலும் அலுமினியம் பொருத்துநர் (Aluminium Fabiricator) வல்வெட்டித்துறை தொழிற்பயிற்சி நிலையத்திலும் நடைபெற்று வருகின்றன. இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசியதொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சியாகும்.

இக்கற்கைநெறிகளைக் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் (தொ.பே.இல. 021 222 7949) எதிர்வரும் 02.02.2015 திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ

## மகிந்தவின் மகன்களுக்கு தலைவர் பதவியில் சிக்கல்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன்களான இலங்கை கடற்படை ரக்பி குழுவின் தலைவர் யோசித்த ராஜபக்ஷ மற்றும் இலங்கை இராணுவ ரக்பி குழுவின் தலைவர் ரோஹித்த ராஜபக்ஷ ஆகிய இருவரையும் அந்தந்த விளையாட்டுக் குழுக்களின் தலைவர் பதவிகளிலிருந்து நீக்குமாறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

அந்தந்த குழுக்களில் அவ் விருவரும் விளையாடுதல் மற்றும் அவ்விருவருக்கு எதிராகவும் முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை கவனத்தில் கொண்டே அவ்விருவரையும் இரு விளையாட்டுக் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## இராசி பலன்

30.01.2015

தை 16, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு

ஏகாதசி பின்னிரவு 1.16 மணிவரை

ரோகினி பிற்பகல் 3.49 மணிவரை

இராகுகாலம் 11.06-12.36 மணிவரை

சுப நேரம் 6.36-8.06 மணிவரை

பீம ஏகாதசி விரதம்

வளவன்

**மேடம்:** காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்:** நண்பர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம், விரயங்கள் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள். போசன சுகமுண்டு.

**கடகம்:** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

**சிம்மம்:** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பலரது பாராட்டுக்களையும் பெறுவீர்கள், வெளிநாட்டு தொடர்புகள் விருத்தியாகும், ஆரோக்கியமான நாள்.

**கன்னி:** பற்றாக்குறை தீர்ந்து பண வரவுகள் கிடைக்கும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், ஆன்றோர் சந்திப்புண்டு, தந்தை வழி உறவில் நன்மையுண்டு.

**துலாம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், கவனக்குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் மேன்மையுண்டு.

**மகரம்:** உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு

**கும்பம்:** மைத்துநர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், நலன்தரும் பயணங்கள் இடம்பெறலாம்

**மீனம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், நீண்டநாளைய பிணக்குகளில் முன்னேற்றம் காண்பீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 136

# மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

உங்களுக்குத் தெரியுமா.... மக்கள் இலட்சிய குரு என்று உருவத்தைக் கூட அவர்கள் மனதில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? வழக்கமாக அது ஒரு வயதான மனிதனின் உருவமாக நரைத்த தலையுடன் நீண்ட தாடியுடன் நீங்கள் புத்தகங்களிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் பார்ப்பது போன்று இருக்கிறது! அவர்கள் என்னிடம் வந்து என்னைப் பார்க்கும் பொழுது, இப்படி ஒரு இளைஞன் ஒரு உண்மையான குருவாக இருக்க முடியும் என்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் நானும் அதே பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் என்னை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் நான் அவர்களுக்கு குருவைப் பற்றிய எதிர்பார்ப்புகளிலிருந்து விடுதலை அளிக்க வேண்டியிருக்கிறது!

ஆனால், ஸ்வாமிஜி, சில சமயங்களில், உதாரணமாக வேலையில், நமது தொழிலாளிகளைக் கையாள வேண்டிய சமயங்களில் செதுக்குவது தேவையாக இருக்கிறது. அப்பொழுது நாங்கள் என்ன செய்வது?

உங்கள் செதுக்குதலை விழிப்புடன் செய்யுங்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைத் தெரிந்து செய்யுங்கள். அப்பொழுது தேவைக்கதிகமாக செய்ய மாட்டீர்கள். உங்கள் தொழிலாளிகளிடம் உங்கள் எதிர்பார்ப்புகள் நியாயமானவையா என்று பாருங்கள். வேறு ஏதேனும் மாற்று தீர்வுகள் இருக்கிறதா என்று பாருங்கள். முற்றிலும் தேவையென்றால் மட்டுமே, நீங்கள் மற்றவரை உருவாக்கிக் கொள்ள முயற்சி செய்யலாம்.

உங்களிடம் எந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதை கவனத்துடன் உபயோகிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்! கோபமும் இச்சையும் கூட உங்களுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட மிகப் பெரும் சக்திகள்தான். அந்த சக்தியிடம் உங்களுக்கு மரியாதை இருக்குமானால் நீங்கள் அதை வீணாக்கவோ, தவறாகப் பயன்படுத்தவோ மாட்டீர்கள்.

நாம் எப்பொழுதாவது பணத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறோமா? நீங்கள் பணத்தை ஒருபோதும் தவறாகப் பயன்படுத்த மாட்டீர்கள்; ஏனெனில் நீங்கள் அதை மதிக்கிறீர்கள். ஒருவன் பத்து ரூபாய் மதிப்புள்ள வேலையைச் செய்தால், நீங்கள் அவனுக்கு ஒரு ரூபாய் கூடுதலாகக் கொடுப்பீர்களா?

ஆனால் கோபத்தைப் பொறுத்த வரையில் நீங்கள் எப்பொழுதுமே அதிகமாகத்தான் கொடுக்கிறீர்கள். ஒருவன் பத்து ரூபாய் அளவு கோபப்படும் அளவிற்கு தவறு செய்தால் நீங்கள் ஐம்பது ரூபாய் அளவிலான கோபத்தைக் கொடுக்கிறீர்கள்! இல்லையா?

ஏன்?

ஏனெனில் உங்கள் கோபத்தை விழிப்பின்றி உபயோகப்படுத்துகிறீர்கள்; விழிப்புடன் அல்ல. நீங்கள் உங்கள் கோபத்தை விழிப்புடன் உபயோகிப்பீர்களானால், அது பலன் கொடுக்கும். அதன் பிறகு குற்ற உணர்வடைய நேராது. இதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.



உங்கள் கோபத்தினால், ஒருபோதும் உங்கள் அமைதி குலையக் கூடாது. அவ்வாறு அமைதி குறையுமாயின், நீங்கள் கோபத்தில் விழிப்புணர்வுடன் செல்லவில்லை என்ற பொருள். கோபம் உங்களை வெல்ல அனுமதித்துவிட்டீர்கள். இதுதான் உங்கள் கோபத்தை நீங்கள் சரியாக உபயோகப்படுத்துகிறீர்களா என்பதை அறியும் அளவுகோல்!

ஒரு சின்னக் கதை...

ஒருமுறை ஒரு சாது, அலைந்து திரிந்து இரந்து உண்டு வாழும் மனிதர், ஒரு கிராமத்தைக் கடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது அந்த கிராம மக்களிடம் இருந்து அவர்களது வாழ்க்கையில் பெரும் சேதத்தை விளைவித்துக்கொண்டிருந்த ஒரு நாகத்தைப் பற்றி ஒரு புகார் வந்தது. அவருக்கு மிருகங்களுடன் தொடர்பு கொள்ளும் சக்தி இருப்பது தெரியுமாதலால், எப்படியாவது அந்த நாகத்திடம் பேசி அவர்களை விட்டுவிடுமாறு செய்ய வேண்டும் என்று அவரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். அந்த சாது நாகத்திடம் பேசினார். நாகமும் இனிமேல் எந்தக் கிராமவாசியையும் கடிப்பதில்லை என்று சத்தியம் செய்தது. சில மாதங்கள் கழித்து அந்த சாது மீண்டும் அதே கிராமம் வழியாக வந்தபோது உடலெங்கும் சிராப்புகளுடன் கிட்டத்தட்ட சாகும் தறுவாயில் அந்த நாகத்தைக் கண்டார். உனக்கு என்ன ஆயிற்று? ஏன் இப்படிக் காயமடைந்திருக்கிறாய்? என்று அந்த சாதுகேட்டார்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

**சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட ராட்சத காளான்...**

இராட்சத காளான் ஒன்று சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. லிங்க்ழி இக் காளான் 3 அடி (107செ.மீ) அகலமும்,16.4அங்குலம்



(7.45கி.கி) எடையும் கொண்டுள்ளது. சுமார் 2000 ஆண்டுகளாக அழியாத் தன்மையுடைய இந்த காளான் பாரம்பரிய சீன மருத்துவத்தில் உபயோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சமைப்போம் சுவைப்போம்

## உருளைக்கிழங்கு போளி

தே.பொருட்கள்:-



கடலைப்பருப்பு - 1 மே.கரண்டி
உளுந்தம் பருப்பு - 1 மே.கரண்டி
முந்திரிப்பருப்பு - 10
மைதா மாவு - 2 கப்
பச்சை மிளகாய் - 1
கடுகு - 1 தேக்கரண்டி
உப்பு - 1 தேக்கரண்டி
நல்லெண்ணெய் - 2 மே.கரண்டி, உருளைக்கிழங்கு- 10 கருவேப்பிலை - சிறிது

### செய்முறை

பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி கடுகு, கடலைப்பருப்பு, உளுந்தம் பருப்பு, முந்திரிப்பருப்பு, வெட்டிய பச்சை மிளகாய், கருவேப்பிலை போட்டு வதக்கி அதனுடன் வேக வைத்து உதிர்த்த உருளைக்கிழங்கு, உப்பு, மஞ்சள் பொடி கலந்து கிளறி இறக்கி வைக்கவும்.

மைதாவில் உப்பு, சிறிது எண்ணெய், தண்ணீர் சேர்த்து போளிக்கு மாதிரி பிசைந்து வைத்துக் கொள்ளவும். பிசைந்த மாவை சிறு உருண்டைகளாக உருட்டிக்கொள்ளவும். ஒவ்வொரு உருண்டையும் ,எடுத்து கையில் விரித்து நடுவில் சிறிது பூரணத்தை வைத்து மூடி போளிக்குமாதிரி இலையில் விரித்துக் கொள்ளவும். தோசைக்கல்லை அடுப்பில் வைத்து காய்ந்ததும் போளியைப் போட்டு சுற்றி எண்ணெய் அல்லது நெய் ஊற்றி இரண்டு பக்கங்களையும் வேக வைத்து எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## FACULTY OF ARTS

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mention posts.

Senior Professor/ Professor of education/Economics/Geograpgy

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Education/ Home Economics/ Media Studies/ Law Translation Studies/ Hindu Civilzation/ Sanskrit.

If no applicants for the post of Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probitionary) in Translation Studies with special degree/ post graduate degree in Translation Studies, persons who have Special degree in English Literature/ English Language Teaching with 1st or 2nd Upper Division and have an appropriate certificate in Fluent of Tamil Language could be considered for lecturer (Probitionary) in Translation Studies.

| Post | SALARY AND OTHER BENEFITS<br>Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.67,100-11x1425-82,775/-p.m |
| Professor | Rs.56,505-13x1310-73,535/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.45,545-7x1050-52,895/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.39,755-11x790-48,445/-p.m |
| Lecturer (Probitionary) | Rs.27,775-10x645-34,225/-p.m |

**Note:**

In addition to the above salary, the following allowances will be paid:

i.Special allowance-20% of the basis salary
ii.Additional monthly allowance 20% of the basis salary
iii.Interim Allowance Rs.3000/=
iv. Cost of living allowance Rs.7,800/-p.m

Further the following allowances will be paid only be paid to Academic Staffs.

i.Academic allowance:

| | |
|---|---|
| Senior Lecturer Grade I/II | 85% |
| Lecturer (Probitionary) | 65% |

ii.35% Research allowance based on research activity

**Statutory benefits:**

(1) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Grade I and Senior Lecturer Grade II
(2) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
(3) Gratuity payments
(4)Employees' Trust Fund benefits
(5)Free Medical Services

**Closing date:**

| | |
|---|---|
| Post of Senior Professor/ Professor | -27.03.2015 |
| Other posts | -04.03.2015 |

Applications and other required documents for above posts shall be sent to the Deputy Registrar/ Academic Establishments Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Applications forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka. either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank. University Branch or at the Shroffs counter of the University of Jaffna. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/ Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs. 100/- drawn in favour of the Bursur, University of Jaffna.

Those who wish to apply for more than one post should apply in seperate forms.

Applicants from the University System/ Government Departments/ Corparations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions.Illegible incomplete and late applications will be rejected without intimation.Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**
**2015.01.29**

(C-9958)

## UNIVERSITY OF JAFFNA
## FACULTY OF AGRICULTURE
## ADMISSION OF PUBLIC OFFICERS
## FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE (2013/2014)

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture, University of Jaffna for the Admission of Public Officers to follow the Degree Programme of B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2013/2014.

1.The applicant should have passed the G.C.E. A/L Examination in Bio logial Science and qualified to enter the University.

**OR**

Any other qualification, as may be approved by the Senate on the recomendation of the Faculty Board of Agriculture.

**AND**

2.Diploma In Agriculture (Course duration of not less than 2 years) obtained from any recognized institution.

3.Minimum of 5 Years experience In a capacity of not less than middle level Technical Officer Grade in the Field of Agriculture after obtaining Diploma Course.

Age: candidate should be less than 45 Years at the time of Closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar,Admissions Branch, University of Jaffna on a payment of Rs. 100/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.100/- drawn in favour of the Bursar with self addressed envelope not less than 9"x4" size and stamp for Rs.5.00.

Date of Closing is 13th February 2015.

Applications should be forwarded through the relevant Heads of Department.

Applications Which are not routed through the proper channel will be rejected.

Candidates will be called for a Written Test and an Oral Examination.

No application will be Entertained after the Closing date.

**REGISTRAR**
**29.01.2015** (C-9959)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 24 1/2<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BA, ACCA/ கணக்காளர்<br>தொ.இ: B/4067 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 34 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/250 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 58 3/4 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: வாய்பேசமாட்டாத பெண்<br>தொ.இ: B/4071 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 35 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/255 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 34 1/4<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: HNDA, BBA/ காசாளர் (லண்டன்)<br>தொ.இ: B/4072 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 6 1/2<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்.<br>தொ.இ: G/256 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 79 1/4<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4074 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா:48 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/257 |

## கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
ரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுன்னாகம் மீன்வியாபாரிகளின் பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது

சுன்னாகம் மீன் சந்தையில் மீன் வியாபாரிகள் தங்களுக்கான குத்தகைக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று முன்தினம் புதன்கிழமை காலை மேற்கொண்ட பகிஷ்கரிப்புப் போராட்டத்தை உடன்பாட்டின் மூலம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராசா பிரகாஸ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

பிரதேச சபையின் சட்டத்துக்கு அமைவாக மீன்வியாபாரம் செய்பவர்கள், மீன் பெறுமதியில் 4 வீதத்தை மீன்சந்தையின் குத்தகைக்காரர்களுக்கு செலுத்தவேண்டும். சுன்னாகம் மீன் சந்தையில் குத்தகைக்காரர் இதுவரைகாலமும் 2 வீதமான தொகையை நல்லெண்ண அடிப்படையில் மீன் வியாபாரிகளிடம் வசூலித்து வந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் 4 வீதக் குத்தகைப் பணத்தை தருமாறு மீன் வியாபாரிகளிடம் குத்தகைக்காரர் கோரி யுள்ளார்.

இதனால் அதிருப்தியடைந்த மீன் வியாபாரிகள் மீன்சந்தையை பூட்டி பகிஷ்கரித்தனர். இச்சம்பவம் தொடர்பில் எனக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, அவ்விடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டேன். 4 வீதம் வரையில் அறவிடுவதற்கு குத்தகைக்காரர்களுக்கு அனுமதியுள்ளது என்பதை மீன்வியாபாரிகளுக்கு எடுத்துக் கூறினேன். அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டதையடுத்து, பகிஷ்கரிப்பை கைவிட்டு மீன் வியாபாரத்தில் ஈடுபட்டதாக தவிசாளர் கூறினார். (இ-23)



# பல்கலை. கல்விசாரா ஊழியர்கள் இன்று அடையாள வேலைநிறுத்தம்

யாழ். பல்கலைக்கழக பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களை தாமதமாகவே பதவி விலகுமாறு கோரியிருந்தோம். இதே கோரிக்கையை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பவையும் விடுத்திருந்தன.

எமது கோரிக்கைக்கான காரணங்கள் வெளிப்படையானவை.

எனினும் நாளை 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை திட்டமிட்டபடி வெளிவாரி உறுப்பினர்கள் சகிதம் பல்கலைக்கழக பேரவை கூடவுள்ளதால் அன்றையதினம் எமது போராட்டத்தை பல்கலைக்கழக முன்றிலில் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

இதற்கமைவாக இன்று 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறு வேண்டியுள்ளோம்.

அடையாள வேலைநிறுத்தத் தின்போது பாதுகாப்பு ஊழியர்களும் மட்டுப்படுத்தப்பட்ட பணிகளையே ஆற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் சேவையும் ஏற்கனவே திட்டமிடப்பட்ட பரீட்சை பணிகளும் பணியாளர் அபி விருத்தி நிலைய (Staff Development Centre) செயலமர்வு (WorkShop) தொடர்பான பணிகளும் தடையின்றி இடம்பெற உதவுமாறு ஊழியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சகல போதனை சாரா ஊழியர்களும் இன்று 30 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் ஊழியர் சங்க பொது அறையில் இடம்பெறும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் நாளை 31 ஆம் திகதி காலை 8 மணியளவில் இராம நாதன் மண்டப முன்றிலில் தவறாது ஒன்று கூடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என யாழ். பல்கலைக் கழக ஊழியர்கள் சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (இ)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால்

# தாதியர், மருந்தாளர், ஆய்வாளர் பட்டப்படிப்புக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைதிறந்த பல்கலைக்கழக சுகாதார விஞ்ஞான பிரிவினால் தாதியர் பட்டப்படிப்பியலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.உயர்தர விஞ்ஞான கணிதப் பிரிவில் 3 பாடங்களில் சித்தி அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் அத்திவாரக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவர்கள் அல்லது பொதுத் தாதியர் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தாதியர் பாடசாலையினால் வழங்கப்பட்ட தாதியர் டிப்ளோமா சான்றிதழ் மற்றும் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட முதல் நியமனக் கடிதத்தினையும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது வெளிநாட்டு மற்றும் இலங்கை சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு கல்வி நிறுவனங்களினாலேனும் வழங்கப்பட்ட 3 வருட டிப்ளோமா மற்றும் குறைந்தது இரண்டு வருட தாதியர் சேவை அனுபவம் இருப்பவர்கள் அத்துடன் கணித /விஞ்ஞானப்பிரிவில் மூன்று பாட சித்தி அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் அத்திவாரக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவர்கள் அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் தாதியர் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவர்களும் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இலங்கை திறந்த பல்கலைக் கழக சுகாதார விஞ்ஞான பிரிவினால் மருந்தாளர் பட்டப்படிப்பியலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் இலங்கை மருத்துவ சங்கத்தினால் மருந்தாளராக பதிவு செய்திருப்பதோடு பதிவின் பின்னரான 2 வருட முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

இவர்கள் க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையில் 3 பாடங்களில் இரசாயனவியலில் சி உள்ளடங்கலாக சித்தியடைந்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் அத்திவாரக் கற்கை நெறியில் இரசாயனவியலில் பி சித்தியினைப் பெற்று பூர்த்தி செய்தவர்களாக இருப்பதுடன் எமது தகுதிக்காண் தெரிவுப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

இலங்கை திறந்த பல்கலைக் கழக சுகாதார விஞ்ஞான பிரிவினால் விஞ்ஞான ஆய்வு கூட ஆய்வாளர் பட்டப்படிப்பியலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் இலங்கை மருத்துவ சங்கத்தினால் விஞ்ஞான ஆய்வு கூட ஆய்வாளராக பதிவு செய்திருப்பதோடு மூன்று வருட முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் .

இவர்கள் க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானத் துறையில் 3பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் அத்திவாரக் கற்கை நெறியில் இர சாயனவியலில் சி சித்தியினைப் பெற்று பூர்த்தி செய்தவர்களாக இருப்பதுடன் தகுதி காண் தெரிவுப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை நாளை 31 ஆம் திகதி வரை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## யோகாசனமும் தளர்வு பயிற்சியும்

ஓம் பதஞ்சலி யோககேந்திரா நிலையத்தால் நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு புதிய யோகாசனமும் தளர்வு பயிற்சி உடன் வழிகாட்டும் உளவளத்துணை பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. (Yoga and Relation, Guidance & Counselling) இப் பயிற்சி நெறி இன்று நாளை, நாளை மறுதினம்ஆகிய தினங்களில் காலை 6.30 தொடக்கம் 7.30 மணிவரை நல்லூர் பருத்தித் துறை வீதி ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும்.

இப்பயிற்சி நெறியில் வயது வேறு பாடின்றி ஆர்வமுள்ளவர்கள் இணைந்து கொள்ளலாம் என அறிவிக் கப்பட்டுள்ளது. (இ)

உயர்தேசிய பட்டதாரிகளினால்

# சட்டத்தரணி சுமந்திரனுக்கு யாழில் வைத்து பாராட்டு விழா

வடமாகாண உயர்தேசியக் கணக்கியல் மற்றும் முகாமைத்துவப் பட்டதாரிகளின் ஒழுங்கமைப்பில் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டவாளருமான எம்.சுமந்திரனுக்கு பாராட்டு விழா எடுக்கும் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

2012 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கப்பட்ட போது வடமாகாண உயர்தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகளின் நியமனம் மறுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நியமன மறுப்பிற்கு எதிராக சிரேஷ்ட சட்டவாளர் சுமந்திரனால் இலங்கை உச்ச நீதிமன்றத்தில் 228 வழக்காளிகள் சார்பாக இலவசமாக அடிப்படை மனிதவுரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இறுதியாக 29.09.2014 அன்று வழக்கில் ஏற்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைவாக வடமாகாண உயர்தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவப் பட்டதாரிகள் 400 பேருக்கு நியமனம் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதற்காகவே மேற்குறித்த பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# தகவல் தொடர்பாடல் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் சான்றிதழை பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16-25 வயதிற்கு உட் பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட அலுவலர் NAITA, இல 44, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப் பாணம் என்னும் முகவரிக்கு 10.02.2015இற்கு முன்னர் அனுப்ப வேண்டும். அத்துடன் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறி (ICTT) இற்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும்என அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலர் அறிவித் துள்ளார். (இ)

எரிபொருட்களின் விலை குறைந்த பின்னரும்

# பலதரப்பட்ட கட்டண அறவீட்டில் ஈடுபடும் ஆட்டோ சாரதிகள்

(கரணவாய்)

யாழ். மாவட்டத்தில் எரிபொருட்களுக்கான விலை கள் குறைக்கப்பட்டுள்ள போதும் ஆட்டோ சாரதிகள் பல தரப்பட்ட கட்டணங்களை அறவிடுவதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பல ஆட்டோ சாரதிகள் எரிபொருள் விலை குறைக்கப்பட முன்னர் அறவிட்ட கட்டணத்தையே தற்போதும் அறவிடுவதாகவும் இதனால் தாம் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எரிபொருட்களின் விலை குறைக்கப்பட்டதன் பின்னர் ஆட்டோவுக்கான போக்குவரத்துக் கட்டணம் நிர்ணயம் செய்யப்படாமையினால் பல்வேறு விலைகளில் கட்டணம் அறிவிடப்படுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது விடயம் தொடர்பில் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் விரைந்து நடவடிக்கை எடுத்து விலை நிர்ணயம் செய்வதன் மூலம் பொதுமக்களின் அசெளகரியங்களைத் தவிர்க்க முடியுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-60)




## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று பி.ப 1 மணிக்கு நவரட்ணராஜா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ச.வேலழகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியர் தமுத்துக்குமாரசாமி கலந்து கொள்ளவுள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.விசாரணையினை வலுவூட்டும் செயற்பாடுகளில் தாயக தலைவர்கள்

இலங்கை தொடர்பிலான ஐ.நா மனித உரிமைச் சபையின் ஆணையாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படும் அனைத்துலக விசாரணையினை வலுப்படுத்தும் செயற்பாட்டில், தமிழீழத் தாயக தலைவர்கள் உறுதியாக இருப்பார்கள் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சர் சுதன் ராஜ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆட்சிபீடமேறியுள்ள புதிய அரசாங்கம், ஐ.நா.வின் விசாரணைகளை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சிகளுக்கு மத்தியில், தாயக அரசியல் தலைவர்கள் மௌனமாக இருப்பதாக யாழ்ப்பாண இலத்திரனியல் ஊடகங்களில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்துரைக்கும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிங்கள தேசத்தின் ஆட்சியாளர்களது ஊழல்களோ, குடும்ப ஆட்சியோ, ஆடம்பர அரசியலோ இதுவல்ல தமிழர் தேசத்தின் விவகாரம்.

பெரும் இன அழிவொன்றினைச் சந்தித்து தங்களுக்கான பரிகார நீதியினை அனைத்துலகத்திடம் வேண்டி நிற்கும் ஓர் இனத்தின் பிரதிநிதிகளாக இருக்கின்ற தமிழர் தேசத்தின் அரசியல் தலைவர்கள், அந்த மக்களின் நலன்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் மாறாக செயற்படமாட்டார்கள் என நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்துலக விசாரணைக்கான ஐ.நா தீர்மான உருவாக்கத்தில், தாயக அரசியல் பிரதிநிதிகள் கடந்த காலத்தில் ஆற்றியிருந்த பங்கின் தொடர்ச்சியாக, வரும் மார்ச் மாத ஐ.நா.மனித உரிமைச்சபைக் கூட்டத் தொடரிலும், அவர்கள் காத்திரமான பங்கினை ஆற்றுவார்கள் என தமிழ்மக்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் சுதன் ராஜ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பொருளாதார அமைச்சின் அதிகாரிகள் இடமாற்றம்


## 16700 பேரின் பட்டியல் தயார்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பணியாற்றும் 16 ஆயிரத்து 700 பேருக்கு வேறு துறைகளில் வேலை வாய்ப்பு வழங்க அல்லது இடமாற்றம் வழங்க நடவடக்கை எடுக்கப்படுகின்றது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர் டாக்டர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பட்டதாரிகளான இவர்கள் மாதாந்தம் 28 ஆயிரம் ரூபா சம்பளம் எடுத்துக் கொண்டு சிறு வேலைகளையே செய்கின்றனர்.

எனவேதான் இவர்களின் சேவை துறைகளை மாற்றுவதற்கு முடிவு எடுக்கப்பட்டது என்றார். மேலும் இவர்களைக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்பாக நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்த முன்னாள் அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ முயன்று வருகின்றார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பேசும் படம் - 12




அலைகள் தாலாட்டிய படகில்
உல்லாசமாய் ஓய்வெடுக்கும் ஆடுகள்

குறிப்பு: அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

அனுப்பியவர்:
கிரிஷ்ணா,
நீர்வேலி.

# அகதிகள் விரும்பினால் மட்டுமே இலங்கைக்கு அனுப்ப முடியும்

## சுதர்சன நாச்சியப்பன் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை, இந்திய மீனவர்களின் பிரச்சினையில் இரு நாடுகளினதும் கடற்படைகள் ரோந்துப் பணியில் ஈடுபடும். அத்துடன் தமிழகத்தில் வசிக்கும் இலங்கை அகதிகள் விரும்பினால் மட்டுமே அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க முடியும் என இந்திய நாடாளுமன்ற நிலைக் குழுக் கூட்டத்தில் சுதர்சன நாச்சியப்பன் மேலும் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக் கடற்படையினர் தடுத்து வைத்துள்ள தமிழக மீனவர்களின் படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மீனவர்கள் பிரச்சினை மற்றும் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் தலைவர் சுதர்சன நாச்சியப்பன் ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் கூட்டம் இடம்பெற்றது. இதில்



கே.பி.துல்-பி.ராஜானி பட்டீல், சம்பத், நாயக், வரப்பிரசாத ராவ், உள்ளிட்ட ராஜ்ய சபா மற்றும் லோக் சபா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் பங்கேற்றனர். இந்த குழுவின் இயக்குநர் பே.பி.சிங், இணை இயக்குநர் அசோக் கேசாகு மாவட்ட ஆட்சியர் நந்தகுமார், மாவட்ட எஸ்.பி. மயில்வாகனன், கடற்படை, கடலோர காவற்படை, கடலோர பாதுகாப்பு காவற்றுறை, உளவுத்துறை, உள்துறை உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் மீனவ அமைப்புகள், மண் டபம் முகாமின் அகதிகள் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற நிலைக் குழு பிரதமரின் நேரடி கண்காணிப்பில் உள்ளது. கூட்டத்தில் மீனவர்கள் பிரச்சினை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இதில் இந்திய எல்லையை தாண்டாதவாறு இந்திய கடலோர காவற்படையினர் மூலம் எல்லையை தாண்டி மீன்பிடிக்க செல்லும் படகுகளை திருப்பி அனுப்புவது, நடுக்கடலில் மீனவர்களின் உயிர் மற்றும் உடமைகளை பாதுகாக்க ரோந்து பணி மேற்கொளதல், இந்திய - இலங்கை கடற்படையினர் எல்லையில் கூட்டு ரோநது நடத்தி மீனவர்களை பாதுகாப்பது. மேலும் ஆண்டுக்கு ஒருமுறை இரு நாட்டு மீனவர்களும் பேச்சுக்களில் ஈடுபடுதல் என முடிவுகள் எட்டப்பட்டன. தமிழகத்தில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் இலங்கை அகதிகளாக இருக்கின்றனர். இவர்களை இலங்கைக்கு அனுப்ப வேணடும் என்றால் அவர்களின் விருப்பத்துடன் மட்டுமே அனுப்ப முடியும். அவர்களின் விருப்பமின்றி இந்திய அரசு எதையும செய்யாது. மேலும் இலங்கையின் கடற்படையினா் கைப்பற்றி வைத்திருக்கும் தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்க சட்ட ரீதியான நடவ டிக்கைகள் எடுக்கப்படும் என அவா் மேலும தெரிவித்துள்ளாா். (இ-5)

# தங்கச் சாமியாருக்கு 48 இலட்சம் தண்டம்

**ஒரு மணிநேரத்திற்குள் செலுத்தி கூண்டைவிட்டு வெளியேறினார்**

தங்கச் சாமியார் என்றழைக்கப்படும் கண்டி, கால்தென்ன காமினி ஆனந்த என்ற பிரபல சாமியார், வருமான வரி கட்டாத காரணத்தால் நீதிமன்ற சிறைக் கூடத்தில் நேற்று முன்தினம் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் ஒரு மணி நேரத்தில் அபராதமாக சுமார் 48 இலட்சம் ரூபாவை செலுத்தியுள்ளார்.

அம்பிட்டிய கால்தென்ன ஸ்ரீ பத்ர காளியம்மன் தேவஸ்தானத்தில் பிரபல சாமியராக இருக்கும் இவர், காளி தேவியின்அருள்கொண்டு அற்பு தங்கள் மேற்கொள்பவராக ஒரு நம்பிக்கை நிலவுகிறது.

இதன் காரணமான இவரது தேவாலயத்திற்குச் சென்று அநேகர் தங்கமாக தமது காணிக்கைகளைச் செலுத்துவர். இவரது உடலில் சுமார 20 ற்கும் மேற்பட்ட கிலோ எடை கொணட தங்கம் அணிந்து கொண்டு, சர்வ சாதாரணமாக வலம வருகிறார். இந் நிலையில், இவர் பல வருடங்களாக வருமான வரி செலுத்தவில்லை என தொடரப்பட்ட வழக்கில் கண்டி நீதவான் சிரிநீத் விஜேசேகர ரூபா 48 இல ட்சம ரூபா அபராதத்தை விதித்தார. இருப்பினும சுமார்ஒரு மணிநேரத்தில்அபபணம முழுவதும் செலுத்தப்பட்டு அவர் விடுதலையாகியுள்ளார். (இ-5)

# மகாத்மா காந்தியின் நினைவுதினம் இன்று

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் மகாத்மா காந்தியின் நினைவு தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை நகரின் புதிய சந்தைக் கட்டடப் பகுதியில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச்சிலையருகில் பருத்தித்துறை நகராட்சி மன்ற தவிசாளர் சபா இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-10)

# மகளைத்தாக்கி காயப்படுத்திய தந்தையை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு

(மானிப்பாய்)


பண்டத்தரிப்பு பெரியவிளான் பகுதியில் பாடசாலை மாணவியொருவரைத் தாக்கி அவரைப் படுகாயமடையச் செய்த மாணவியின் தந்தையை மனநோய்ச் சிகிச்சைக்கு உட்படுத்துமாறு இளவாலைப் பொலிஸாருக்கு யாழ். சிறுவர் நீதவான் நீதிமன்று நீதவான் கறுப்பையா ஜீவராணி நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் பணித்தார். மது போதையில் செவ்வாய்க்கிழமை வீட்டுக்குச் சென்ற தந்தை, படித்துக் கொண்டிருந்த மகளை அழைத்து கட்டையால் காலில் தாக்கியுள்ளார்.

இதில் காயமடைந்த பாடசாலை மாணவி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். விசாரணைகளை மேற்கொண்ட இளவாலை பொலிஸார் தந்தையை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். (இ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமாவின் தலையை துண்டிப்போம்



## ஐ.எஸ்.ஐ.எஸ். மீண்டும் மிரட்டல்

**(வோஷிங்டன்)— அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் தலையை வெட்டி அமெரிக்காவை இஸ்லாமிய தேசமாக மாற்றுவோம் என்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கடும் தொனியில் மிரட்டல் விடுத்துள்ளனர்.**

அரபிக் நாடுகளில் இயங்கிவரும் மெம்ரி டிவி என்ற தொலைக்காட்சியில் இது தொடர்பான காணொலி ஒளி பரப்பப்பட்டுள்ளது. அதில், குர்திஷ் படையை சேர்ந்த வீரர் ஒருவரின் தலையை துண்டித்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதி ஒருவர், "இஸ்லாமை எதிர்க்கும் நபர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இதுதான் விதி. ஒபாமாவே நாங்கள் அமெரிக்கா வந்து வெள்ளை மாளிகைக்குள் உங்கள் தலையை துண்டிப்போம்.

அமெரிக்காவை இஸ்லாமிய நாடாக மாற்றுவோம்" என்றும் அந்தத் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.


மேலும், ஈராக்கில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரை முன்னின்று நடத்திவரும் ஈராக் குர்திஷ் தலைவர் மசூவுத் பராசானியை எச்சரித்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், ஒவ்வொரு முறையும் நீங்கள்ஏவுகணையைஏவுமபோது, உங்கள் படைவீரர்களின் தலையை நாங்கள் உங்களுக்கு அனுப்புவோம் என்றும் அதில் தெரிவித்துள்ளனர்.

சிரியாவில் உள்ள கோபேன் நகரில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை குர்திஷ் படையினர் விரட்டியடித்து இரண்டு நாட்கள் ஆன நிலையில் இந்த மிரட்டல் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# போர் விமானங்கள் மூர்க்கம் தீவிரவாதிகள் 92 பேர் பலி!

## பாகிஸ்தானில் தொடரும் மோதல்



பாகிஸ்தானில் விமானப் படை விமானங்கள் நேற்று முன்தினம் இரவு தீவிரவாதிகளின் மறைவிடங்களை குறிவைத்து சரமாரியாக குண்டுகளை வீசியதில், 92 தீவிரவாதிகள் பலியாகினர் என்று இராணுவம் தகவல் வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தான் மற்றும் கைபர் பகுதியில் தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த பகுதியில் விமானப்படை தாக்குதல் நடத்தியது.

வடக்கு வசிரிஸ்தானில் சந்தேகத்திற்கு இடமான 76 தீவிரவாதிகளும், கைபர் பழங்குடியின பகுதியில் 16 தீவிரவாதிகளும் பலியாகினர் எனறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு வசிரிஸ்தானின் தாத்தாகேல் பகுதியில் தீவிரவாதிகளின் பதுங்குமிடங்களை குறிவைத்து விமானப்படை விமானங்கள் மிகவும் துல்லியமாக குண்டுகளை வீசியது, இதில் 12 வெளிநாட்டு தீவிரவாதிகள் உட்பட 53 தீவிரவாதிகள் பலியாகினர்.

தாக்குதலில் தீவிரவாதிகளின் ஆறு பதுங்கு குழிகள், வெடிபொருள் கிடங்கு மற்றும் வெடிபொருட்களால் நிரப்பப்பட்டு இருந்த 7 லொறிகளும் தகர்க்கப்பட்டது." என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கார்த்தாங்கி பகுதியில் விமானப்படை விமானங்கள் தீவிரவாதிகளின் நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. இதில் உஸ்பெகிஸ்தான் நாட்டை சேர்ந்த தீவிரவாதிகளும் பலியாகினர் எனறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே பகுதியில் விமானப் படை விமானம் நடத்திய குண்டு வீச்சு தாக்குதலில் 23 தீவிரவாதிகள் பலியாகினர். இப்பகுதிகள் பத்திரிகையாளர்கள் செல்ல முடியாத எல்லைப்பகுதி என்பதால், பலியானோர் எண்ணிக்கை உடனடியாக தெளிவாகவில்லை.

தீவிரவாதிகளுக்கு மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்த இராணுவம் சுமார் ஒரு மணி நேரம் தொடர்ந்து விமானம் மூலம் குண்டுகளை வீசியது என்று தகவல்கள் தெரிவித்துள்ளது என்று டான் செய்தி இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

கைபர் பகுதியில் திராக் பள்ளத்தாக்கு பகுதியில் விமானப்படை விமானம் தீவிரவாதிகளின் மறைவிடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியதில் 16 தீவிரவாதிகள் பலியாகினர்.

12 பேர் காயம் அடைந்தனர் என்று பாதுகாப்பு படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் உள்ள தெர்க்கோ காஸ், வாசா வானா, ஸ்ராவேலா மற்றும் நாகாய் பகுதிகளில் விமானப்படை விமானங்கள் சரமாரியாக குண்டுகளை வீசியுள்ளது. இராணுவம் நடத்திய தாக்குதலில் பலியானவர்கள் தெரிக்-இ-தலிபான் பாகிஸ்தான் மற்றும் லஷ்கர் இ இஸ்லாம் தீவிரவாத இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று அரசு தரப்பு தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (இ-5)



அமெரிக்காவின் கலிபோர்னியா நகரிலுள்ள நாஸா விண் வெளி நிலையத்திலிருந்து முதல்முறையாக பூமியின் மேற்பரப்பின் ஈரப்பதனை கண்காணிப்பதற்கென வடிவமைக்கப்பட்ட விண்கலம் ஒன்று நேற்று விண்ணில் ஏவப்பட்டது. இந்த விண்கலம் ஏவப்படுவதற்குத் தயாரான நிலையில் இருந்தபோது...

# 10 பில்லியன் டொலரைக் கடந்த பேஸ்புக்கின் ஆண்டு வருமானம்

உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான பேஸ்புக் தனது வர்த்தக வரலாற்றில் முதன் முறையாக 10 பிலலியன் டொலருக்கும் மேலாக ஆண்டு வருவாயை ஈட்டியுள்ளது.

இது குறித்து அந்நிறுவனம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், அலைபேசிகளில் கொடுக்கப்படும் விளம்பரங்களுக்கு வரும் வருமானத்தால் இந்த அளவு அதிக இலாபம் கிடைத்ததாகவும், உடனடியாக பணம் சம்பாதிப்பதை விட எதிர்கால தொழில் நுட்பங்களுக்காக அதிக முதலீடு செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் மட்டும் 3.85 பில்லியன் டொலர் வருவாய் ஈட்டிய பேஸ்புக், அதன் மூலம்696 மில்லியன்டொலரை இலாபமாக பெற்றது. இந்நிலையில் கடந்த ஆண்டு முழுவதுமான பேஸ்புக்கின் வருமானம் 58 சதவீதம் உயர்ந்து 12.8 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. இதனால் அதன் இலாபம் 2.9 பில்லியன் டொலர் என்ற அளவிற்கு இரு மடங்காக உயர்ந்துள்ளது.

இது குறித்து பேஸ்புக்கின் நிறுவுனர் மார்க் ஸக்கர் பெர்க் கூறுகையில் எங்களுக்கு பணம் சம்பாதிப்பதில் மட்டுமே ஆர்வம் இருந்தால், நாங்கள் அமெரிக்க மற்றும் பிற வளர்ந்த நாடுகளில் உள்ள மக்களின் விளம்பரங்கள் மீது மட்டுமே கவனம் செலுத்தியிருப்போம். ஆனால் அதில் மட்டுமே கவனம் செலுத்துவதற்காக நாங்கள் இங்கு இல்லை என்று தெரிவித்தார். (இ-5)

# தாய்நாட்டில் இருந்ததாக உணர்ந்தேன் இந்தியாவில் இருந்தது குறித்து மூன்

இந்தியாவில் இருந்த நாட்களின்போது, தாய்நாட்டில் இருப்பதாகவே உணர்ந்தேன். இதில் ஆச்சரியப்பட வேணடியதற்கு எதுவுமில்லை என ஐநா பொதுச்செயலாளர் பான் கீ மூன் உணர்ச்சி பூர்வமாக தெரிவித்தார்.

ஐநா பொதுச்செயலாளராக உள்ள பான் கீ மூன், தென் கொரியாவைச் சேர்ந்தவர். இந்தியாவுக்கான தென் கொரிய துணைத் தூதராக, தனது உயர் பொறுப்பினை கடந்த 1971இல் தொடங்கினார்.

அந்த சமயத்தில், பல முறை இந்தியாவுக்கு வந்து சென்றுள்ள பான் கீ மூன், 2007இல் ஐநா பொதுச் செயலர் ஆனார். அதன் பின்னர், இந்தியாவுக்கு மட்டும் 4 முறை வந்துள்ளார். இம்மாத தொடக்கத்தில், இந்தியா வந்த அவர், டில்லி மற்றும் குஜராத்துக்கு சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இந்த நிலையில், தனது இந்திய பயணம் குறித்து அவர் கூறியிருப்பதாவது,

குஜராத்தில், சபர்மதி ஆசிரமத்துக்கு நான் சென்றபோது, மிகச்சிறந்த மனிதர் மகாத்மா காந்தியுடைய கடிதங்களை பார்க்கும் சிறப்பு உரிமை எனக்கு கிடைத்தது. மகாத்மா காந்தி அமைதிக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் போராடியவர். ஏழை மக்களின் முன்னேற்றத்துக்காக பாடுபட்ட வழக்கறிஞர். அவருடைய உயர் பண்புகள்தான் ஐநாவுடைய பிரகடனத்திலும் உள்ளன.

இந்தியாவில் இருக்கும் நாட்களின்போது, நான் என்னுடைய தாய் நாட்டில் இருப்பதை போன்றே உணர்கிறேன். இதில் ஆச்சரியப்பட வேண்டியதற்கு எதுவுமில்லை. நான் இந்தியாவில் இருந்த வீட்டின் தொலைபேசி எண் எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இம்மாத தொடக்கத்தில், சர்வதேச விவகாரங்களுக்கான இந்திய கவுன்சில் கூட்டம் டில்லியில் நடந்தது. கூட்டம் முடிந்த பின்னர் பான் கீ மூன் பேசுகையில், "நான் அரை மனதுடன் டில்லியை விட்டு செல்கிறேன். டில்லிக்கு மீண்டும் வரும் போதுதான் முழு மனிதன் ஆவேன்.

இப்போதைக்கு இதைத்தான் சொல்ல முடியும். ஐநா பொதுச் செயலர் எனற பொறுப்பினைத் தாண்டி, இந்தியாவில் எனக்கு குடும்பங்கள் உள்ளன. இதனை நான் மகிழ்ச்சியாக உணர்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தவக்கோலத்தில் இறந்த புத்த துறவியினது மம்மி

மங்கோலியா நாட்டில் மம்மி முறையில் பாதுகாக்கப்பட்ட புத்த துறவியின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தாமரை நிலையில் அமர்ந்து யோகாசனம் செய்தபடி உயிர்நீத்த அந்த துறவியின் உடல் சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கக்கூடும் என கருதப்படுகிறது.

திபெத்திய புத்த துறவிகளிடையே இதுபோல் யோக நிலையில் தியானம் செய்தபடி உயிர் துறக்கும் பழக்கம் நடைமுறையில் இருந்து வந்ததால், இந்த துறவியும் திபெத்திய லாமாவின் சீடராக இருக்கலாம் என கருதப்படுகிறது.

கால்நடையின் தோலால் சுற்றி 'மம்மி' முறையில் பாதுகாக்கப்பட்டிருந்த இந்த உடல் எத்தனை ஆண்டு காலம் பழைமையானது? என்பதை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர் ஒன்றியம்

## யாழில் நேற்று உருவாக்கம்


**(யாழ்ப்பாணம்)**

**தற்போது இலங்கையின் பல்வேறு முகாம்களிலும் சிறைகளிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள வடமாகாணத்தைச் சேர்ந்த அரசியல் கைதிகளினதும் உறவினர்கள் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர் ஒன்றியம் (வடமாகாணம்) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளார்கள்.**

இந்த அமைப்பின் தலைவராக கிளிநொச்சியைச் சேர்ந்த திருமதி செல்லையா பவளவள்ளி, செயலாளராக கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லன் விஜயகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பதினொரு பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

தற்போதைய புதிய அரசியல் சூழலில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக பல தரப்புடனும் ஊடாடி, அதனை



விரைவுபடுத்துவதற்கான வழிவகைகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை வடமாகாணத்தைச் சேர்ந்த அரசியல் கைதிகளின் பெற்றோரும் உறவினர்களும் தங்களுடன் தொடர்பு கொண்டு இந்தக் கட்டமைப்பில் இணைந்து கொள்ள வேண்டும் என ஒன்றியத்தின் தலைவரும் செயலாளரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5)

## பொலிஸுக்கும் டெங்கு நோய்!

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு டெங்கு தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளார்.

இதனையடுத்து நேற்று கரவெட்டி சுகாதாரப் பிரிவினர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன் டெங்கு நுளம்பு பெருக்கத்திற்கான சூழல் தொடர்பாக பரிசீலனைகளை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

❖❖❖❖❖❖❖

## ஆசிரிய மாணவருக்கு கலந்துரையாடல்

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற கல்விமாணி கற்கை நெறியினை நெல்லியடி மத்திய நிலையத்தில் பயிலும் முதலாம் ஆண்டு (2013/2015) மற்றும் மூன்றாம் ஆண்டு (2011/2013) ஆசிரிய மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறும் பரீட்சை தொடர்பான முக்கியமான கலந்துரையாடலில் பங்கு பற்றுமாறு கற்கைநெறி இணைப்பாளர் செ.சேதுராஜா அறிவித்துள்ளார். (இ





*பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் அமைச்சின் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். அதனையடுத்து அமைச்சின் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றினார். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பீ.எம்.யூ.டி.பஸ்நாயக்க, பாதுகாப்புப் படை அதிகாரிகள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.*

## இரத்த வங்கியில் எல்லா வகையான இரத்தத்திற்கும் தட்டுப்பாடு நிலவுகிறது

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல், தைபொங்கல், பாப்பரசர் வருகை ஆகிய காரணங்களினால் இரத்ததானம் செய்யும் குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையால் நாட்டிலுள்ள எல்லா இரத்தவங்கிகளிலும் இரத்தத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இரத்த வங்கிக்கு வரும் குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனால் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கியிலும் எல்லா வகையான இரத்தவகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவற்றால் யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளிலுள்ள நோயாளர்களுக்கும் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டபொது வைத்தியசாலைகளிலுள்ள நோயாளர்களுக்கும் தேவையான இரத்தத்தைவழங்க முடியாதுள்ளது.

ஆகவே இரத்ததானம் செய்யும் குருதிக் கொடையாளர்களும் புதிதாக இரத்ததானம் செய்யவிரும்பும் குருதிக் கொடையாளர்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிக்கு விக்டோரியா வீதியில் அமைந்துள்ள நுழை வாயிலினூடாகவும் அந்தந்த பிரதேசத்திலுள்ள குருதிக் கொடையாளர்கள் அண்மையிலுள்ள இரத்தவங்கிக்கும் சமூகம் கொடுத்து இரத்ததானம் செய்து இரத்த வங்கியில் ஏற்பட்டிருக்கும் திடீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மிகவும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் உங்கள் இடங்களில் நடமாடும் இரத்ததான முகாம்களை ஒழுங்குபடுத்தி இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டால் குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தந்து இரத்தசேகரிப்பை மேற்கொள்ளலாம். என இரத்தவங்கியினர் கேட்டுக் கொள்கின்றனர்.

உணர்வுள்ளோர் வாருங்கள் உங்கள் உறவுகளுக்குஉதிரம் தாருங்கள் என யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இதேவேளை இரத்த தானம் செய்ய விரும்புவோர் 077 210 5375 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## 58 இலட்சம் மக்களையும் காட்டிக்கொடுத்துவிட்டனர்

### விமல் வீரவன்ஸ ஆவேசம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்ததன் மூலம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்த 58 இலட்சம் மக்களை காட்டிக்கொடுத்துள்ளதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதியமைச்சர் கீதாஞ்சன குணவர்தனவின் வீட்டில் நேற்று முன்தினம்நடைபெற்ற கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த சில கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்ட இரகசிய கூட்டம் ஒன்றில் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்தார்.

கீதாஞ்சன குணவர்தன வீட்டில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ஸ, திஸ்ஸ விதாரண, டியூ. குணசேகர, வாசுதேவ நாணயக்கார, முன்னாள் மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்து வெளியிட்ட உதய கம்மன்பில, அரசாங்கம், மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறது என குறிப்பிட்டுள்ளார்.

இப்படியானவர்களை கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருடன் எப்படி இணைந்து பணியாற்றுவது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றம் கூட்டப்படுவதற்கு முன்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்று க்குழுவை கூட்டியிருந்தார்.


அந்த கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என, கீதாஞ்சன குணவர்தன வீட்டில் நடைபெற்ற இரகசிய கூட்டத்திலேயே தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தீர்மானித்திருந்தனர்.

எனினும் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்வது என டியூ. குணசேகர மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோர் முடிவு செய்தனர்.

தாம் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தமது நிலைப்பாடுகளை தெரியப்படுத்தி விட்டு வருவதாக இவர்கள் கூறினர்.

இதேவேளை இந்த இரகசிய கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்க்கட்சித் தலைவரின் கீழ் செயற்படுவதில்லை எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1055

## சஞ்சீவனி மந்திரம்

...முனிவர் கூறியபடி மாதவனும் விரதங்களைக் கடைப்படித்தான். அதைக் கண்டு மகிழ்ந்த மகானந்தர், ஒருநாள் "மகனே! இங்கிருந்து கிழக்குத் திசையில் கரடிக் குகை என்று ஒன்று உள்ளது. அங்கு சில மூலிகைச் செடிகள் காணப்படும். அவற்றை எடுத்து வா! அந்தக் குகையில் ஒரு மலைப் பாம்பு வசிக்கிறது! எச்சரிக்கை!" என்று சொல்லி அனுப்பினார். மாதவன் அவ்வாறே கரடிக் குகைக்குச் சென்று மூலிகைகளைப் பறித்தான். அவனைக் கண்டதும் சுருண்டு படுத்திருந்த மலைப் பாம்பு அவனைப் பிடிக்க வந்தது. ஆனால், அதனிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் விரைவாகத் தன் வேலையை முடித்துக்கொண்டு திரும்பினான் மகானந்தர் அந்த மூலிகைகளை ஒரு கமண்டலத்தில் இட்டார். பிறகு, "இங்கிருந்து வடக்கில் பேய்காடு என்ற அடர்ந்த வனம் உள்ளது. வனத்தின் நடுவில் ஒரு மிகப் பெரிய ஆலமரம் உள்ளது. ஆலமரத்தின் நிழலில் சில அபூர்வ மூலிகைகள் உள்ளன. அவற்றை எடுத்து வா! அங்கு பிசாசுகள் உள்ளன! எச்சரிக்கை!" என்றார். உடனே, மாதவன் பேய் காட்டில் உள்ள ஆலமரத்தை அடைந்தான். அவன் சென்ற போது, ஆலமரத்தில் பிசாசுகள் கும்மாள மடித்துக் கொண்டு இருந்தன. பகலில் ஆடிப்பாடி ஆர்ப்பாட்டம் செய்த அவற்றின் கொண்டாட்டம் நடு இரவு வரைத் தொடர்ந்தது. பின்னர் அவை உறங்கத் தொடங்கியவுடன், சத்தமின்றி மூலிகைகளைப் பறித்துக் கொண்டு மாதவன் திரும்பினான். மகானந்தர், அந்த மூலிகைகளையும் அதே கமண்டலத்தில் போட்டார்.




அடுத்ததாக அவன் காட்டிலுள்ள முதலைக் குளத்திற்குச் சென்று, அங்கு நடமாடும் முதலைகளிடம் சிக்காமல், குளத்து நீரில் வளர்ந்திருந்த அவர் குறிப்பிட்ட சில மூலிகைகளையும் கொண்டு வந்தான். அவற்றையும் அவர் கமண்டலத்தில் இட்டார். பிறகு அதில் நீர் ஊற்றினார். அதன் பிறகு அவனை நோக்கி, "நீ சஞ்ஜீவனி மந்திரத்தைக் கற்கத் தகுதியா னவன்தான்!" என்று சொல்லி அதை உபதேசம் செய்தார். பிறகு, "மகனே! இந்த கமண்டலத்திலுள்ள மூலிகை நீரை எடுத்துச் செல்! அதை உன் தந்தைக்குப் பருகக் கொடுத்து, சஞ்ஜீவனி மந்திரத்தை உச்சரிப்பாய்! உடனே, உன் தந்தை குணமாகி விடுவார். ஆனால், இதை ஒரேயொரு முறை ஒருவருக்குத் தான் உபயோகிக்க முடியும். அவருக்குப் பதிலாக, நீ அதை அருந்தினால் உனக்கு சம்பூர்ண ஞானம் உண்டாகும். அவை உலக நன்மைக்குப் பயன்படும்!" என்று கூறினார். "நன்றி, சுவாமி! ஆனால் இதை என் தந்தைக்குத்தான் பயன்படுத்துவதாக இருக்கிறேன்!" என்று கூறி அவரை வணங்கி மாதவன் விடை பெற, "நீ விரும்புவது கட்டாயம் நடக்கும்!" என்று அவர் அவனை வாழ்த்தினார். தன் வீட்டை அடையும் முன், யோகி தயானந்தாரிடம் சென்று அவருக்கு நன்றி கூற, அவர் "மாதவா! நீ வெற்றியுடன் திரும்பியது கண்டு மகிழ்ச்சி! நாளை சூரியோதயத்திற்குள் நான் இறந்து விடுவேன். ஆகையால் என்னிடமிருந்து முடிந்தளவு நீ கற்றுக்கொள்" என்றார். மாதவனும் "சரி"யென்று கூற அவர் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். நள்ளிரவானதும் மாதவன், அவரிடம் "சுவாமி உங்களிடமிருந்து அனைத்தையும் கற்க விரும்பு கிறேன். அதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா!" என்று கேட்டான். அதற்கு அவர், "உன்னிடத்தில் உள்ள கமண்டல நீரை எனக்கு அரு ந்தக் கொடுத்து, சஞ்ஜீவனி மந்திர த்தை உச்சரித்தால், நான் பல ஆண்டுகள் வாழ்வேன்!" என்றார். உடனே மாதவன் கமண்டல நீரை அவருக்குஅளித்து, மந்திரம் ஓத, அவரும் புத்துயிர் பெற்றார். அவரிடமிருந்து முழுவதையும் கற்றுக் கொண்டபின், ஊருக்குத் திரும்பிய மாதவனுக்கு ஒரு பேராச்சரியம் காத்திருந்தது. அவனுடைய தந்தை சஞ்ஜீவனி மந்திரத்தின் உதவி இன்றியே பூரண குணம் அடைந்து இருந்தார்.

(முற்றும்)



### மோகனதாஸ் கரம்சந்த் காந்தி



**மகாத்மா காந்தி** என்று அன்புடன் அழைக்கப்படும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் திகதி இந்திய நாட்டின் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் எனும் ஊரில் பிறந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக தலைமையேற்று நடத்திய தன் காரணமாக இவர் **"விடுதலை பெற்ற இந்தியாவின் தந்தை"** என்று அழைக்கப்படுகிறார். **சத்தியாக்கிரகம** என்றழைக்கப்பட்ட இவரது அறவழிப் போராட்டம் இந்தியநாட்டு விடுதலைக்கு வழி வகுத்ததுடன் மற்ற சில நாட்டு விடுதலை இயக்கங்களுக்கும் ஒரு வழி காட்டியாக அமைந்தது. இவரது பிறந்தநாள் இந்தியாவில் **காந்தி ஜெயந்தி** என்று கொண்டாடப்படுகிறது. இவரது 13 ஆவது வயதில் அக்கால வழக்கப்படி கஸ்தூரிபாய் என்ற பெண்ணை பெற்றோர் பால்ய விவாகம் செய்து வைத்தனர். இவர் பின்னர் தனது 18ஆம் வயதில் இங்கிலாந்து சென்று கல்விகற்று **பரிஸ்டர்** எனப்படும வழக்குரைஞர் பட்டம் பெற்றார். பகவத்கீதை, சமண சமய கொள்கைகள், லியோ டால்ஸ்டாயின் எழுத்துக்கள் போன்றவற்றால் ஈர்க்கப்பட்ட காந்தி, சத்தியம், அகிம்சை ஆகிய கொள்கைகளை தன் வாழ்நாள் முழுவதும் விடாமல் கடைபிடித்தார். வாரத்திற்கு ஒருநாள் மௌன விரதம் மேற்கொள்வார். காந்திக்கு **"மகாத்மா"** என்னும் பட்டம் அளித்தவர் **இரவீந்திரநாத் தாகூர்.** காந்தி குஜராத்தி மொழியில் எழுதிய சுயசரிதை, **சத்திய சோதனை** என்ற பெயரில் தமிழ் மொழியிலும் An Autobiography: The Story of My Experiments with Truth என்ற பெயரில் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 1947 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி அன்று காந்தியைக் கொல்வதற்காக சதிமுயற்சி இடம்பெற்றது. ஆனாலும் அன்று அவர் உயிர் பிழைத்தார். காந்தி இறப்பதற்கு முந்திய தினம் வியாழக்கிழமை அவர் அணு ஆயதங்களைப் பற்றி இந்திராகாந்தியிடம் கூறியது: "அணுகுண்டை ஒருங்கே அமெரிக்கா தவிர்க்க வேண்டும். அகிம்சா வழிப்போராட்டம் ஒன்றை மட்டும் அணுகுண்டுகளால் அழிக்க முடியாது! மற்றும் ஒரு சமயம் அகிம்சா இயக்கம் ஒன்று தான் மனித இனத்தின் கைவசமுள்ள மாபெரும சக்தி பெற்ற ஓர் ஆயுதம். பேரழிவுச் சக்தியுடைய எந்த யுத்த ஆயுதத்தையும் விட பெரியது அது!" என்று சொல்லியிருக்கிறார். அடுத்த தடவை ஜனவரி 30 ஆம் திகதி மாலை ஆப்தே, **கோட்சே** இருவரும் கைத் துப்பாக்கியை மறைத்துக்கொண்டு, காந்தியின் பிராத்தனை மைதானத்தில் நடமாடிக்கொண்டிருந்தனர். அன்று கோட்சே வெற்றி அடைந்தான். காந்தியைக் கொன்ற சதிகார னாய்ச் சரித்திரத்தில் இடம்பெற்றான். 1948 மே 27 ஆம் திகதி **நாதூரம் கோட்சே,** ஆப்தே இருவரும் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு நவம்பர் 15 ஆம் திகதி துக்கிலிடப்பட்டனர்.

01.2015
30

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1648 - எண்பதாண்டுப் போர்: நெதர்லாந்துக்கும் ஸ்பெயினுக்குமிடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் உடன பாடாகியது.
- 1649 - முதலாம் சார்ல்ஸ் மன்னன் தூக்கிலிடப்பட்டான.
- 1649 - பொதுநலவாய இங்கிலாந்து என்ற குடியரசு அமைக்கப்பட்டது.
- 1649 - இளவரசர் சார்ல்ஸ் ஸ்டுவேர்ட் இரண்டாம் சார ல்ஸ் தன்னை இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் மன்னனாக அறிவித்தான். எனினும் எவரும் அவனை அங்கீகரிக்கவில்லை.
- 1933 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் ஜனாதிபதி யாக பதவியேற்றார்.
- 1948 - இந்தியத் தலைவர் மகாத்மா காந்தி இந்துத் தீவிர வாதியான நாதுராம் கோட்சேயினால் படுகொலை செய்யப்பட்டார்.
- 1964 - ரேஞ்சர் 6 விண்கலம் ஏவப்பட்டது.
- 1972 - பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பிலிரு ந்து விலகியது.
- 2006 - தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் 5 பேர் மட்டக்களப்பு, வெலிக்கந்தையில் கடத் தப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1882 - பிராங்கிளின் ரூஸ்வெல்ட், 32ஆவது ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர (இ. 1945)
- 1910 - சி. சுப்பிரமணியம், இந்திய அரசியல்வாதி (இ. 2000)

**இறப்புகள்**

- **1948 - மகாத்மா காந்தி,** (பி. 1869)
- 1874 - இராமலிங்க அடிகளார், ஆன்மிகவாதி (பி. 1823)

**சிறப்பு நாள்**

இந்தியா - தியாகிகள் நாள்
உலக தொழுநோய் ஒழிப்பு நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

...முடிவில் தாய் யானை, குட்டி யானை இரண்டும், துதிக்கையை தூக்கி ரஜினியை ஆசீர்வதித்துவிட்டுப் போகும். அப்போது தன் தாயே தன்னை ஆசீர்வதிப்பதாக எண்ணி மகிழ்வார், ரஜினி. சினிமா தியேட்டரில் யானை இந்தப் படத்தில் ரஜினி, யானைக குட்டி சம்பந்தப்பட்ட அத்தனை காட்சிகளும் கலகலப்பானவை.

ரஜினியிடமிருந்து தப்பி ஒரு சினிமா தியேட்டருக்குள் நுழையும் யானைக்குட்டி, அங்கே திரையில் **"நல்ல நேரம்"** படத்தில் யானைகள் வருகிற காட்சியை பார்த்து திரையை கிழிப்பது, பிறகு ரஜினி வந்து குட்டி யானையை அடக்குவது போன்ற காட்சிகளை குழந்தைகள் குதூகலமாக ரசித்தார்கள். இளையராஜா இசையில் **"அப் பனே அப்பனே பிள்ளை யாரப்பனே", "நதியோரம்", "அம்மா நீ சுமந்த பிள்ளை"** போன்ற பாடல்கள் சூப்பர் ஹிட டாக அமைந்தன.

**சிறுத்தை**

இந்தப் படத்தில் சிறுத்தை ஒன்றைசர்வசாதாரணமாக தோளில தூக்கிப் போட்டபடி நடப்பார், ரஜினி.

இந்தக் காட்சி படமாக்கப்பட்ட போது, மிருகங்களின் குணம் ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு மாதிரி இருக்கும். குறிப்பாக சிறுத்தை விடயத்தில் நாம் ரொம்ப எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எனவே "டூப்" போட்டுக் கொள்ளுங்கள் என்று ரஜினியிடம், மிருகங்களை பழக்கும் "மாஸ்டர்" கூறினார்.

ஆனால் ரஜினியோ, "டூப்" போடவில்லை. அவராகவே சர்வ சாதாரணமாக சிறுத்தையை தோளில தூக்கிப்போட்டுக்கொண்டு நடந்து போனார். சாதாரணமாக, இரண்டு பேர் சேர்ந்து தூக்கும் அளவுக்கு எடை கொண்டது அந்த சிறுத்தை.



**யானைகளுடன் ரஜினி நடித்த "அன்னை ஓர் ஆலயம்"**

அதை, தன்னந்தனி ஆளாக அதுவும் அநாயாசமாக ரஜினி தூக்கியதைப் பார்த்து, படப்பிடிப்பில் இருந்த அத்தனை பேரும் ஆச்சரியத்தில் திகைத்துப் போனார்கள்.

19-10-1979 அன்று **"அன்னை ஓர் ஆலயம்"** வெளியாயிற்று. ரசிகர்களின் கூட்டத்தை சமாளிக்க முடியாமல் திரையரங்குகள் திணறின. படம் நூறு நாட்களைத் தாண்டி ஓடியது. இதே படம் **"மா"** என்ற பெயரில இந்தியிலும் தயாரிக்கப்பட்டது ரஜினியின் ஆரம்பகாலப் படங்களில் பெரிய வெற்றிப் படம் **"பில்லா."** இதில், இரட்டை வேடங்களில் பிரமாதமாக நடித்தார். ரஜினியை முழு ஆக்ஷன் ஹீரோவாக வெளிப்படுத்திய படம் இது.

**கதை**

சர்வதேச கடத்தல்காரர்களில் ஒருவனான பில்லா (ரஜினி) அடிதடிக்கு அஞ்சாதவன். எத்தனை அசகாய போலீசாக இருந்தாலும் பில்லாவை நெருங்க முடியவில்லை. அந்த அளவுக்கு சாமர்த்தியத்திலும் வல்லவனாக இருக்கிறான் இந்த பில்லா. சென்னை நகர போலீஸ் டி.எஸ்.பி. அலெக்சாண்டர் (பாலாஜி), பில் லாவை பிடிப்பதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு செயற்படுகிறார. இதற்கிடையே சர்வதேச போலீஸ் அதிகாரி (மேஜர் சுந்தர்ராஜன்) சென்னை வருகிறார். சர்வதேச அளவில் பிரபலமான கடத்தல்காரர்கள் அத்தனை பேரும் தங்கள் தொழில் தொடர்பான ஒரு "மீட்டிங்"குக்காக சென்னைக்கு வந்திருப்பதை கூறி, போலீஸ் வட்டாரத்தை உஷார்படுத்துகிறார்.

பில்லாவிடம் விசுவாசமாக இருந்த ஜானி என்ற இளைஞனுக்கு, கடத்தல் வாழ்க்கை அலுத்துப் போகிறது. அவன் பில்லாவுக்கு "டிமிக்கி" கொடுத்துவிட்டு காதலியுடன் வெளிநாட்டுக்கு தப்பி ஓட முயற்சிக்கிறான். இதை மோப்பம் பிடித்து விட்ட பில்லா, அவனது பயணத்தை தடுப்பதுடன் உயிரையும் நிறுத்திவிடுகிறான்.

**பழிக்குப்பழி**

இதனால் வெகுண்டெழுந்த அவன் காதலி (பிரவீணா) தன்னை யாரென்று காட்டிக்கொள்ளாமல் பில்லாவை சந்திக்கிறாள். அவனை தனது வசீகரப் புன்னகையில் மயக்கியபடியே போலீசுக்கும் ரகசிய தகவல் கொடுத்துவிடுகிறாள்.

போலீஸ் டி.எஸ்.பி. தலைமையில் ஒரு போலீஸ் பட்டாளமே பில்லா தங்கியிருந்த ஓட்டலை சுற்றி வளைக்கிறது. ஆனால் பில்லா அந்தப் பெண்ணையே தனக்குப் பாதுகாப்பாக பயன்படுத்தி, தப்பித்து விடுகிறான். அதோடு அந்தப் பெண்ணையும் கொன்று விடுகிறான். ஜானியின் தங்கை ராதாவுக்கு (ஸ்ரீபிரியா) இந்த தகவல் தெரிய வர, அவள் தனக்கு வேண்டிய ஒரு கராத்தே மாஸ்டர் மூலம் "பில்லா"வின் கூட்டத்தில் சேருகிறாள்.

பில்லா அவளை நம்பத் தொடங்கிய நேரத்தில் அவள் கொடுத்த ரகசியத் தகவல் போலீசை எட்டுகிறது. இம்முறை "பில்லா"வால் தப்ப முடியவில்லை. போலீசின் துப்பாக்கி, பில்லாவைத் துளைக்கிறது. அரைகுறை உயிருடன் ஆற்றில் விழுந்து அப்போதைக்கு தப்பிக்கும் பில்லா, கடைசியில் "டி.எஸ்.பி" அலெக்சாண்டரின் காரில் ஏறிக்கொண்டு, அவரையே மிரட்டி தனது இருப்பிடத்துக்கு கொண்டு விடச்சொல்கிறான்.

*(தொடரும்)*

# கருவாச்சி காவியம்





## வைரமுத்து- 63

...காசு குடுத்துக் கூப்பிட்டுப் போனாலொழிய காளையன் கெழவனுக்கு அழுகுறதுக்கு ஆள் இல்ல அன்னஞ்சியில.

கண்ணுல வெங்காயத்தப் புழிஞ்சு விட்டாலும் கண்ணீர் வராது யாருக்கும். அழுகுறதுக்கு முகாந்திரமோ லாயக்கோ இல்லாத சாவு கெழவன் சாவு. காளையன் கெழவன் மாதிரி கஞ் சப்பய சில்லாவுலயே இல்லேன்னு செல்லம்பட்டிப் பட்டயத்துல தைரியமா எழுதிப் போடலாம்.

செத்தா தன்னக் கேக்காமச் செலவழிச்சுப் புடுவாங்களேன்னுதான் தொண்ணுத்தஞ்சு வயசுல ஒசுரக் கையில புடிச்சு உக்காந்திருக்கான் கெழவன்னு ஊர்ல பேசுவாக.

சொத்து விரிய விரிய சுருங்கிப் போச்சு கெழவனுக்கு.

ஒரு மனுசன் கஞ்சப்பயலா இருக்கறதுனால பணக்காரனாகிறானா..? பணத்தைக் காப்பாத்தக் கஞ்சப் பயலாகிறானா? முந்துனது முட்டையா கோழியாங்கிற மாதிரி பதிலுக்குச் சிக்காத கேள்வி இது.

காளையன் கெழவன் அப்பப்ப ஊருக்குள்ள மூக்குப் பொடி கடன் குடுக்கிறதும் உண்டு.

ஒரே ஒரு நிபந்தனதான் . பொடிய அவர்தான் குடுப்பாரு. திரும்பி அவரே எடுத்துருவாரு. அதுல ஒரு சூட்சுமம் வச்சிருந்தாரு.

இடுப்பு வேட்டியில முடிஞ்சு வச்சி



ருப்பாரு பொடி டப்பாவ.

யாரச்சும் கடன் கேட்டா இடுப்புல யிருந்து கிட்னியவே எடுக்குற மாதிரி நிதானமா எடுப்பாரு.

சுட்டு வெரல [illegible] செலுத்தி சுட்டுவிரல் நகத்துல என்ன வருதோ அத அப்படியே எடுத்து எதிராளிக்குக் குடுத்திட்டு விரல்ல ஒட்டியிருக்கிற மிச்சப் பொடியத் தன் மூக்குல மாத்திச் செலுத்திச் சந்து பொந்தெல்லாம் இழுக்கிடுவாரு. கடன் குடுத்த பொடிய அப்பறம் வசூலிப்பாரு பாருங்க.

அங்கதான் இருக்க கெழவனோட கெட்டித்தனம்.

இவரு பொடியக் கடன் குடுக்கறது சுட்டு விரல் நகத்துல. வசூலிக்கிறது கட்டை வெரல் நகத்துல. அதுக்குன்னே கட்டை வெரல் நகத்த கெடா கொம்பு வளத்த மாதிரி வளச்சு வச்சிருப்பாரு.

வாழை மட்டையிலோ டப்பாவுலயோ கட்டை வெரல் நகத்த நொழைச்சு ஒரு எம்பு எம்பி அள்ளுனாருன்னா சல்லிக் கட்டுக்காள கொம்புல மண்ணக் குத்தி ஒரு நெம்பு நெம்புமா இல்லையா அப்படி அள்ளிப்புடும் அள்ளி.

அது பொடிக்கு அவர் வசூலிக்கிற ஒரு பொடிவட்டி. அப்படித்தான் உள்ளூர்ல ஒரு எழவு வீட்டுக்குப் போயிருந்தாரு காளையன்கெழவன்.

போனவரு பொணத்து நெத்தியில இருந்த கால்ரூவாயப் பாத்துட்டு அதக் கொண்டாங்கப்பா இந்தா அரரூவா இதை வைங்கன்னாரு எழவு வீடே எந்திரிச்சு உக்காந்திருச்சு.

இதென்னப்பா இது கூத்தாயிருக்கு? சாயம் போகாதுன்னு சொல்லி வெள்ள வேட்டிய வித்துப்புடற வினயமான ஆளு.

கால்ரூவா எடுத்துட்டு அரை ரூவாயத் தர்ராறே. இன்னக்கிப் பொளந்து கட்டப் போகுதுடா மழைன்னு வந்த சனம் பேசுது.

எங்கிட்டிருந்து மழை பெய்யும்? ஒரு செல்லாத அரை ரூபாயப் பொணத்துக்கு வித்து அதிலயும் ஒரு கால் ரூவா லாபம் பாத்த காளையன் கெழவனக் கண்டு இறங்கி வந்த மேகம் திரும்பப் போயிருமா இல்லையா?

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதவி ஆசிரியர்கள் நியமனம் மார்ச் மாதம் வழங்கப்படும்

## 3021 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க கல்வி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

**பெருந்தோட்ட பாடசாலைகளுக்கான 3 ஆயிரத்து 21 உதவி ஆசிரியர் நிய மனம் மார்ச் மாதம் அளவில் வழங்க ப்படவுள்ளதாக இராஜாங்க கல்வி அமைச்சர் வேலுசாமி இராதா கிருஸ் ணன் தெரிவித்தார். இராஜாங்க கல்வி அமைச்சின் காரியாலயத்தில் பரீட்சை கள் ஆணையாளருடன் நேற்று முன்தி னம் புதன்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்தே இந்த தகவலை அவர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில், கடந்த வருடம் நடைபெற்ற பெருந் தோட்ட உதவி ஆசிரியர்களுக்கான போட்டி பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி அளவில் வெளியிடப்படுமெனவும் பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் டபிள்யு.எம்.என்.ஜே. புஸ்பகுமார தன்னிடம் குறிப்பிட்டார் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், பரீட்சை முடிவுகள் வெளியான பின்பு 10 நாட்களில் தெரிவு செய்யப்பட்ட 9 ஆயிரத்து 100 பேருக்கு நேர்முகத் தேர் வுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும். நேர்முக பரீட்சையில் தெரிவு செய்யப்படும் 3 ஆயிரத்து 21 பேருக்கு நியமனங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெ றும்.

அநேகமாக எதிர்வரும் மார்ச் மாதம் அளவில் இந்த நியமனங்களை வழங்கி வைக்க எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த போட்டி பரீட்சையை பொறுத்த வரையில் 20 ஆயிரம் பேர் இதற்காக விண்ணப்பித்திருந்தார்கள்.

அவர்களில் 14 ஆயிரம் பேர் பரீட்சைக்கு தோற்றியுள்ளார்கள். அவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் 9 ஆயிரத்து 100 பேருக்கு நேர்முகத் தேர் வுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப் படவுள்ளது. இதில் எந்த விதமான அரசியல் தலையீடும் இருக்காது. தகுதி அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

எனவே, பரீட்சைக்கு தோற்றியவர்கள் யாரும் தரகர்களிடம் செல்ல வேண்டாம். அதற்கு காரணம் கடந்த காலங்களில் எனது பெயரை பயன்படுத்தி மலையக பகுதிகளில் ஒரு சிலர் பணம் பெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

அவர்கள் அனைவரையும் கைது செய்து உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளேன். இந்த ஆசிரியர் நியமனத்தை பயன்படுத்தி ஒரு சிலர் ஏமாற்று வேலைகளில் ஈடுபட லாம். அவ்வாறானவர்களிடம் கவனமாக நடந்து கொள்ளுங்கள். தயவு செய்து பண ததை கொடுத்துவிட்டு வந்து என்னிடம் முறை ப்பாடு செய்ய வேண்டாம். தகுதியான அனைவருக்கும் பெற்ற புள்ளிகளின் அடிப்ப டையில் நிய மனம் வழங்கப்ப டும். இதன்படி, மத் திய மாகாணத்துக்கு ஆயிரத்து 84 பேரும் ஊவா மாகாணத்து க்கு 996 பேரும் சப் ரகமுவ மாகாணத் துக்கு 772 பேரும் மேல் மாகாணத்து க்கு 97 பேரும் தென் மாகாணத்திற்கு 67 பேரும் வடமேல் மாகாணத்துக்கு 5 பேருமாக மொத்த மாக 3 ஆயிரத்து21 பேருக்கு இந்த ஆசி ரியர்நியமனம்வழங கப்படவுள்ளது.(இ-5)

## மெய்வல்லுநர் போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித் தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணி க்கு பாடசாலை கந்தசாமி ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள் ளது.

பாடசாலை அதிபர் திருமதி பிரதா கிரிதரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோம சுந்தரம் சுகிர்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஏழாலை மேற்கு கிராமசேவகர் சிதம்பரப்பிள்ளை பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ


## கூறுவிலை கோரல்

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள், சேவைகளுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. அச்சிடல்
2. வெற்றிக் கேடயங்கள், பதக்கங்கள்
3.காகிதாதிகள் எழுது பொருட்கள்
4. உணவு சிற்றுண்டி வகைகள்
5. பரீட்சை வினாத்தாள்கள் அச்சிடல்
6.Toner வகைகள்

கூறுவிலை கோரல் படிவங்களைக் கைதடி வீதி, மருதனார்மடம், சுன்னாகத்தில் அமைந்துள்ள மாகா ணக் கல்வித் திணைக்களத்தின் நிதிக்கிளையில் அலுவ லக நேரத்தில் 02.02.2015- 16.02.2015 வரை பெற் றுக் கொள்ளலாம்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.

(சி-9957)



## கட்டைவேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வரையறுக்கப்பட்டது)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான கூட்ட அறிவித்தல்

### கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

| தொ இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | காலம் | நேரம் காலை | கிளைப்பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 01 | அல்வாய் தெற்கு A | திரு.பா.பாலவரதன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | யா/சின்னத்தம்பி மகாவித்தியாலயம் |
| 02 | 02 | அல்வாய் தெற்கு மத்தி | திரு.வி.பிரதீஸ்குமரன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம் |
| 03 | 03 | கட்டைவேலி | திரு.பா.ஸ்ரீகுமார் | 08.02.2015 | மு.ப 10.00மணி | கிளைக்கட்டிடம் |
| 04 | 04 | கல்வத்தை | திருமதி ஸ்ரீ.எமெல்டா | 08.02.2015 | மு.ப 10.00மணி | யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை |
| 05 | 05 | கனுவில் | திரு.அ.தயாளன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | அரசடி பழைய காரியாலயம். |
| 06 | 06 | கரவெட்டி மேற்கு (அந்திரான்) | திரு.ச.ஸ்ரீதரன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | யா/வதிரி திரு இருதயக்கல்லூரி |
| 07 | 07 | கரவெட்டி கிழக்கு (தச்சந்தோப்பு) | திரு.இ.தயாகரன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | கிளைக்கட்டிடம். |
| 08 | 08 | கோவிற்கடவை | திரு.க.பாலகிருஸ்ணன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | யா/ஞானசாரியார் கல்லூரி |
| 09 | 09 | நெல்லியடி | திருமதி. ஞா.ஜெயாமேரி கொன்சி | 08.02.2015 | மு.ப 10.00மணி | யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் |
| 10 | 10 | நுகவில் | திருமதி.சு.தர்சினி | 08.02.2015 | மு.ப 10.00மணி | யா/.விக்கினேஸ்வரக்கல்லூரி |
| 11 | 11 | சந்திரா | திரு.பொ.கோகுலன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | நாமகள் சனசமூகநிலையம் |
| 12 | 12 | சண்டில் | திரு.செ.செல்வகுமாரன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | கிளைக்கட்டிடம் |
| 13 | 13 | துன்னாலை தெற்கு | திரு.க.சசிகரன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | குடவத்தை கிளைக்கட்டிடம். |
| 14 | 14 | கிளான் | திரு.ஸ்ரீ.குகதீப் | 08.02.2015 | மு.ப 10.00மணி | யா/துன்னாலை தெற்கு அ.த.க.பாடசாலை |
| 15 | 15 | வதிரி | திருமதி.க.சித்திரகுமாரி | 08.02.2015 | மு.ப 10.00மணி | யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை |
| 16 | 16 | யார்க்கரு | திரு.வ.நிதர்சன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | கிளைக்கட்டிடம். |
| 17 | 19 | துன்னாலை வடக்கு A | திரு.கு.நிசாந்தன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | வல்லியானந்தம் பாலர் பாடசாலை |
| 18 | 20 | துன்னாலை வடக்கு B | திரு.சு.சுவர்ணன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | யா/காசிநாதர் வித்தியாலயம். |
| 19 | 21 | அல்வாய் தெற்கு B | திரு.பா.குருபரன் | 08.02.2015 | மு.ப 10.00மணி | மனோகரா பாலர் பாடசாலை. |
| 20 | 23 | கிழவிதோட்டம் | திரு.ந.குமணதாஸ் | 08.02.2015 | மு.ப 10.00மணி | கிளைக்கட்டிடம் |
| 21 | 24 | இராசகிராமம் | திரு.இ.புவன்ராஜ் | 08.02.2015 | மு.ப 10.00மணி | இராசகிராமம் சனசமூக நிலையம் |
| 22 | 25 | வதிரி வடக்கு (டைமன்) | திரு.ச.பாலகுமார் | 08.02.2015 | மு.ப 10.00மணி | வதிரி தமிழ் மன்றம். |
| 23 | 30 | அல்லையம்பதி | திரு.இ.வேல்குமார் | 08.02.2015 | மு.ப 10.00மணி | அல்லையம்பதி பாலர் பாடசாலை |

சகல கிளைப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் 24.01.2015, 26.01.2015 இல் தபால் மூலம் கூட்ட அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க தகைமையுடையவர்களுக்கு அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெறாதவிடத்து இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(சி-9960)

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 30.01.2015

ஒப்பம்:- வீ.கே.அருந்தவநாதன்
கூ.அ.உ.ஆணையாளர், யாழ்.மாவட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடிகள் தொடர்பில் கணக்காய்வு செய்ய உத்தரவு!

அமைச்சர் சஜித் விடுத்தார்

**(கொழும்பு) வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல், நிதி மோசடி தொடர்பில் சுயாதீன கணக்காய்வு செய்ய அமைச்சர் சஜித் பிரேமதாஸ உத்தரவிட்டுள்ளார். இதற்கமைய இரண்டு சர்வதேச கணக்காய்வு நிறுவனங்கள் பரிசிலனையை இலவசமாக முன்னெடுக்கவுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.**

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸ அமைச்சின் செயலாளருக்கு வழங்கிய உத்தரவிற்கமைய பக்கச்சார்பற்ற முறையில் இந்த பரிசீலனை முன்னெடுக்கப்படவுள்ளது.

மேற்படி வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள 21 அரச நிறுவனங்களில் குறித்த பரிசீலனை முன்னெடுக்கப்படும். இதற்கமைய வீடமைப்பு அமைச்சின் கணக்காய்வினை ஆர்னஸ்ட் என்டி யங் என்ற நிறுவனமும் சமுர்த்தி அமைச்சின் கணக்காய்வினை பிரைஸ் வொட்டர் ஹவுஸ் குப்ஸ் என்ற நிறுவனமும் முன்னெடுக்கும்.

நல்லாட்சிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான நடவடிக்கை எடுத்து சட்டத்தின் முன் நிறுத்தப்படவுள்ளதாக வீட மைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

மேற்படி வீடமைப்பு அமைச்சின் கீழ் கட்டட நிர்மாண திணைக்களம் அரசு தொழிற்சாலைகள் ஒன்றினையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நகர வீடமைப்பு அதிகார சபை நான்கு அபிவிருத்தி நிறுவனம் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் இலங்கை அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனம் மற்றும் கட்டட நிர்மாண துறை சார்ந்த மூன்று நிறுவகங்களில் குறித்த கணக்காய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி அமைச்சின் கீழ் சமுர்த்தி ஆணையாளர் திணைக்களம, திவிநெகும கீழுள்ள சமுர்த்தி அதிகார சபை உள்ளிட்ட 3 நிறுவகங்களில் ஆய்வு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அரசாங்க ஊடகங்களின் கொள்கைகள் முற்றாக மாற்றப்பட வேண்டும்-சுனில்

(கொழும்பு)

அரசாங்க ஊடகங்களின் தலைமைகளை மாத்திரம் மாற்றாது, அதன் கொள்கைகளும் மாற்றப்பட வேண்டும் என்று சுதந்திர ஊடக மையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த கொள்கை மாற்றத்தின் போது அரசாங்கம் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று சுதந்திர ஊடக மையத்தின் அமைப்பாளர் சுனில் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் அரசாங்கம் மாறியுள்ள போது, அரசாங்க ஊடகங்களில் தகுந்த மாற்றங்களை காணமுடியவில்லை என்றும் சுனில் ஜெயசேகர மேலும் தெரிவித்தார். (இ-5)

## தேர்தலில் மகிந்த தோற்பார் என தெரிந்தே அவருடன் இணைந்தேன்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தோற்றாலும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீண்டும் வெற்றி பெறும் என மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ஊடக நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உதய கம்மன்பில இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து விலகி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்க தீர்மானித்தது குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த கம்மன்பில, மகிந்த ராஜபக்ஷ தோற்பார் என்பதை தெரிந்தே அவருக்கு ஆதரவு வழங்கியதாக தெரிவித்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 120 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 400 | 350 |
| தக்காளி | 200 | 250 | 180 | 200 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 120 | 100 | 120 | 100 |
| கரட் | 220 | 160 | 180 | 240 |
| பூசணி | 50 | 80 | 50 | 100 |
| புடோல் | 60 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 130 | 100 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 140 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 40 | 50 | 80 |
| பயற்றங்காய் | 150 | 100 | 140 | 120 |
| லீக்ஸ் | — | 250 | 270 | 300 |
| பீற்றூட் | — | 160 | — | 200 |
| கறிமிளகாய் | — | 300 | 300 | 240 |
| முருங்கைக்காய் | — | 800 | — | — |
| போஞ்சி | 180 | 200 | 180 | 150 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | — | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 40 | 60 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 45 | 35-40 |
| இராசவள்ளி | 120 | 120 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 120-140 | 140 | 220 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 268

டொறின் மன்மதநாயகம்




கிரி சிவராஜா




சக்தி வேல்

"மன்னா... ஆபத்து ..., ஆபத்து..."
"என்னய்யா ஆபத்து... என் அக்கவுண்டை யாராவது ஹேக் செய்து விட்டார்களா?"
"இல்லை மன்னா... பக்கத்து நாட்டு மன்னன் நம் மீது போர் தொடுக்க போகிறானாம்... ஸ்டேடஸ் போட்டு இருக்கிறான்..."
"என்னாது போரா... ? நாம் தான் அவன் போடும் எல்லா மொக்கை ஸ்டேடசுக்கும் லைக் போடுகிறோமே... பிறகு எதற்கய்யா போருக்கு வருகிறான்..."




"அவர் அந்தபுரத்தில் இருக்கும் இரண்டு ராணிகளுக்கு நீங்கள் ப்ரெண்ட் ரிக்வெஸ்ட் அனுப்பினீர்களாமே..."
"ப்ரெண்ட் ரிக்வெஸ்ட் அனுப்பினதுக்கு எல்லாமா போர்... பெரிய அக்கப்போராய் அல்லவா இருக்கிறது... அவ்வ்வ்...!!"

லோகிதா சிவலோகநாதன்




திலிபரன் தயீகன்

பொண்ணுங்க மழைல நனைஞ்சா சளி புடிக்கும்ன்ற பயத்தவிட..



மேக் அப் களஞ்சி உண்மையான முகம் தெரிஞ்சுடுமோன்னு தான் பயம் அதிகம்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரவாசிகளால் மறுக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வு திரும்புமா?



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளிலும் இரகசிய முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளின் பெயர் மற்றும் வழக்கு விபரங்களையும் கட்சித் தலைவர்கள் மற்றும் சிவில் தலைவர்கள் உள்ளடங்கிய தேசிய நிறைவேற்று சபைக்கு சமர்ப்பித்து இந்த நெடுங்காலப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் செயற்றிட்டத்தை ஆரம்பிக்கும்படி ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் அவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கிணங்க, இந்த விபரங்களைத் திரட்டி தேசிய நிறைவேற்று சபை உறுப்பினர்களின் கவனத்துக்கு சமர்ப்பிக்குமாறு சபையின் செயலாளர் திலக் ரணவிராஜவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என்று நம்பப்படுகிறது. போர்க்குற்ற- இனப்படுகொலை குறித்தான சர்வதேச சுயாதீன விசாரணைக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் இராணுவத்திடம் சரணடைந்த போராளிகள்- பொது மக்கள் பற்றியதான தரவுகள் இப்போது அவசியமாகிறது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் சரணடைந்தவர்களின் எண்ணிக்கையும் சமனா? என்கிற விவகாரம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது பல பிரதேசங்களில் மேற்கொண்ட விசாரணைகளில் கேள்விக்கு உட்படுத்தப்பட்டது.

கணவனை பிள்ளைகளை இராணுவத்திடம் ஒப்படைத்த பெண்கள் பலர், மகிந்த உருவாக்கிய எல்.எல்.ஆர்.சியிடம் தமது உறவுகள் எங்கே? என்று கேட்டுள்ளார்கள். தாங்களே சாட்சியென அப்பெண்கள் சொன்ன போது விபரங்களைப் பதிவுசெய்து ஜனாதிபதியிடம் ஒப்படைப்பது மட்டுமே தங்களுக்கு இடப்பட்ட அரச கட்டளை என்று ஆணைக்குழுவினர் நழுவிச்சென்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

உதாரணத்திற்கு சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். மக்களால் பெரிதும் அறியப்பட்டவர்களான புதுவை இரத்தினதுரை, க.வே.பாலகுமாரன் மற்றும் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் (சசிதரன்) போன்றவர்களின் மனைவியர், தமது கணவர்மார் எங்கே என்று இன்னமும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் போன்ற பலர், தமது உறவுகளை எங்கே தேடுவது என்பதறியாமல் சர்வதேச மன்னிப்புச்சபையிடமும் மனித உரிமைச் சங்கங்களிடமும் முறையிடுகின்றார்கள்.

எங்கே முறையிட்டாலும் தேடல் என்பது இங்கேதான் நிகழ வேண்டும். அதற்கு முன்னைய அரசும் குறிப்பாக கோத்தபாய ராஜபக்சவும் இணங்கவில்லை. உயிரோடு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர்ப்பட்டியலையாவது தாருங்கள் என்று கூட்டமைப்பின் தலைவர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் பல தடவைகள் அரசிடம் கோரிக்கை விடுத்தும், அதை விட சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டும், மகிந்த அரசு அசையவில்லை.

மனிதாபிமானப்போர்(?) தொடுத்து தமிழ் மக்களைப் படுகொலை செய்த முன்னைய அரசு, சிங்கள மக்கள் தம்மோடு இருக்கின்றார்கள் என்கிற வாக்குவங்கித் திமிரிலும் ஆசிய பொருண்மிய வல்லரசின் கடாட்சம் எப்போதும் இருக்குமென்கிற நம்பிக்கையிலும் பக்கத்து வீட்டுச் சுவாமிகளின் ஆசீர்வாத அரவணைப்பிலும் மூழ்கியிருந்தது.

ஆனால், நடந்து முடிந்த தேர்தலில் பெரும்பான்மையான சிறுபான்மைத் தேசிய இன மக்கள் மகிந்தவின் ஆட்சியை நிராகரித்துவிட்டார்கள். அத்தோடு போர் வெற்றியை வைத்து அடித்தட்டு மக்களை தொடர்ந்தும் ஒடுக்க முடியாது என்பதனை ஓரளவிற்கு சிங்கள மக்களும் உணர்த்தியுள்ளார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இப்போது காணாமற் போகடிக்கப்பட்ட மக்களின் சார்பாக தொடர் போராட்டங்களை ஓய்வின்றி நடாத்திவந்த மனோ கணேசன் அவர்களே, உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய இப்பிரச்சினையை தேசிய நிறைவேற்று சபை முன்கொண்டு சென்றுள்ளார் என்பது வரவேற்கத்தக்கது.

சரணடைந்த போராளிகளில் ஒரு பிரிவினர் 10-15 பேர் கொண்ட சிறுசிறு குழுக்களாக பெரிய படைத் தளங்களிலும் சிறிய நகர்ப்புற முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் கசிகின்றன.

சரணடைவின் சாட்சிகள் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதால் அது குறித்த விசாரணை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதே மனித உரிமை ஆர்வலர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

இவை தவிர 90 ஆயிரம் விதவைகள் வட-கிழக்கில் இருப்பதாக கூறப்படுகிறது. அந்த எண்ணிக்கை குறித்து மகிந்த அமைச்சர்கள் குறைந்த புள்ளி விபரங்களை முன்வைத்தார்கள். அது பற்றியதான சரியான தகவல்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதில் கொடுமையான விடயம் என்ன வென்றால் கணவன் உயிருடன் இருக்கின்றாரா? அல்லது கொல்லப்பட்டுவிட்டாரா? என்பதுகூட தெரியாமல் விதவைகள்போல் வாழும் பெருங்கூட்டம், இன்னமும் இந்தச் சமூகத்தில் இருக்கிறது.

அதுமட்டுமல்லாது புலனாய்வுப் பிரிவினராலும் காவல் துறையினராலும் தினமும் கண்காணிப்பிற்கு உள்ளாக்கப்படும் போராளிகள், சமூகத்திலிருந்து அன்னியமாகி வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்பட்டவர்களும் சபிக்கப்பட்ட பலியாடுகள்போல் இயல்பு வாழ்வு மறுக்கப்பட்டு மூன்றாம் தரப் பிரஜைகள் போல் வாழ்கின்றனர்.

கடந்த 5 ஆண்டுகளாக தமிழ் சமூகத்தின் பொதுவான இயங்குநிலை, படையதிகாரத்தினால் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வடமாகாண சபையின் அடிப்படையான தினசரி செயற்பாடுகளைக்கூட படையதிகாரி ஜி.ஏ.சந்திரசிறி கட்டுப்படுத்திய நிஜ வரலாறு நேற்று வரை நடந்தது. அபிவிருத்திக்கூட்டங்களில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. இது தொடராமல் இருக்க வேண்டுமாயின் மாகாண சபை இயக்கத்தில் ஆளுநரின் அதிகாரம் மேலோங்கக் கூடாது. அவர் மத்திய அரசிற்கு ஒரு செய்திகாவியாக இருப்பதே சிறப்பு. தமிழ் நாட்டில் இருப்பது போன்று குடியரசு தினத்தன்று ஆளுநரின் உரை இருந்தாலேபோதும்.

இதனை விட தமிழ்த் தேசிய இனம் ஒரு தேசம் என்கிற அங்கீகாரம் அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டு இணைந்த வட- கிழக்கு பிரதேசத்திற்கு சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஆனால், 13 ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலேயே தீர்வு முன்மொழியப்படுமென தனது வழமையான இந்திய மந்திரங்களை பிரதமர் ஓதினாலும் அதனைக்கூட ஏற்க மறுக்கும் பெருந்தேசிய இனவாத சக்திகள் நாட்டைப் பிரிக்க சூழ்ச்சி செய்கிறார் ரணில் என்று ஊளையிடத் தொடங்கிவிடும்.

அதிகாரவாசிகள் ஒன்றைச் சொல்வதும் கடும்போக்குவாதிகள் அதனை எதிர்ப்பதுமான ஒரு தரப்பு விளையாட்டால் தமிழினம் அழிக்கப்படுவதே வரலாறாகிவிட்டது.

இப்போது யாழ்.குடாவில் என்ன நடக்கிறது? பெரும் வல்லரசுகள் தமது அணுக் கழிவுகளை கடலில் கொட்டி இயற்கை அனர்த்தங்கள் விளைவதற்கு துணைபோவதுபோன்று மின் நிலைய எண்ணெய்க் கழிவுகள் யாழ். கிணறுகளை பாழுங்கிணறுகளாக மாற்றும நிலைகுறித்து விடுக்கப்படும் எச்சரிக்கை கவனிப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும். திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் நகர்வா இது? என்கிற கேள்வியும் எழுகின்றது.

சுன்னாகம் அனல் மின் நிலையத்தின் கழிவு நீர் பிரச்சினையை அனைவரும் அறிந்திருப்பீர்கள். அதன் தீவிரத் தன்மை தற்போது அதிகமாகி வருகின்றது நிலத்தடியில் கழிவு நீரின் பரவுகை அதிகரித்துள்ளது. இன்னும் சில நாட்களில் இதன் ஆபத்து பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தப்போகின்றது என்கிற எச்சரிக்கை விடப்படுகிறது.

இது குறித்த விழிப்புணர்வுப்போராட்டங்களில் அம்மண்ணில் வாழும் எழுத்தாளர்களும் கலந்துகொள்ள வேண்டுமென்கிற அமைப்பு சமூக வலைத்தளங்களில் பரிமாறப்படுகிறது. புலம்பெயர் மக்களால் சர்வதேச மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சில நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அறிகின்றோம்.

இவை தவிர நிலத்திற்கும் மக்களுக்கும் இடையிலான பிரதான முரண்பாடு குறித்து பேச வேண்டும். திட்டமிட்ட குடியேற்றங்கள் ஊடக அப்பிரதேசங்களில் வாழும் மக்களின் நில உரிமை மறுக்கப்பட்டது கிழக்கு மாகாண அரசியல் வரலாற்றின் இருண்ட பக்கம். ஆட்சி மாற்றத்திற்கு வாக்களித்த சம்பூர் மக்கள் இன்னமும் இடைத்தாக்கல் முகாம்களில் வாழ்வது குறித்து இந்தியா சென்று திரும்பிய மங்கள சமரவீராவிடம் கேட்க வேண்டும்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களிலும் இடைத்தங்கல் முகாம்களிலும் தமிழ் நாட்டிலும் ஏதிலிகளாக வாழும் தமிழ் மக்களின் குடியிருப்பு நிலங்கள் அடாத்தாக அபகரிக்கப்பட்டது அண்மைக்கால வரலாறு. இதுவரை நடைமுறையிலுள்ள மக்களின் உரித்துக் காணிகளை தேசிய பாதுகாப்பு என்கிற போர்வையில் எழுந்தமானமாகக் கைப்பற்றும் அதிகாரத்தைக் கைவிடுமா இப்புதிய அரசாங்கம்?

17 ஆவது திருத்தச்சட்டத்தைவிட தமிழ் பேசும் மக்களின் நிலம் சார்ந்த அடிப்படை உரிமையை பாதுகாக்க வேண்டியது அவசியம். இடம்பெயர்ந்துசென்றவர்களை அவர்களின் சொந்த இடத்தில் குடியமர்த்துவோம் என்பதற்கு இப்புதிய அரசு உத்தரவாதம் அளித்தால் தமிழ் நாட்டில் அகதி அந்தஸ்து இல்லாமல் ஏதிலிகளாக வாழும் ஈழ மக்களை அவர்கள் விரும்பினால் அழைத்துவரலாம்.

ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் நீண்டகால அவலவாழ்வினை குறைந்த பட்சம் ஏனைய மக்கள் அனுபவிக்கும் இயல்பு வாழ்வு போல மாற்றுவதற்கு 11 பேர் கொண்ட தேசிய நிறைவேற்று சபை ஈடுபடுமா? என்று கேட்கத் தோன்றுகிறது. இதில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளான இரா.சம்பந்தன், மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் போன்றோரின் சமரசமற்ற பங்களிப்பு அவசியமாகிறது.

குறிப்பாக இலங்கை வரலாற்றில் சொந்த வீடற்று நிலமற்று, 150 வருடங்களிற்கு மேலாக அகதிகள் போல் வாழும் மலையக தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை குறித்து தமிழ்த் தலைமைகள் அக்கறை செலுத்த வேண்டும். தேர்தல் காலத்து வாக்குறுதிகள் வழமை போன்று மலைமுகட்டின் மீது வீசும் காற்றோடு கரைந்து விடக்கூடாது.

அதேவேளை இழந்த காணிகளை மீட்கும் மக்கள் போராட்டங்களும் யாழ். மாவட்டத்தில் ஆரம்பமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. பேச்சும் போராட்டமும் என்கிற சமாந்தரவகைப்பட்ட உத்தியினைக் கையாள்வதே சரியானது போல் தெரிகிறது.

ஐ.நா. தீர்மானத்திற்கு இடைக்கால ஓய்வு வழங்கும் திட்டம் குறித்து பரிசீலிக்க வேண்டுமென அமெரிக்க இராஜதந்திரிகள் இப்போது பேசத் தொடங்கிவிட்டார்கள்.


ஆகவே, ஆட்சி மாற்றத்தின் மறுபக்கம் குறித்து விவாதிக்காவிட்டால் வட- கிழக்குப் பிரச்சினையை வடக்குப் பிரச்சினை என்று குறுக்கியதுபோல இது நல்லாட்சிப் பிரச்சினை என்று ஒட்டுமொத்தமாக பூசி மெழுகி விடுவார்கள்.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களின் தேவைகளை ஜே.வி.பி, உறுமய பூர்த்தி செய்கின்றன

## புலம்புகிறது தேசிய சுதந்திர முன்னணி



(கொழும்பு)

**ஜே.வி.பி. கட்சியும், ஜாதிக ஹெல உறுமய கட்சியும் புலம்பெயர் தமிழர்களின் தேவைகளை பூர்த்தி செய்து வருவதாக தேசிய சுதந்திர முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது. குமரன் பத்மநாதனை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி வழக்குத் தொடர வேண்டுமென விடுக்கப்படும் கோரிக்கையானது, தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பின் தேவையாகும் என தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் முஸாம்மில் தெரிவித்துள்ளார்.**

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மறைவிற்கு பின்னர் குமரன் பத்மநாதனே புலிகளின் தலைவராக கடமையாற்றி வந்தார்.

குமரன் பத்மநாதனை கைது செய்த அரசாங்கம், பல்வேறு புலனாய்வு நடவடிக்கைகளுக்காக அவரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும்.இதன் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு நான்காக பிளவடைந்தது.

கே.பி. கைது செய்யப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தின் சார்பில் ஒரு உளவாளியாக செயற்பட்டார்.

திறந்த நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்து கேள்வி எழுப்புவதன் மூலம் புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் அம்பலமாகக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. அவ்வாறான நடவடிக்கைகள் நியாயமானது. புலனாய்வுத் தகவல்களை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் புலிகளின் சர்வதேச வலையமைப்பிற்கே அதிகளவில் காணப்படுகின்றது.

பிளவடைந்த புலிகளின் புலம்பெயர் இயக்கங்கள் இணைந்து செயற்பட வழியமைக்கும் எனவும் இதனை மகிந்த அரசாங்கம் முற்றாக தடுத்து வந்திருந்தது. ஆனால் தற்போது அதற்கான தடைகள் அற்ற சூழ்நிலை காணப்படுவதாகவும் முஸாம்மில் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். (இ-5)

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அரசியலிலிருந்து விலகுவேன்

## முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல தெரிவிப்பு



தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை நிரூபித்தால் அரசியலிலிருந்து ஓய்வுபெறுவேன் என முன்னாள் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மஹிந்தோதய தொழில்நுட்பக் கல்லூரி கட்டுமானப் பணிகள் மூலம் பெருந்தொகையான பணம் மோசடி செய்யப்பட்டதாக முன்வைக்கும் குற்றச்சாட்டு அடிப்படையற்றது.

என்னை மோசடிக்காரன் என கல்வியமைச்சர் குறிப்பிட்டமை முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இதனை அவர் நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபித்தால் மக்கள் மத்தியில் பொது மன்னிப்புக் கோரி அரசியலிலிருந்து விடைபெறுவேன். தமக்கெதிராக சுமத்தியுள்ள பொய்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் மான நட்ட வழக்குத் தொடரப்போவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பொலிஸ் இடமாறுதல்கள் இரத்து மைத்திரி அரசாங்கம் தீர்மானம்

முன்னைய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் நடைபெற்ற பொலிஸ் இடமாற்றங்களை இரத்துச் செய்ய மைத்திரி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவருக்குத் தேவையான முறையில் பொலிஸ் உயரதிகாரிகள் தொடக்கம் சாதாரண உத்தியோகத்தர்கள் வரை இடமாற்றம் செய்யப்பட்டனர்.

தேர்தல் அண்மித்த நிலையிலும் குறித்த இடமாற்றங்கள் நடைபெற்றிருந்தன. எனினும் குறித்த இடமாற்றங்களின் போது உரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று பரவலாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் முன்னைய அரசின் விருப்பு, வெறுப்புகளின் பேரில் மேற்கொள்ளப்பட்ட பொலிசாரின் இடமாற்றங்களை இரத்துச் செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முறைகேடாக இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் எதிர்வரும் இரண்டொரு வாரங்களுக்குள் தமது முன்னைய பணியிடங்களுக்கு மீள அழைக்கப்படவுள்ளதாக தெரிய வந்துள்ளது. (இ-5)

# பொதுத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு முன்னாள் அமைச்சர்கள் பலருக்கு இல்லை

பொதுத் தேர்தலில் தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிடைக்காது என தெரிய வருகிறது.

இவர்களில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, நிஷாந்த முத்துஹெட்டிகம, ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ, அருந்திக்க பெர்னாண்டோ, விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா), துமிந்த சில்வா, ரோஹித அபேகுணவர்தன, சரண குணவர்தன ஆகியோர் முக்கியமான நபர்கள் என கூறப்படுகிறது.

இவர்களுக்கு எதிராக ஊழல், மோசடிகள் உட்பட ஏனைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதால், தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என தெரிய வருகிறது.

இந்த நிலையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தன்னிடம் உறுதியளித்திருப்பதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

இது பற்றி அறிந்து கொண்ட ஏனைய மோசடி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை பெறுவதற்காக அமைச்சர் ராஜித சேனாரத்னவின் ... தெரிவிக்கின்றன. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## மூன்று இடையூறுகள்

ஒரு பெரியவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் சொன்னார். “இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி. ஒரு நல்லவன்– ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி. இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி” என்றார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இதற்கு என்ன விளக்கம்? என்றேன்.

அதன்பின் அவர் விளக்கம் கொடுத்தார்.

ஒரு ஒற்றையடி பாதையில் எதிரும் புதிருமாக இரண்டு பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் பாதையை விட்டு விலகாமல் நேராக வந்தால் மோதிக் கொள்ள வேண்டியது தான். எதிரும் புதிருமாக வந்து கொண்டிருக்கும் இவர்கள் இருவருமே நல்லவர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அவர் என்ன செய்வார்? இவர் நேராக பாதையில் வரட்டும் என்று அவர் வரப்பை விட்டு விலகி கீழே இறங்கி நடந்து வருவார்.

இவர் என்ன செய்வார்? அவர் பாதையில் வரட்டும் என்று கீழே இறங்கி நடந்து வருவார்.

அவருக்காக இவரும் இவருக்காக அவரும் விட்டுக் கொடுக்கிறார்கள். ஆக அவர் வரும் பாதையையொன்று. இவர் போகும் பாதையொன்று. நடுவில் ஏற்கனவே உள்ள பாதையொன்று மொத்தம் மூன்று.

அது தான் இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி என்று சொல்வது.

ஒரு நல்லவன்– ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி. இது எப்படி என்றால்... ஒரே வரப்பில் எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேரில் ஒருவன் நல்லவன். ஒருவன் கெட்டவன்.

நல்லவன் வரப்பை விட்டு கீழே இறங்கி எதிரில் வருபவனுக்கு வழி விடுவான். கெட்டவன் வரப்பை விட்டு இறங்கவேமாட்டான். அவன் இறங்கட்டுமே. நாம் எதற்கு இறங்க வேண்டும் என்று இருந்து விடுவான். இப்பொழுது இரண்டு பாதைதான் உண்டு. இதுதான் ஒரு நல்லவன் – ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி என்று சொல்வது.

இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழியென்று சொல்வது எப்படித் தெரியுமா?

ஒரே வரப்பில் எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேருமே கெட்டவன் என்று வைத்துக் கெள்ளுங்கள். இரண்டு பேருமே வரப்பை விட்டு கீழே இறங்க மாட்டார்கள்.

இவன் இறங்கட்டுமே என்று அவனும் அவன் இறங்கட்டுமே என்று இவனும் இருப்பார்கள்.

இதுதான் கெட்டவனுக்கு ஒரே வழி என்று சொல்வது. இப்பொழுது தான் அந்த பெரியவர் சொன்ன வார்த்தைக்கு அர்த்தம் புரிந்தது. அவரே இன்னொரு விடயத்தையும் சொன்னார்.

அதாவது நமக்கு வரும் இடையூறுகள் மூன்று வகை என்றார். அது எப்படி என்று கேட்டேன். நாம் ஒரு காரியத்தை தொடங்குகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு மூன்று வகையில் இடைஞ்சல் வரலாமாம். நம்மால் வரும் இடைஞ்சல் ஒரு வகை. இது ஆத்யாத்மிகம். நம்மைத் தவிர மற்றவர்களால் வரும் இடைஞ்சல் ஒரு வகை–இது ஆதிபௌதிகம்.

இயற்கையாக வரும் இடைஞ்சல் மூன்றாவது ரகம். அதற்கு பெயர்–ஆதிதெய்வீகம்.

நமக்குப் பிடித்த ஒரு சினிமாப் படத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த நேரம் பார்த்துக் நமக்கு வயிறு வலிக்கிறது. இது நம்மிடம் இருந்தே வரும் இடைஞ்சல்.

ஆர்வமாக அந்தப் படத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

அந்தச் சமயம் பார்த்து பக்கத்திலிருப்பவர்கள் சத்தம் போடுகிறார்கள். இது மற்றவர்களால் வரும் இடைஞ்சல்.

அந்த சமயம் பார்த்து இடி–மின்னல்–பூகம்பம்... கரன்ட் போய் விடுகிறது. இது இயற்கை உண்டு பண்ணும் இடைஞ்சல்.

இப்படி மூன்று வகையாகவும் இடைஞ்சல் வரக்கூடாது என்பதற்காகத்தான் பெரியவர்கள் சாந்தி–சாந்தி–சாந்தி என்று மூன்று தடவை சொல்கிறார்கள். இந்த மூன்று இடைஞ்சலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று அர்த்தம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டுத் தலைவர்கள் என்பதற்கப்பால் ஒபாமா-மோடி உறவுப்பாலம்

குடியரசு தின அணிவகுப்பில் சிறப்பு விருந்தினராக நேபாளம், பூடான், மாலை தீவுகள் போன்ற நாடுகளின் தலைவர்களை, கடந்த காலங்களில் இந்தியா அழைத்திருக்கிறது. அதனால், "இந்தியக் குடியரசு தின விழாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு பிரதமர் மோடி அழைப்பு' என்ற செய்தி இந்தியர்களை ஆச்சர்யப்படுத்தவில்லை. ஆனால், அந்த அழைப்பு அமெரிக்காவை "அப்படியே ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டன.

ஏனெனில், கடந்த 65 ஆண்டுகளில் ஒரே ஒரு முறைகூட அமெரிக்க ஜனாதிபதியை இந்தியா தன் குடியரசு தினவிழாவுக்கு அழைத்தது இல்லை. அதனாலேயே அந்த அழைப்பை நினைத்துப் புளகாங்கிதம் அடைந்திருக்கிறது அமெரிக்கா. "இந்தியாவைத் தனக்கு நெருக்கமாகவும் முக்கியமாகவும் கருதும் நாட்டுத் தலைவர்களுக்கு மட்டுமே இதுபோன்ற பெருமையை கடந்த காலங்களில் இந்தியா அளித்து வந்திருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. இது ஒரு புதிய உறவின் விடியல்' எனக் கொஞ்சம் டூ மச்சாகவே சிலாகித்திருக்கிறது அமெரிக்கா.

இந்தியாவில் அணு சக்தி ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தையின்போது ஒபாமாவுக்கு மோடி தேநீர் ஊற்றிக்கொடுத்ததையும், ஒரே இடத்தில் அமர்ந்து பேசிய களைப்பைப் போக்க இருவரும் புல்வெளியில் சிறிது நேரம் காலார நடந்ததும் "அற்புதமான நிகழ்வு' என வர்ணித்தது அமெரிக்க அரசு நிர்வாகம். ஆனால், எதையும் யதார்த்தமாகப் பார்க்கும் அமெரிக்க ஊடகமோ, "உலக மகா நடிப்புடா சாமி' என்ற பாணியில் கிண்டல் செய்திருப்பதோடு, "மோடி கடந்த செப்டம்பரில் அமெரிக்கா வந்தபோது, ஒபாமா அவரை மார்டின் லூதர் கிங் நினைவிடத்துக்குக் கொஞ்சம் தூரம் வாக்கிங் அழைத்துச் சென்றார். அதைத்தான் மோடி அப்படியே ஹைதராபாத் ஹவுஸில் ரிப்பீட் செய்தாரா?' எனக் கேட்டுக் கலாய்த்திருக்கின்றன!

எது எப்படியோ... இந்தியச் சுற்றுப் பயணத்தில் ஒபாமாவின் உற்சாகம் அட்டகாசம். ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு டெல்லி வந்து இறங்கியதிலிருந்து, தொடர்ச்சியாக ஜனாதிபதி மாளிகை அணிவகுப்பு, காந்தி சமாதியல் அஞ்சலி, ஹைதராபாத் ஹவுஸில் மோடியுடன் பேச்சுவார்த்தை, பத்திரிகையாளர்களுடன் சந்திப்பு, இரவு ஜனாதிபதி அளித்த அதிகாரபூர்வ விருந்து நிகழ்ச்சி... என சளைக்காமல் மலைக்காமல் மலர்ந்த முகத்தோடு வலம் வந்தார் ஒபாமா.

"அணு சக்தி, ராணுவத் தளவாடம், இரு நாட்டு உறவு ஆகியவற்றைத் தாண்டி தனிப்பட்ட முறையில் ஏதேனும் பேசிக்கொண்டீர்களா?' எனக் கேட்ட கேள்விக்கு, "என்ன அப்படிக் கேட்டுட்டீங்க? ஷரத்துகளில் இருக்கும் விதிமுறைகளதான் இரு நாட்டு உறவுகளைத் தீர்மானிக்கின்றன என நினைத்துவிடாதீர்கள். எங்க ரெண்டு பேருக்கும் நல்ல உறவு இருக்கு. போன்ல அடிக்கடி பேசிக்குவோம். அப்பல்லாம் நிறைய ஜோக்ஸ் அடிச்சுக்குவோம்' என பத்திரிகையாளர்களிடம் மோடி சொல்ல, ஒபாமாவும் அதைத் தலையசைத்து ஆமோதித்தார். அவர்களுக்கு இடையில் நல்ல உறவு இருக்கிறது என்பது உண்மைதான். ஏனெனில், கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் நான்கு முறை வெவ்வேறு தருணங்களில் சந்தித்திருக்கிறார்கள்.

"ஒரு நாளைக்கு நீங்கள் எத்தனை மணி நேரம் தூங்குறீங்க?' என ஒபாமா மோடியிடம் கேட்டிருக்கிறார். மோடியின் பதிலைக் கேட்டுவிட்டு, "பிரதமர் வேலைக்கு நீங்க புதுசு இல்லையா... அதான் கொஞ்சம் நேரம் மட்டுமே தூங்க முடியுது. நான் இந்த வேலைக்கு வந்து ஆறு வருடங்களுக்கு மேல ஆகிருச்சுல்ல. அதனால வேலை நல்லாப் பழகிட்டேன். உங்களைவிட ஒரு மணிநேரம கூடுதலாத் தூங்குறேன். உங்களுக்கும் இந்த வேலை பழகிட்டா ஓய்வு எடுக்க கூடுதல் நேரம் கிடைக்கும்' - இருவருக்கும் இடையிலான இந்த உரையாடலை, மோடியே வெளிப்படுத்தியிருக்கிறார்.

"இந்தியப் பிரதமர் முதலையோடு எல்லாம் சண்டை போடும் அளவுக்குத் தைரியமானவர். அதே சமயம் அவரால் எப்படி ஒரு ஃபேஷன் ஐகானாகவும் இருக்க முடிகிறது என்பது புரியவில்லை' - ஒரே நாளில் மூன்றாவது முறையாக ஆடை மாற்றி வந்த மோடியைப் பார்த்து ஒபாமா கேட்க, மோடி முகத்தில் ஆயிரம் வாட்ஸ் வெளிச்சம். மோடி- ஒபாமாவுக்கு இடையே துளிர்த்திருக்கும் திடீர் நட்பை அமெரிக்க எழுத்தாளர்கள் 'Romance' என்ற ரைமிங்கில் 'Bromance" என வர்ணிக்கிறார்கள்.

விளம்பரங்களைத் தாண்டி விடயத்துக்கு வருவோம். ஒபாமாவின் இந்த வருகையை ஒட்டி, கடந்த ஆறு வருட காலமாகக் கிடப்பில் இருந்த இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்துக்குப் புத்துயிர் ஊட்டியிருக்கிறார் மோடி. இந்த அணுசக்தி ஒப்பந்தம் என்பது முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் செல்லக்குழந்தை. இந்திய நாடாளுமன்றத்திலும் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது என்பது நாட்டின் இறையாண்மைக்கே அச்சுறுத்தலானது என்று சொல்லி கம்யூனிஸ்ட்கள் தாங்கள் அளித்துவந்த ஆதரவை விலக்கிக் கொள்ள தன்னுடைய அரசாங்கத்தையே பிணையப் பொருளாக்கித்தான் மன்மோகன் சிங் இந்த ஒப்பந்தத்தைக் கொண்டு வந்தார். மன்மோகன் சிங் கொண்டு வந்தபோது இந்த ஒப்பந்தத்தை எதிர்த்த பி.ஜே.பி இப்போது, "இத்தனை ஆண்டுகளாக காங்கிரஸால் செய்ய முடியாததை நாங்கள் சாதித்துக் காட்டிவிட்டோம்!' என்று வெற்றி முரசு கொட்டுகிறது.



இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தியதில் இருந்தே அமெரிக்கா உள்ளிட்ட அணுசக்தி வல்லமை கொண்ட நாடுகள் எல்லாம் அணுசக்தி விடயத்தில் இந்தியாவை தீண்டத்தகாத நாடாகவே நடத்தி வந்தன. அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிடமிருந்து அணுசக்தி ரீதியான வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு இல்லாமல் தொடர்ந்து தனித் தீவாகவே இருப்பது, எதிர்கால இந்தியாவையே இருட்டுக்குள் தள்ளிவிடும்' என்று சொல்லி வந்த, மன்மோகன், "மின்சாரத் தேவைகளை பூர்த்தி செய்ய நிலக்கரி, பெட்ரோலியப் பொருட்களால் மட்டும் இயலாது. வருங்காலத்தில் அணுசக்திதான் நாட்டின் மின்சக்தி தேவைகளைப் பூர்த்தி செய்யும்' என்றும் சொன்னார்.



அமெரிக்காவுடன் அணு சக்தி ஒப்பந்தம் புரிந்துகொள்வதற்கான முன்முயற்சிகளை அவர மேற்கொண்டார். நாம் கொடுக்கும் அணு உலைகளையும், கச்சாப் பொருட்களையும் இந்தியா அணுகுண்டு தயாரிக்கப் பயன்படுத்திக் கொண்டால், என்னாவது என்று அமெரிக்க அரசியல்வாதிகள் கேள்விகள் எழுப்பினார்கள். "அணு சக்தி முயற்சிகளையும் நாட்டின் பாதுகாப்புக்குத் தொடர்பான விடயங்களையும் நாங்கள் ஒன்று கலக்க மாட்டோம்' என்று இந்தியா உறுதி கூறியது.

ஒருகட்டத்தில் அரசியல், பொருளாதார மாற்றங்களால் அமெரிக்காவுக்கும் இந்த ஒப்பந்தம் அவசியம் என்று பட்டது. தான் பதவியில் இருக்கும்போது இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றிவிட வேண்டும் என்று அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜார்ஜ் புஷ் பல்வேறு எதிர்ப்புகளையும் தாண்டி இந்த ஒப்பந்தத்துக்கு தன் நாட்டின் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் அங்கீகாரத்தையும் பெற்றார். அதை அடுத்து வேக வேகமாக அந்நாட்டிலும் இந்த ஒப்பந்தத்துக்கு சட்ட வடிவம் கொடுக்க வேலைகள் நடைபெற்றன என்றாலும் ஒரு கட்டத்தில், "இந்த அணுசக்தி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நிர்மாணிக்கப்படும் அணு உலைகளில் "போபால் விஷ வாயு விபத்து' போன்று ஏதாவது ஓர் அசம்பாவிதம் நிகழ்ந்தால்... பாதிக்கப்பட்டவர்களுக்கு யார் நஷ்ட ஈடு வழங்குவது?" என்ற கேள்வி பூதாகரமாக எழுந்தது. அதனால வேறு வழியில்லாமல் மன்மோகன் சிங் அரசாங்கம், "அணு மின் சக்தி தயாரிக்கும் நிறுவனங்களும், அதற்கு அணு உலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் சப்ளை செய்த வெளிநாட்டுக் கம்பெனிகளும் தான் இதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்று அரசு சட்டம் இயற்றியது.

எதைக் கேட்டாலும், "ராணுவ ரகசியம். ராணுவ ரகசியம்' என ஃபிலிம் காட்டும் அரசாங்கம், அமெரிக்க ஜனாதிபதியை நடு நாயகமாக உட்கார வைத்து தன்னிடம் இருக்கும் ராணுவத் தளவாடங்களை எல்லாம் அணிவகுப்பு நடத்திக் காட்டியது. ஆனால், அந்த அணிவகுப்பில் இடம்பெற்ற பெரும்பாலான தளவாடங்கள் ரஷ்யத் தயாரிப்புகள் என்பது மட்டுமலல... அரதப் பழசானவையும்கூட. ராணுவத்தின் அந்நிய முதலீடுக்குக் கதவுகளைத் திறந்திருக்கும் மோடியின் அரசு, ஒபாமாவின் இந்த வருகையின்போது நான்கு ராணுவத் தளவாடத் திட்டங்களை அமெரிக்காவுடன் இணைந்து கூட்டாகச் செயற்படுத்த ஒப்பந்தம் போட்டிருக்கிறது.

அமெரிக்கப் பங்குச்சந்தையான வால் ஸ்ட்ரீட்டின் தற்போதைய தாரக மந்திரம்... "லவ் இந்தியா... லவ் மோடி... லவ் ராஜன் (இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னர்)! ஏனெனில், மோடியின் "மேக் இன் இந்தியா' கொள்கை தங்கள் தேசத்துக் குச் சாதகமாக இருப்பதாக அமெரிக்கப் பங்குச் சந்தை கருதுகிறது. அதுவும் ஒபாமாவின் இந்திய வருகைக்கு ஒரு காரணம். இந்தியாவுடனான அணு சக்தி ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தால், அதனால் அமெரிக்க நிறுவனங்களுக்கு ஏக லாபம். சிறிது காலத்துக்கு முன்பு வரை ரஷ்யாவில் இருந்துதான் இந்தியா அதிக அளவு ராணுவத் தளவாடங்களை இறக்குமதி செய்தது. ஆனால், சமீப காலமாக அந்த இடத்தை அமெரிக்கா பிடித்துக்கொண்டது. அதை அடுத்த 10 ஆண்டுகளுக்கு ஊர்ஜிதம் செய்யும் ஒப்பந்தத்தையும் ஒபாமா பெற்றிருக்கிறார். ஆக, ஒபாமாவின் வருகை வணிகரீதியான லாபத்தையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் ஃபோர்ப்ஸ் இதழ், ஒபாமாவின் இந்திய வருகை குறித்த கட்டுரைக்குக் கொடுத்திருக்கும் தலைப்பின் மூலமே இதை உணரலாம். அது "மோடியின் இந்தியப் பணம் ஒபாமாவின் அமெரிக்காவுக்கு வேண்டும்!' என்பதே. அதனால்தான் திங்கள்கிழமை காலையில் முழுதாக இரண்டு மணி நேரம் மழையிலும் மூடுபனியிலும் இந்தியக் குடியரசுக் கொண்டாட்டங்களை அமெரிக்க ஜனாதிபதி அமர்ந்து ரசித்தார். முன்பெல்லாம் அமெரிக்க ஜனாதிபதி இந்தியா வந்தால், அப்படியே பாகிஸ்தானுக்கும் சென்று எட்டிப் பார்ப்பதை வழக்கமாக வைத்திருப்பார். இந்த முறை அந்தச் சம்பிரதாயம் அரங்கேறவில்லை.

பதவியிலிருக்கும்போது வேறு எந்த அமெரிக்க ஜனாதிபதியும் இரண்டு முறை இந்தியாவுக்கு வந்ததில்லை. அப்படி வருகை தந்த முதல் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாதான். இந்தியப் பிரதமர் மோடி, "மிஸ்டர் பிரசிடென்ட்' என்றோ அல்லது "பிரசிடென்ட் ஒபாமா' என்றோ குறிப்பிடாமல் அவரது பெயரைச் செல்லமாக "பாரக்' எனக் குறிப்பிட்டதைக் கண்டு அமெரிக்கப் பத்திரிகையாளர்களே திகைப்பில் ஆழ்ந்தார்கள். ஏனெனில், இதுவரை எந்த இந்தியப் பிரதமரும் அமெரிக்க ஜனாதிபதியை இப்படிப் பெயர் சொல்லி அழைத்ததில்லை.

-ஜூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம நீதியரசர் மொஹானின் தீர்ப்புக்கள் அனைத்தும் சூன்யமாக்கப்பட வேண்டும்

## சரத் என்.சில்வா தெரிவிப்பு



பிரதம நீதியரசராக கடமை யாற்றிய மொஹான் பீரிஸ் வழங்கிய தீர்ப்புக்களும் சூன்யமாக்கப்பட வேண்டுமென முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரி வித்துள்ளார்.

இந்த இரண்டு ஆண்டு காலத்தில் மொஹான் பீரிஸினால் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்புக்களும் சூன்யமாக்கப்பட வேண்டும். பிரதம நீதியரசர் பணி நீக்கப்பட்ட விதம் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

நீதிமன்றின் உயர் பதவிகள் இவ்வாறு இழிவுபடுத்தப்படுகின்றமை ஏற்புடையதல்ல.

பிரதம நீதியரசர் பதவி 1802 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் காணப்படுகின்ற போதிலும் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டதில்லை. இந்த நிலைமையினால் நீதிமன்றச் சேவைகள் நிச்சய மற்றத்தன்மையை எதிர்நோக்கி வருகின்றது.

எந்தவொரு காரியத்தையும் சட்ட ரீதியாக அன்றி அவசரமாக மேற்கொள்வதனால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகள் இதன் மூலம் புலனாகியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளினால் நீதிமன்ற சேவைகள் மீதான மக்கள் நம்பிக்கை வீழ்ச்சியடையும்.

உயர் பதவிகளை வகித்தவர்கள் சட்டவிரோதமான முறையில் பணி நீக்கம் செய்யப்படுவது நல்லாட்சிக்கு முரணானது என சரத் என் சில்வா சிங்கள ஊடக மொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

# தமிழ்க்கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதை மு.கா. தடுக்கின்றமை கவலைக்குரியது!

## அரியநேத்திரன் எம்.பி தெரிவிப்பு



**தமிழ் மக்களின் பல போராட்டங்கள் மற்றும் பல தியாகங்களுக்கு மத்தியில் உருவான கிழக்கு மாகாண சபையின் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தடுக்கின்றமை கவலைக்குரிய விடயம் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**

கொக்கட்டிச்சோலை படுகொலையின் 28ஆவது நினைவுதினம், கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

65 வருடகால போராட்ட வரலாற்றில், இலட்சக்கணக்கான உயிர்களை பறிகொடுத்த இனமாக தமிழினம் மட்டுமே உள்ளது. இந்தப் போராட்டம் காரணமாக மூவின மக்களும் மடிந்துள்ளார்கள் என்பதையும் நாங்கள் மறுக்கவில்லை. ஆயிரத்துக்குட்பட்டவர்களை இஸ்லாமிய சமூகம் இழந்துள்ளதாக அவர்களின் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது. ஆயிரக் கணக்கான மக்களை பறிகொடுத்தவர்கள் சிங்கள மக்கள். ஆனால், இலட்சக் கணக்கான மக்களை பறிகொடுத்தவர்கள் தமிழ் மக்கள் மட்டுமே.

உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தி பணிகளை ஆற்றமுடியாதவாறும் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றோம். கடந்த காலத்தில் படுகொலை செய்யப்பட்ட எமது மக்களை நினைவுகூர முடியாதுள்ளோம் அதேபோன்று, எமது இனத்துக்காக ஆகுதியாகிய நாற்பதா யிரம் பேரை நினைவுகூரமுடியா துள்ளோம்.

65 வருடங்களாக தொடர்ந்து அடிமைகளாக நாங்கள் இருந்துவருகின்றோம். இதற்காக பல்வேறுபட்ட போராட்டங்களை நடத்தி, இலட்சக் கணக்கான மக்களை இந்த மண்ணில் ஆகுதியாக்கியுள்ளோம். இந்த வரலாற்றின் பின்னரே கடந்த ஜனாதிபதித் தேர்தலையும் நாங்கள் சந்தித்தோம்.

மேலும் உண்மையானசமாதானம் என்பது போராட்டம் இடம் பெற்ற மண்ணில் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை செய்வது மட்டுமல்லாது, அந்தப் போரில் உயிரிழந்தவர்களை நாங்கள் நினைக்கும் போதே அது உண்மையான சமாதானமாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அப்பிள் நிறுவனத்தின் புதிய இலாப சாதனை

கடந்த ஆண்டின் இறுதிக் காலாண்டில் மட்டும் 18 பில்லியன் டொலரகள் இலாபமீட்டியிருப்பதாக அப்பிள நிறுவனம் அறிவித்திருக்கிறது.

இதுதான் பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்ட ஒரு பொது நிறுவனம் ஈட்டியிருக்கும் மிகப் பெரிய இலாபத்தொகையாகும். இதற்கு முன்பு எக்ஸோன்மொபில் மற்றும் கேஸ்ப்ரோம் போன்ற எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனங்களின் முந்தைய சாதனைகளை இது முறியடித்திருக்கிறது.

இந்த இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பது ஐ போன் -6 மற்றும் சிக்ஸ் ப்லஸ் மொபைல் தொலைபேசிகளின் சாதனை படைக்கும் வற்பனையின் விளைவாகும் என்று அப்பிள் நிறுவனம் கூறுகிறது.

சீனாவில் இந்த விற்பனை குறிப்பாக பலமாக இருந்தது. அதிலும், ஐ போன்கள் விற்பனை சீனாவில் முதல் முறையாக அமெரிக்க விற்பனையைவிட அதிகமாக இருந்தது.

டிம் குக் அப்பிள் நிறுவனத்தின் தலைமை நிர்வாகியாக பதவியேற்றபோது அவர் அவருக்கு முன்பு அந்தப் பதவியில் இருந்த ஸ்டீவ் ஜாப்ஸ் பெற்ற வெற்றியை அவரால் பெற முடியுமா என்பது குறித்து சந்தேகங்கள் இருந்தன, ஆனால் இப்போது அவருக்கு முதலீட் டாளரகளின் ஆதரவு இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# உமாஓய திட்டத்தினை உடனடியாக நிறுத்தவும்

## ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

ஈரான் - இலங்கை அரசாங்கத்தின் கீழ் கட்டுமான பணிகளிலுள்ள உமாஓய திட்டத்தை நிறுத்தவும். இல்லையென்றால் மாற்றுப் பாதையை பயன்படுத்துமாறு ஊவா மாகாண முதலமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடிதம் மூலம் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

ஈரான்- இலங்கை அரசாங்கத்தின்கீழ் இயங்கும் உமாஓய திட்டம் வெலிமடை ஊவா பரனகம பிரதேசத்தில் ஆரம்பித்து பண்டாரவளை, எல்ல, வெல்லவாய ஊடாக தற்பொழுது நீண்ட சுரங்கங்கள் கட்டப்படுகின்றது.

இத் திட்டம் சூழலை மாசுபடுத்தி கட்டப்படுகின்றதனால் உடனடியாக கட்டுமான பணிகளை நிறுத்துமாறு கோரிக்கை ஒன்றினை முன்வைத்து ஊடக சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொணட ஹரீன் பெர்னாண்டோ, உமாஓய திட்டம் மக்களின் வேண்டுகோளி ன்றி கடந்த அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார்.

இத் திட்டத்தின் மூலம் சூழலை பாதுகாப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு


### திருமதி சுந்தரலிங்கம் கண்மணி



இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இல.996, காங்கேசன்துறை வீதி ,வண்ணார்பண்ணையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் கண்மணி கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி தேவராஜ் ருக்குமணி



யாழ். கதிர்றல் வீதியைப் பிறப்பிடமாகவும் வளன் புரம், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தேவராஜ் ருக்குமணி கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி இன்று வளன்புரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி கந்தசாமி மகேஸ்வரி



வட்டுக்கோட்டை தெற்கைச் சேர்ந்த கந்தசாமி மகேஸ்வரி கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று வியாழக்கிழமை வட்டுக்கோட்டையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

### திருமதி பாலசுப்பிரமணியம் மாணிக்கம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் மாணிக்கம் கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு Ogden Funeral Home, 4164 Sheppard Avenue East, Scarborough, ON M1S 1T3, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### கொன்ஸ்ரன்ரைன் அன்ரன்



யாழ். அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Harrow ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கொன்ஸ்ரன்ரைன் அன்ரன் கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் திருப்பலி நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு St John Fisher RC Church, 80 Imperial Close Harrow, Middlesex HA2 7LW, UK என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### சிதம்பரப்பிள்ளை கந்தசாமி



யாழ். தென்மராட்சி வரணி குடமியனைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கந்தசாமி கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு Vestre Kirkegard, Viborgvej 47A, 8210 Aarhus V, Denmark என்னும் முகவரியில் நடைபெறும்.

### மகாமாணிக்கம் சாம்பசிவம்



யாழ். பருத்தித்துறை வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும் கண்டியை வசிப் பிடமாகவும் கொண்ட மகாமாணிக்கம் சாம்பசிவம் (இளைப்பாறிய நிதி உதவியாளர்-பிரதேச செயலகம் பருத்தித்துறை) கடந்த 27 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வலகெல்ல இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



புதிய வெளியுறவுச் செயலராக எஸ்.ஜெய்சங்கர் பொறுப்பேற்றுக் கொண்டார். முன்னதாக, நேற்று முந்தினம் சுஜாதா சிங் வெளியுறவுச் செயலர் பதவியில் இருந்து காரணம் ஏதும் தெரிவிக்கப்படாமலேயே அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து நேற்று காலை நாடாளு மன்றத்தின் சவுத் பிளாக்கில் ஜெய்சங்கர் புதிய வெளியுறவுச் செயலராக பொறுப்பேற்றுக் கொண்டார். இரண்டு ஆண்டுகளுக்கு அவர் இப்பதவியில் தொடர்வார். முன்னதாக டில்லியில் நேற்று முந்தினம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில நடைபெற்ற மத்திய அரசின் நியமனக்குழு கூட்டத்தில், ஜெய்சங்கரை வெளியுறவுத்துறை செயலாளராக நியமிப்பது என முடிவு செய்யப்பட்டது.

தனக்கு வழங்கப்பட்ட புதிய பதவி குறித்து ஜெய்சங்கர் கூறுகையில், இது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவம். என் மீது மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. அரசு எத்தகைய கொள்கைக ளுக்கு முன்னுரிமை அளிக்கிறதோ அவற்றுக்கே நானும் முன்னுரிமை அளிப்பேன் எனத் தெரிவித்தார்.

## பாலினத்தை கண்டறிய உச்ச நீதிமன்றம் தடை!

இந்தியாவில் இணையத்தள தேடல் எஞ்சின்களை நடத்தும் கூகுள், யாஹு, பிங் போன்ற நிறுவனங்கள், தங்கள் தளங்களில் பிறக்கவிருக்கும் குழந்தையின் பாலினத்தைக் கண்டறியும் சோதனைகள் குறித்த விளம்பரங்களை வெளியிடுவதை, இந்திய உச்சநீதிமன்றம் நேற்று முந்தினம் புதன் கிழமை தடை செய்துள்ளது.

உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவு பொதுநல வழக்கொன்றின் அடிப்படையில் வந்துள்ளது.

இந்த வழக்கைத் தொடுத்தவர்கள் , குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே பாலினத்தைக் கண்டறியும் முறைக்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருந்தாலும், இந்த வசதி குறித்த விளம்பரங்கள் இணைய தேடல் தொடர்ந்து வெளி வருவ தாகத் தெரிவித்தனர்.

இந்த வழக்கு குறித்த அடுத்த விசாரணை அமர்வு பெப்ரவரி 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அப்போது இந்த விடயத்தில் விளக்கமான உத்தரவு தரப்படும் என்று நீதிமன்றம் கூறியது.

ஐஇநா.மன்ற தரவுகளின்படி, இந்தியாவின் பாலின விகிதாசாரம், 2011ஆம் ஆண்டில் 918ஆக குறைந்திருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பிரச்சினை நகர்ப் புறங்களிலும், பெருநகரங்களிலும் மிகவும் மோசமாக இருப்பதாகத் தெரிகிறது.

பாலின விகிதம், 1971ஆம் ஆண்டில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 964 பெண்குழந்தைகள் என்று இருந்தது .

"இந்தியா பாலின விகிதப் பிரச்சினை காரணமாக அதிகம் பாதிகப்பட்டிருக்கிறது.இருந்தாலும் இந்த விடயத்தில் ஒரு வெறுக்கும் மனோபாவம் காணப்படுகிறது, என்று உச்சநீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

பாரதச் செய்தி

# அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பில் அரசு விளக்கமளிக்க வேண்டும்!

## -காங்கிரஸ் கோரிக்கை-



**(சென்னை)**

**அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள அணுசக்தி ஒப்பந்தம் குறித்து மத்திய அரசு நாடாளுமன்றத்தில் விளக்க வேண்டும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் இந்திய வருகையின் போது, இந்தியா, அமெரிக்கா இடையே அணுசக்தி ஒப்பந்தம் கையொப்பமானது. இதனிடையே, அணு உலைகளால் விபத்து ஏற்பட்டால் அதற்கான இழப்பீட்டை தொடர் புடைய நிறுவனம் அளிப்பது குறித்த உறுதிமொழி பற்றி அரசு விளக்க வேண்டும் எனவும் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பாக மாநிலங்களவை காங்கிரஸ் துணைத் தலைவர் ஆனந்த் சர்மா தெரிவிக்கையில்,

உடன்படிக்கையில் எட்டப்பட்ட வர்த்தகக் கூறுகள் குறித்த உறுதி மொழிகளை அரசு நாடாளுமன்றத்தில் விளக்க வேண்டும். அமெரிக்க தரப்பில் அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் குறித்த தகவல்களை அரசு பகிர்ந்து கொள்ளவில்லை. அவற்றை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். இந்த உடன் படிக்கைகள் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்காலத்தில் வரைவு செய்யப்பட்டது. அப்போது எதிர்த்த பாஜக, இறுதியாக அதனை நிறைவேற்றியுள்ளது. இந்த உடன்படிக்கையை காங்கிரஸ் எதிர்க்கவில்லை.

பட்ஜெட் கூட்டத்தொடரில் குடியரசுத் தலைவர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் போது, வரும் பெப்ரவரி 24, 25 ஆம் திகதிகளில் இப்பிரச்சினையை எழுப்ப காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.

இப்பிரச்சினையை காங்கிரஸ் கவனமாகக் கையாள்வது குறிப்பிடத்தக்கது. இறுதி ஒப்பந்தத்தின் விபரங்களை காங்கிரஸ் கோருகிறது. அமெரிக்க தரப்பில் எழுப்பப்பட்ட இந்திய சட்ட விதிகள் பற்றிய பிரச்சினையை இந்திய அரசு எவ்வாறு கையாண்டுள்ளது, காப்பீடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து அரசு வெளிப்படையாக நாடாளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும் என வலியுறுத்த காங்கிரஸ் முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (இ-5)

# பவானிசிங்கை நீக்கக்கோரி தி.மு.க.மீண்டும் மன்றில் மனு

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் மேல்முறை யீட்டு மனு மீதான விசாரணையில் இருந்து அரசு சட்டத்தரணி பவானி சிங்கை நீக்கக்கோரி தி.மு.க. பொதுச்செயலாளர் க.அன்பழகன் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மீண்டும் புதிய மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

ஏற்கனவே பவானிசிங்கை நீக்கக்கோரி அன்பழகன் தாக்கல் செய்த மனுவை நீதிபதி அனந்த பைரரெட்டி கடந்த 19 ஆம் திகதி விசாரித்தார். அப்போது அரசு சட்டத்தரணி பவானிசிங்கின் நியமனம் குறித்து மனுதாரர் அன்பழகனோ, கர்நாடக அரசோ உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்.

இந் நிலையில் தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் தரப்பு சட்டத்தரணிகள் கர்நாடக உயர் நீதிமன்ற பதிவாளர் ஆர்.கே. தேசாயிடம் நேற்று முந்தினம் புதிய மனு(ரிட்) ஒன்றை தாக்கல் செய்துள்ளனர்.



### தமிழக அரசுக்கு அதிகாரமில்லை?

இவ்வழக்கின் நீதிபதி நியமனம், அரசு சட்டத்தரணி நியமனம் உள்ளிட்ட விவகாரங்களில் தலையிட தமிழக அரசுக்கு அதிகாரமில்லை என உச்ச நீதிமன்றம் தனது வழிகாட்டுதல்களில் தெரிவித்துள்ளது.

ஆனால் சொத்துக்குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டில் அரசு சட்டத்தரணியாக ஆஜராகி வரும் பவானிசிங்கை தமிழக அரசின் இலஞ்ச ஒழிப்புத்துறை நியமித்துள்ளது. இது உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு எதிரானது.

எனவே உடனடியாக தமிழ அரசால் நியமிக்கப்பட்ட பவானி சிங்கை அரசு சட்டத்தரணி பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

### தி.மு.க. மனு ஏற்கப்படுமா?

திமுக தரப்பு கடந்த 6 ஆம் திகதி பவானிசிங்கை நீக்கக்கோரி தாக்கல் செய்த மனுவை கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.அப்துல் நசீர் அகமது விசாரிக்க மறுத்தார். பின்னர் இம்மனுவை விசாரித்த நீதிபதி ஆனந்த பைரரெட்டி, அரசு சட்டத்தரணியின் நியமனம் குறித்து உச்ச நீதிமன்றத்தை அணுகுமாறு திமுகவுக்கும், கர்நாடக அரசுக்கும் உத்தரவிட்டார்.

இந்நிலையில் தி.மு.க. தரப்பு மீண்டும் அதே கோரிக்கையை வலியுறுத்தும் மனுவை தாக்கல் செய்திருப்பதால், அம்மனு ஏற்கப்படுவதில் சிக்கல் இருப்பதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மேற்கு வங்காளத்தில் 100 பழங்குடியின கிறிஸ்தவர்கள் இந்து மதத்திற்கு மாற்றம்

மேற்கு வங்காள மாநிலம் பிர்பூம் மாவட்டம் ராம்புர்கத் பகுதியில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய 100க்கும் மேற்பட்ட பழங்குடியினரை விஸ்வ இந்து பரிஷத்தினர் மீண்டும் இந்து மதத்திற்கு மாற்றினர். இந்த மறுமதமாற்ற நிகழ்ச்சியில் விஸ்வ இந்து பரிஷத் தலைவர் ஜுகல் கிஷோர் கலந்து கொண்டார்,

இந்த மதமாற்றம் குறித்து கேட்ட போது விஸ்வ இந்து பரிஷத் தலைவர் பிரவீண் தொகாடியா கூறியதாவது,

சிலர் இந்து மதத்திற்கு மாற வேண்டும் என விரும்பினால் நாம் அதை எப்படி தடுத்து நிறுத்த முடியும். நாங்கள் பல்வேறு உதவிகளை அறிவித்து வருகிறோம். ஒவ்வொரு இந்து குடும்பங்களுக்கும் வேலை வாய்ப்பு மற்றும் குழந்தைகளுக்கு கல்வி வழங்கி வருகிறோம் என்று கூறினார்.

பேரணியில் உரையாற்றிய தொகாடியா கூறும் போது ,வங்காள தேசத்தில் இருந்து முஸ்லிம்கள் சட்டவிரோதமாக இங்கு குடியேறுகின்றனர் .இதற்கு மாநில அரசு ஒரு கால வரையறையற்ற திட்டத்தை தீட்ட வேண்டும். இல்லையென்றால் விரைவில் மேற்குவங்காளம் வங்களாதேசமாக மாறி விடும். என்று கூறினார்.

பழங்குடி கிறிஸ்தவர்கள் மீண்டும் இந்துவாக மதம் மாற்றம் செய்யப்பட்டது குறித்து ஆளும் திரிணாமூல் காங்கிரஸ் இந்த மத மாற்றம் வலுக்கட்டாயமாக நடந்தது என்றால் நிர்வாகம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என கூறியுள்ளது.

திரிணாமூல் காங்கிரஸ் தேசிய செய்தி தொடர்பாளர் டெரக் ஒபிரன் தனது டுவிட்டரில் கூறி உள்ளதாவது,

வற்புறுத்தி இந்த மதமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால், இந்த பிரச்சினை வலுவான முறையில் தீர்க்கப்படும் சாத்தியம் உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நியமனம் கோரி சுகாதார தொண்டர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் சுகாதார தொண்டர்களாகக் கடமையாற்றும் ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், மல்லாவி, புதுக்குடியிருப்பு ஆகிய வைத்தியசாலைகளில் கடந்த 1995ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சுகாதார தொண்டர்களாக கடமையாற்றி வரும் 63 ஊழியர் களே இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இதன்போது சுகாதார தொண்டர்கள், புதிய அரசே எங்களுக்கு நிரந்தர நியமனத்தை அவசரமாக வழங்கு, 100 நாட்கள் வேலைத் திட்டத்தில் எங்களையும் சேர்த்துக் கொள், புறக்கணிக்காதே புறக்கணிக்காதே சுகாதார தொண்டர்களை புறக்கணிக்காதே போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்த பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

பதாதைகளுடன் ஊர்வலமாகச் சென்ற இவர்கள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகத்தை சந்தித்து இது தொடர்பில் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதார தொண்டர்களாக பாதிக் [redacted] 63 பேர் கடந்த 1995 ஆம் [redacted]நந்தும் அதற்கு பிற்பட்ட காலத்தில் சுனாமி அனர்த்தத்திலும் யுத்த காலத்திலும் யுத்தத்திற்கு பிந்திய நலன்புரி நிலையத்திலும் தற்போதைய காலத்திலும் சுகாதார தொண்டராகவே இன்று வரையிலும் மிகவும் வறுமையின் மத்தியிலும் எந்தவித கொடுப்பனவும் இன்றி நிரந்தர நியமனம் வரும் என்ற நம்பிக்கையில் சேவை செய்து வருகின்றோம். கடந்த கால அரசாங்கம் 2013. 06 ஆம் மாதம் வழங்கிய நிரந்தர நியமனத்தில் எங்களை புறக் கணித்துள்ளனர். அரசியல் தலையீட்டால் ஒருநாள் கூட வேலை செய்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியுள்ளனர்.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட எங்களுக்கு நீதியாகவும் நியாயமானதுமான நிரந்தர நியமனத்தை முன்னுரிமைப்படுத்தி தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் முதலமைச்சர் உட்பட சம்பந்தப்பட்டவர்களுக்கும் தங்களின் மகஜரையும் அனுப்பிவைத்திருந்தனர். இப் போராட்டம் இடம்பெற்ற போது அந்த இடத்திற்கு சென்ற வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுகாதா ரத்தொண்டர்களின் பிரச்சினைகளை கேட்டதோடு சுகாதாரஅமைச்சர் சத்தியலிங்கத்தைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமைகளை விளக்கினார். சுகாதார அமைச்சரும் தொலைபேசி ஊடாக சுகாதாரத் தொண்டர் பிரதிநிதிகளுடனும் ரவிகரனுடனும் உரையாடினார். இதனைத்தொடர்ந்து சுகாதாரத்தொண்டர்கள் போராட்டத்தை கைவிட்டனர். (அ-2)




# மாற்றுவலுவுடைய 22 பேருக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது



(பனிக்கன்குளம்)

வடமாகாண சுகாதார அமைச்சின் நிதியொதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 22 மாற்றுவலுவுடையோருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் ஒவ்வொரு பயனாளிக்கும் தலா 30 கோழிகளும் கூடு மற்றும் இதர தேவைகளுக்கு 10 ஆயிரம் ரூபா காசோலையும் கடந்த 26 ஆம் திகதி மாலை 4 மணியளவில் புதுக்குடியிருப்பு கால்நடை வைத்திய நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர், வடமாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் திருமதி மேரி கமலா குணசீலன், வடமாகாணசபை பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-2-28)

# தீ விபத்தில் சிக்கிய கணவனும் உயிரிழப்பு

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் எரிகாயமடைந்த கணவனும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்ததாக வவுனியா பொது வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

வெளிநாட்டிலிருந்து அண்மையில் வந்த பாலச்சந்திரன் கஜேந்திரன் மற்றும் அவரது மனைவியான கஜேந்திரன் சுதாஜினியும் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை எரிகாயங்களுடன் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மனைவி உயிரிழந்தார். இந்த நிலையில், கணவனும் உயிரிழந்ததாக வைத்திய சாலை தகவல்கள் தெரிவித்தன.

இத் தீ விபத்தின்போது வீட்டு அறையிலிருந்த கட்டில், மின்விசிறி மற்றும் இதர பொருட்களும் அறைக்கு முன்பாக இருந்த சாய்மனைக் கதிரையும் முழுமையாக எரிவடைந்தன. இந்த தீ விபத்து தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில், வவுனியா பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# மாணவர் கௌரவிப்பு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடந்தாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு துணுக்காய் வலயக்கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.எல்.மாலினி வெனிற்றன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் 11 பாடசாலைகளைச் சேர்ந்த 256 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் பதக்கங்கள் அணிவித்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாங்குளம் மக்கள் வங்கி மேலாளர் எஸ்.சுரேஸ்குமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-2-15)

❖❖❖❖❖❖❖❖

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி.நாகேந்திரராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி . எல். மாலினி வெனிற்றன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் மு/சண்முகரட்ணம் வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல்12.30 மணிக்கு பாட சாலை அதிபர் த.தயாதரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாங்குளம் மக்கள் வங்கி மேலாளர் எஸ்.சுரேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.(அ-2-15)

# கல்விதான் எமது சொத்து

## செல்வம் எம்.பி தெரிவிப்பு

தமிழர்கள் தங்கள் கல்வி அறிவின் மூலம் தங்களை உலகறியச் செய்ததுடன், தங்கள் உரிமைகள் மற்றும் தேவைகளை அதன்மூலம் கேட்டறியவும் செய்தனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, பாண்டியன் குளம் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தமிழ் மக்களின் கல்வி தான் அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்துள்ளது. எமது கல்வியறிவை கைவிடாது தொடர்ந்து நாங்கள் சிறந்த கல்வியாளர்களாக விளங்க வேண்டும். கல்வி தான் எங்களுடைய சொத்து.

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற அழிவுகள் அட்டூழியங்கள் தொடர்பில் ஐ.நா விசாரணை நடைபெறுகின்றது. அது காலதாமதமின்றி நடைபெறவேண்டும். கடந்த ஜனாதிபதி தேர்தல் எமது வல்லமையைக் காட்டி ஆட்சியை மாற்றி அமைத்தோம் என்றார். (அ-2)

# பளை பொதுச் சந்தைப்பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறு

(பொற்பதி)

பளை பொதுச்சந்தைக்குச் செல்லும் பொதுமக்கள் வீதியோரமாக தமது வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தைக்குச் செல்லும் வாடிக்கையாளர்கள் தமது சைக்கிள், மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி மற்றும் வாகனங்களை வீதியோரங்களிலும் சந்தை வாயில் பகுதிகளிலும் நிறுத்திச் செல்கின்றனர்.

இவ்வாறு சந்தையின் இரண்டு வாயில் பகுதிகளிலும் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் பெரும் சிரமங்களை பயணிகள் எதிர்நோக்க வேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேற்படி இடையூறுகளை நிவர்த்தி செய்வதற்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் இதுவரை நடவடிக்கை எடுக்காமல் இருப்பது குறித்து அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக அப்பகுதி பொதுமகன் ஒருவரால் உள்ளூராட்சி ஆணையாளருக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. (இ-60)

# 92 முதியோர்களுக்கு உலருணவுப் பொதிகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மலையாளபுரத்தில் புலம் பெயர் தமிழர் ஒருவரால் இயக்கப்படும் எஸ்.கே.முதியோர் இல்லத்தின் ஊடாக 92 முதியோருக்கு மாதாந்தம் தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் தெரியவருவதாவது, கிளிநொச்சி மாவட்டத்தின் சாந்தபுரம் கிராமத்தில் பராமரிப்பின்றி இருக்கும் முதியோருக்கும் மற்றும் மாற்று வலுவிழந்த முதியோருக்குமாக மொத்தம் 92 பேருக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு இலட்சத்து 84 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் மாதாந்தம் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வுதவியானது கடந்த 7 மாதங்களாக வழங்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வழங்கப்படும் எனவும் பெப்ரவரி மாதத்திற்கான உலர் உணவுப் பொதிகள் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாந்த புரம் கிராமத்திலுள்ள பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கப்படுமென இந்நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-2-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிகள்மீது இராணுவச்செயற்பாடு; தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கள்

## சிறிதரன் எம்.பி ஜனாதிபதிக்கு கடிதம்

(கிளிநொச்சி)

**உருத்திரபுரம் கிழக்கு சாயி முன்பள்ளியில் கடந்த 24ஆம் திகதி நடை பெற்ற நிகழ்வில் இராணுவப் படையணிக் கொடி யேற்றப்பட்டு இராணுவத்தின் அத்து மீறிய பிரசன்னம் ஏற்பட்டது குறித்தும் முன்பள்ளி ஆசிரியர்களின் சுதந்திரமான கற்பித்தல் செயற்பாடுகள் ஊதியம் போன்ற விடயங்கள் குறித்தும் நடவடிக்கை எடுக்கக்கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.**

அக் கடிதத்தின் விபரம் வருமாறு,

தங்களுடைய காலத்திலாவது தமிழர்களுடைய வரலாற்று ரீதியான சரித்திர பூர்வமான நிலத்தில் தமிழர்களுக்கு உரித்தான இறைமையின் அடிப்படையில் நிலையான தீர்வைப் பெற்று இலங்கை நாட்டின் இணைப் பங்காளிகளாக சுய கௌரவத்துடன் வாழ்வதற்கு வழி சமைப்பீர்கள் என்று எமது மக்கள் சார்பாக எதிர்பார்க்கிறேன். அந்த எதிர்பார்ப்பும் மாற்றம் வேண்டிய முயற்சியும் தான் தமிழர் வரலாறு காணாத வகையில் திரண்டு வந்து தங்களை இந் நாட்டின் ஜனா திபதியாகத் தெரிவு செய்வதற்குக் காரணமாக அமைந்தது.

அந்த முயற்சிக்கும் உழைப்புக்கும் தாங்கள் நல்லெண்ணத்துடன் உழைப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் கீழ்வரும் விடயத்தினையும் தங்கள் கவனத்திற்குத் தருகிறேன்.

வடக்கு கிழக்கிலே குறிப்பாகக் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் பாடசாலை செல்லும் 3-4 வயதுப் பாலகர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிவில் பாதுகாப்புப் பிரிவு என்ற அடிப்படையில் சம்பளம் வழங்கப்பட்டு இராணுவக் கண்காணிப்பின் கீழ் நடத்தப்படுகிறார்கள். இராணுவம் கொடுக்கும் நீல நிறப்புடைவையைத்தான் அவர்கள் அணிய வேண்டும் என கட்டாயப்படுத்தியுள்ளார்கள். அதேபோல் அந்த பச்சிளம்பாலகர்களும் இராணுவம் சொல்லும் நிறத்தில்தான் தங்கள் உடைகளை அணிய வேண்டும். இவ்வாசிரியர்கள் மாதம் இரு தடவை விசுவமடு இராணுவமுகாமுக்கு அழைக்கப்படுவதும், அங்கு அரசியல் செயல்களில் ஈடுபடக் கட்டாயப் படுத்தப்படுகின்றனர்.

இலங்கையின் கல்வித் திட்டத்தில் ஒவ்வொரு மாகாணங்களிலும் முன்பள்ளிகளுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் வலய ரீதியாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அவர்களையும் புறம் தள்ளி இராணுவச் சீருடையுடனும் இராணுவத்தினரே நேரடியாக இந்த முன்பள்ளிகளையும் ஆசிரியர்களையும் இராணுவ ரீதியாக நடத்துகிறார்கள். வடக்கு மாகாணசபை இருந்தும் கூட இம்முன்பள்ளிகள் ஒரு இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருப்பது, தாங்களும் நாங்களும் நேசிக்கும் ஜனநாயகத்திற்கு விரோதமான விடயமாகும்.

இம் முன்பள்ளி ஆசிரியர்களை மாகாணக்கல்வி அமைச்சின் கீழ் விடுவித்து 21 ஆயிரம் ரூபா சம்பளத்தை கிளி நொச்சி, முல்லைத்தீவு மாவட்டங் களிலுள்ள அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும் தொடர்ந்து பெறக் கூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

எனவே இராணுவத்தினர் கல்வி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளில் தலையீடு செய்வதை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனவே தயவு செய்து இந் நாட்டின் முதல் மனிதன் என்ற வகையில் இலங்கையிலே எங்குமே இல்லாத இந்த முன்பள்ளிகள் மீதான இராணுவச் செயற்பாட்டினை நிறுத்தி அனைத்து ஆசிரியர்களுக்கும் இதே சம்பளத்துடன் மாகாண அரசினது கல்வி அமைச்சின் கீழ் செயற்படத் தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் இக் கடிதத்தைச் சமர்ப்பிக்கின்றேன் என அதில் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## விபத்தில் இளைஞன் படுகாயம்

வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 5.45 மணிக்குகிளிநொச்சிஉமையாள் புரம் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இதில் இந்துபுரம் முறிகண்டியைச் சேர்ந்த இராமநாதன பரணீதரன் (வயது-25) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது, கிளிநொச்சியிலிருந்து ஆனையிறவு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் உமையாள் புரத்தில் வீதியோரமாக சில்லுக்கு காற்றுப் போன நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டதிலேயே இவ் விபத்து நேர்ந்துள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிள் பலத்த சேதத்திற்குள்ளானது. (அ-2-259)




# சமுர்த்தி நிவாரணங்களை பெறமுடியாத நிலையில் பலர்

சமுர்த்தி கொடுப்பனவு, நிவாரணங்கள் வழங்குவதில் உள்ள அரசியல் பாகுபாடு காரணமாக வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பலர் இந்த உதவிகளை பெற முடியாத நிலையில் உள்ளதாக மன்னார் நகர சபை உறுப்பினர் ஏ. மெரினஸ் பெரேரா, தெரிவித்தார்.

கடல் வெள்ள நீர் உட்புகுதல் தொடர்பாக மன்னார் பள்ளிமுனை கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நகர சபை உறுப்பினர்கள் மேற்கொண்டிருந்த மக்கள் சந்திப்பில் நேற்றைய தினம் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தின் சமுர்த்தி நியமனத்தில் பாரிய முறைகேடுகளும் அநீதிகளும் இழைக்கபட்டுள்ளன. சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 90 சத வீதத்துக்கும் அதிகமானோர் அரசியலில் பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் பிரதேச செயலாளர்களுக்கும் கட்டுப்படாத தன்மையே காணப்படுகிறது.

முன்னாள் ஜனா திபதி சந்திரிகா காலத்தில் கொண்டு வரப்பட்ட இத்திட்டம் வடக்கில், மன் னார் மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்புதான் அமுல்படுத்தப்பட்டது.

சமுர்த்திக்கென தனியான அமைச்சர் இருந்த போதும் இங்கு வேறொரு அமைச்சர் மூலம் நியமனங்கள் வழங்கப்பட்டன. பொது அறிவித்தல்களோ நேர்முகப்பரீட்சைகளோ இல்லாமல் தகுதியில்லாத பலர் அரசியல் ரீதியாக உள்வாங்கப்பட்டு சமுர்த்தி நியமனத்தின் தன்மை பற்றி அறியாமல் மக்களையும் பிழையான வழியில் நடத்துகின்றனர்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்காக அரசினால் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்தினை தனி மனித அரசியல் இலாபத்துக்கு பயன்படுத்துகின்றார்கள். இதற்கெல்லாம் காரணம் உரிய துறைசார அமைச்சர்கள் இப்பகுதிகளுக்கு வராமல் விடுவதும், இப்பகுதியைச் சேர்ந்த அமைச்சரே அனைத்துத் துறைகளிலும் சம்பந்தம் இல்லாது அதிகாரம் செலுத்துவதுமே ஆகும்.

எனவே, புதிய அரசியற்துறைக்கு பொறுப்பான அமைச்சரில் நாமும் மக்களும் வைத்துள்ள நம்பிக்கை வீண் போகாது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல மாற்றங்களை செய்வதனூடாக உரிய அதிகாரி களுக்கு உரிய பணிப்புரைகளை வழங்கி மக்களின் நம்பிக்கையை அதிக ரிக்க வேண்டும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## மெய்வல்லுநர் போட்டி

(மல்லாவி)

மு/தண்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் வி.பன்னீர்ச் செல்வன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதமவிருந் தினராக துணுக்காய் வலயக் கல் விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2-15)

# பாதுகாப்பான பாடசாலை போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகள் விபரம்

(மல்லாவி)

ஜேர்மன் சர்வதேச தொழில்நுட்ப ஒத்துழைப்பகத்தின் (GIZ) அனுசரணையுடன் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் 6 கல்வி வலயங்களிலும் நடைபெற்ற பாதுகாப்பான பாடசாலை போட்டியில் மாகாணம் மற்றும் வலய மட்ட ரீதியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களை பெற்ற பாடசாலைகள் விபரம் வருமாறு,

வ/நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், மன்/மூன்றாம்பிட்டி அ.த.க.பாடசாலை, யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம் ஆகியன பெற்றுள்ளன.

வலயங்கள் ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் விபரம் வருமாறு,

**துணுக்காய் கல்வி வலயம்**

மு/மாங்குளம் மகா வித்தியாலயம், மு/கோட்டை கட்டியகுளம் அ.த.க. பாடசாலை, மு/நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை ஆகியன பெற்றுள்ளன.

**முல்லைத்தீவு கல்வி வலயம்**

மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம், மு/கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலை, மு/கலைமகள் வித்தியாலயம் ஆகியன பெற்றுள்ளன.

**வவுனியா வடக்கு கல்வி வலயம்**

வவு/நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், வவு/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், வவு/ஒலுமடு அ.த.க.பாடசாலை ஆகியன பெற்றுள்ளன.

**கிளிநொச்சி கல்வி வலயம்**

கிளி/சிவபாத கலையகம் அ.த.க. பாடசாலை, கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம், கிளி/இரணைதீவு றோ.க.பாடசாலை ஆகியன பெற்றுள்ளன.

**மடு கல்வி வலயம்**

மன்/மூன்றாம்பிட்டிஅ.த.க. பாடசாலை, மன்/தேவன்பிட்டி றோ.க. பாடசாலை, மன்/வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை ஆகியன பெற்றுள்ளன.

**தீவக கல்வி வலயம்**

யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம், யா/நாரந்தனை றோ.க.மகா வித்தியாலயம், யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் ஆகியன பெற்றுள்ளன.

மேற்படி வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கான மாகாண வலய மட்டப் பரிசில்களும் சான்றிதழ்களும் நேற்று யாழ்/இந்து மகளிர் கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன. (அ-2-15)

# அடிக்கல் நாட்டப்பட்டது



(கிளிநொச்சி)

சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் மனநலம் குன்றிய பிள்ளைகளின் வளர்ச்சிக்காக பாடசாலையொன்றினை கிளிநொச்சியில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் கிளிநொச்சி கனகபுரத்தில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு ஹவாய்த்தீவு ஆதீனத்தில் இலங்கைக்கு வருகை தந்த வேலன்சுவாமி, சண்முகநாதன் சுவாமி, மகாதேவா ஆச்சிரம தவத்திரு கணேசானந்த சுவாமி ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தனர். (அ-2-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு யார் எது செய்தாலும் எது சொன்னாலும் நீங்கள் நல்லதையே செய்யுங்கள். இதில் இருந்து பின்வாங்க வேண்டாம். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மைத்திரி செய்யும் அந்தர்வ யாகம் இலங்கைக்கு தோஷபரிகாரம் தருமா?

இந்து சமயம் வேதங்களை அடிப்படையாகக் கொண்டது. வேதங்கள் நான்கு வகைப்படும். சமயச் சடங்குகள் வேதங்களை அடிநாதமாகக் கொண்டு செய்யப்படுகின்றன. அந்த வகையில் இந்து சமயத்தில் அந்தர்வ யாகம் என்ற முக்கியமான வேள்வி ஒன்று உள்ளது.

குற்றங்கள் ஏற்படுகின்ற போது, செய்யப்படுவதே அந்தர்வ யாகம் எனப்படும். அந்தரீர பிரதிட்சை என்பதும் ஆலயங்களில் குற்றங்கள் நிகழும்கால் நடத்தப்படும் பரிகாரம் ஆகும்.

எனவே, குற்றங்கள் நடந்தேறும் போது அதற்கு பரிகாரம் காண்பது அவசியம் என்ற உண்மை இந்து சமயத்தில் கடுமையாக வலியுறுத்தப்படுகிறது. இந்து சமயத்தில் வலியுறுத்தப்படும் இந்தப் பரிகார நடைமுறை தனித்து சமயத்திற்கு மட்டுமன்றி, அரசியல் நிர்வாக விடயங்களிலும் இருத்தல் அவசியம். அப்போதுதான் பாதிப்புகள் தவிர்க்கப்பட்டு நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ்வர்.

குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதை அனுமதிக்கக் கூடாது என்பது மட்டுமன்றி நிரபராதிகள் தண்டனை பெறலாகாது என்பதும் அவசியமாகும். பாண்டிய மன்னன் குற்றமற்ற கோவலனைத் தண்டித்த தன் காரணமாக மதுரை மாநகர் எரிந்தது. மந்திரியாக இருந்து சிவப்பணி செய்த மணிவாசகரை சிறையில் அடைத்ததால் வைகை ஆறு பெருக்கெடுத்தது.

எனவே **நிரபராதிகள் தண்டனை அனுபவித்தால் அந்த நாடு பழிபாவத்திற்கு ஆளாகும் என்பது நீதி உரைக்கும் அறம்.**

ஆக, இழைக்கப்பட்ட குற்றங்களை நிவர்த்திக்கும் வகையில் பரிகாரங்கள் அவசியமானவை. அதேநேரம் பரிகாரங்களே குற்றமாகி விடக் கூடாது என்பதில் அதீத கவனம் செலுத்த வேண்டும். அந்தவகையில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதும் முதலில் அந்தர்வயாகம் செய்யும் பணியை ஆரம்பித்தமை ஒ[illegible]ாகும்.

[illegible]தல இராணுவத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பொது மக்களின் காணிகளைக் கையளித்தல், சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல், வட மாகாண சபைக்கு புதிய ஆளுநரை நியமித்தல், வடக்கில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல் என்பவற்றுடன் பட்டம் பதவி பதக்கம் ஆகியவற்றை இழந்து போன சரத் பொன்சேகாவுக்கு அவற்றை மீள வழங்கியமை, பிரதம நீதியரசராக இருந்து; முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் விலக்கப்பட்ட சிராணி பண்டாரநாயக்கவை ஒருநாளேனும் பிரதம நீதியரசராக்கி தோசம் நீக்கியமை என்பன ஜனாதிபதி மைத்திரி செய்து முடித்த அந்தர்வ யாகத்தின் ஒரு பகுதியாகும்.

எனினும் இவை போதுமானவை அல்ல, மாறாக தமிழர்களுக்கு இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் செய்த அநீதிகளுக்கும் அநியாயங்களுக்குமாக ஜனாதிபதி மைத்திரிபால செய்ய வேண்டிய அந்தர்வ யாகம் சாதாரணமானதல்ல.

வன்னி யுத்தத்தில் அகப்பட்டு அங்கவீனம் ஆகிப் போனவர்களுக்கு மாதாந்த உதவித் தொகை, வீடு இழந்தவர்களுக்கு வீடு, போரில் கொல்லப்பட்டவர்களுக்கு இழப்பீடு, அதிலும் அரச உத்தியோகத்தர்களுக்கு இழப்பீட்டுடன் அக்ரகார காப்புறுதிக் கொடுப்பனவு, காணாமல் போனவர்கள் தொடர்பில் நீதி விசாரணை, ஆயுததாரிகளால் பாதிப்படைந்த பொதுமக்களுக்கு நிவாரணம் என்றவாறாக அந்தர்வ யாகம் செய்ய வேண்டும். இது செய்யப்படும் போதுதான் இந்த நாட்டின் சாபங்களும் தோசங்களும் நீங்கும்.

தோசத்தை நீக்காமல் எது செய்தாலும் அதனால் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம்.

## காணாமல் போனோரை மீட்டுத்தரக் கோரி கிளிநொச்சியில் மாபெரும் கவனயீர்ப்பு

வடக்கு கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கடந்த காலத்தில் அராஜக அரசாங்கங்கள் மற்றும் ஒட்டுக்குழுக்களின் கடத்தல்களால் காணாமல் போகச் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான உறவுகளை மீட்டுத்தரக்கோரி தற்பொழுது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தலைமையில் உருவாகி இருக்கும் நல்லாட்சிக்கான அரசாங்கத்தை நோக்கி எதிர்வரும் 2-ம் நாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி ஏ9 வீதியிலுள்ள பழைய கச்சேரிக்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்த கிளிநொச்சி மாவட்ட காணாமல் போனோருக்கான அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

கடந்தகாலத்தில் பெரும் போர்களின் போதும் குறிப்பாக முள்ளிவாய்க்காலில் முடிந்த வகைதொகையற்ற மானுடக் கொலைகள் நடைபெற்ற போரின் போதும் அதன் பின்பும் பலர் காணாமல் போகச் செய்யப்பட்டனர். காணாமல்போன தமிழ இளைஞர் யுவதிகளை தேடி அலைந்து அவர்களின் பெற்றோர்களும் மனைவி மற்றும் உறவுகளும் எதுவித பயனுமற்று கண்ணீருடன் ஏக்கத்துடன் இன்றும் வாழும் நிலையில் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றமும் அந்த ஆட்சியாளர்களின் நூறு நாள் வேலை திட்டமும் தமிழ் மக்களின் வாழ்வில் நிம்மதியையும் சுபீட்சத்தையும் கொண்டுவருமென ஒட்டுமொத்த தமிழினம் எதிர்பார்க்கிறது.

இந் நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இந்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சகல பாராளுமன்ற உறுப்பினர்கள், சகல மாகாண சபை மற்றும் நகர பிரதேச சபை உறுப்பினர்கள், மகளிர் அணியினர், இளைஞர் அணியினர், கட்சி நிர்வாகிகள் கலந்துகொள்ள வேண்டுமெனவும் சமூகத்தின் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், புத்திஜீவிகள், பொது சன அபிமானமுள்ள சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்களென திரண்டு காணாமல் போன உறவுகளை மீட்டுத்தரக்கோரியும் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுவிக்க கோரியும் திரண்டு குரல் கொடுக்கவேண்டுமென கிளிநொச்சி மாவட்ட காணாமல் போன உறவுகளின் அமைப்பு மிக நேசமுடன் எதிர் பார்த்து நிற்கின்றது.

கிளிநொச்சியில் எதிர்வரும் திங்கட்கிழமை ஏ9வீதியிலுள்ள பழைய கச்சேரிக்கு முன்பாக காலை 9 மணிக்கு இந்த கவனயீர்ப்பு நடைபெறுவதுடன் எதிர்வரும் 9ம் நாள் திங்கட்கிழமை காலை 9மணிக்கு கவனயீர்ப்பு போராட்டம் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நடைபெறும் எனவும் காணாமல் போன உறவுகளின் அமைப்பு தெரிவித்துள்ளது. இதற்கு ஒரு தீர்வு எட்டும் வரை மாவட்டம் தோறும போராட்டம் நடத்தப்படுமெனவும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கீரிமலை நகுலேஸ்வரன் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியானது இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை பொது மைதானத்தில் பாடசாலை அதிபர் த.தயானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் சிறப்ப விருந்தினராக வலிகாமம் உதவிப் பணிப்பாளர் கோ.குலபாலசிங்கம் கௌரவ விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பனர் வே.சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

## அமெ.உதவி ராஜாங்க செயலர் அடுத்த வாரம் இலங்கை வருகை

(கொழும்பு)



இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் தெற்கு மற்றும் மத்திய கிழக்காசிய நாடுகளுக்கான அமெரிக்க உதவி ராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால் அடுத்த வாரம் இலங்கை வருகிறார்.

இலங்கை வரும் அமெரிக்க உதவி ராஜாங்க செயலாளர் தற்போது அரசில் உள்ள முக்கியஸ்தர்கள் உட்பட பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்துவார் என தெரிவிக்கப்படுகின்றது.

பிஸ்வால் ஜனநாயகத்தை வலுப்படுத்துவது தொடர்பான கோரிக்கையை இவ் விஜயத்தின் போது முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர விரைவில் அமெரிக்காவுக்கு பயணம்மேற்கொண்டு இராஜாங்க செயலாளர் உட்பட திணைக்களத்தின் முக்கிய அதிகாரிகளைச் சந்திப்பதற்கு முன்பாக இந்த விஜயம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிஷா பிஸ்வால் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பிலான விசாரணையில் போதிய முன்னேற்றம் காணப்படாமை தொடர் பில் சர்வதேசத்தின் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்ததுடன் இதன்காரணமாக சர்வதேச விசாரணைகளுக்கு அழைப்பு விடுப்பதற்கான சாத்தியக் கூறுகளை சூசகமாக வெளியிட்டிருந்தார்.

இதேபோன்று நாட்டில் மோசமடைந்து செல்லும் மனித உரிமை நிலைமை சிறுபான்மையினர் மீதான மதத் தாக்குதல்கள் குறித்தும் கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இந்திய விஜயத்தின் போது இலங்கையில் ஜனநாயகத்தினை நிலைநாட்டுவதற்கு புதிய நம்பிக்கை ஒன்று பிறந்துள்ளது எனக் குறிப்பிட்டர்.(செ-11)

### அமைதியின் சொற்கள்

என் செய்தி உணர்ந்து பாருங்கள் என்பது தான். அதைப்பற்றி பேசுவது மட்டுமல்ல, ஆராய்வது மட்டுமல்ல, அதற்கு காரணம் கொடுத்து ஞாயப் படுத்தப் பார்க்காமல், உணர்ந்து பார்க்க வேண்டும். *பிரேம்ரவதி*

## சர்வதேச விசாரணைக்கு அரசு அனுமதியளிக்காது

### உள்நாட்டிலேயே விசாரணை-ராஜித


(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் யுத்தக்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு அனுமதியளிக்காது என குறிப்பிட்டுள்ள அமைச்சர் ராஜித சேனரத்தின, உள் நாட்டு விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாணத்தில் இராணுவத்தினரிடம் உள்ள தனியார் நிலங்களை ஒப்படைப்பதற்கும்,அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதற்கும் புதிய அரசாங்கம் எண்ணியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனரத்தின தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் வடமாகாணத்தில் இராணுவபிரசன்னத்தை குறைக்கும், கடந்த அரசாங்கத்தை போன்று இராணுவ நடவடிக்கைகள் மூலமாக மாத்திரம் பயங்கரவாதத்தின் மீள் எழுச்சியை கட்டுப்படுத்தலாம் என இந்த அரசாங்கம் கருதவில்லை,

குறிப்பாக வடமாகாணத்தை பொறுத்த வரை அவ்வளவு பாதுகாப்பு நடவடிக்கைகளும் அவசியம் என நாங்கள் கருதவில்லை. [illegible] நடவடிக்கைகளுக்காக கைப்பற்றப்பட்ட நிலங்களை பொதுமக்களிடம் மீள வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்,



முன்னைய அரசாங்கம் எப்போதும் தோற்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் மீள் எழுச்சி குறித்தே சிந்தித்துகொண்டிருந்தது.

இராணுவநடவடிக்கைகளால் மாத்திரம் அதனை தடுக்க முடியும் என நாங்கள் கருதவில்லை.

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 275 தமிழர்களை விடுதலைசெயவது குறித்து ஆராயந்துவருகின் றோம், அவர்கள் வெறுமனே சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டவர்கள் என அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

### இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

**அன்புடன் வாழ்வோம்**

❖ மனிதர்கள் செய்த உதவியை சிந்திப்பதை விட இறைவன் செய்த உதவியை சிந்தனை செய்வீர்!

❖ நீங்கள் செய்த நன்மைகளை சிந்திப்பதை விட உங்களில் நிகழ்ந்த பாவங்களைச் சிந்தியுங்கள்.

❖ மற்றவர்களின் குற்றங்களை நோட்டமிடுவதை விட உங்களின் குற்றங்களை நோட்டமிடுங்கள்.

❖ உன் வாயிலாக இறைவன் ஒரு மனிதனுக்கு நேர்வழி காட்டுவது, இவ்வுலகத்தையும் இதிலுள்ள யாவற்றையும் விட உனக்கு நன்மை பயப்பதாகும்.

❖ எவர் அண்டை வீட்டாரை துன்புறுத்துகிறாரோ, அவர் என்னைத் துன்புறுத்தியவராவார்.

❖ அன்பு செலுத்தாதவன் அன்பு செலுத்தப்படுவதற்கு அருகதை அற்றவன்.

❖ தருமம் செய்ய இயலாதவன் ஒரு நற்செயல் செய்வானாக அல்லது ஒரு கெட்ட செயலிலிருந்து விலகிக் கொள்வானாக. அதுவே அவனது ஈகை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## சதத்துடன் சங்கக்காரா உலக சாதனை

# 7வது போட்டியில் இலங்கை வெற்றி
# தொடரை வென்றது நியூசிலாந்து




வெலிங்டனில் நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற 7ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை 4:2 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது. முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்ட த்தை தேர்வு செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 287 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை அணியில் அபாரமாக விளையாடிய குமார் சங்கக்காரா சதம் அடித்து அசத்தினார். சங்கக்காரா 105 பந்துகளில் 14 பவுண்டரி உட்பட 113 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.




மேலும் டில்ஷான் 81 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். நியூசிலாந்து அணி பந்துவீச்சில் கோரி ஆண்டர்சன் 3 விக்கெட் வீழ்த்தினார். இதனை அடுத்து 288 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 45.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 253ஓட்டங்கள் எடுத்து தோல்வியை தழுவியது. நியூசிலாந்து அணியில் அதிகபட்சமாக வில்லியம்சன் 54ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மேலும் ரோஞ்சி 47, வெட் டோரி 35, மில்ஸ் 30, ஆண்டர் சன் 29 ஓட்டங்களஎடுத்து ஆட்ட மிழந்தனர். இந்த போட்டியில் இலங்கை அணி வீரர் குமார் சங்கக்காரா உலக சாதனை படைத்தார். அவர் ஒருநாள் போட்டிகளில் இதுவரை 473 பேரை அவுட்டாக்கியுள்ளார். கோரி ஆண்டர்சனை அவுட்டாக்கியதன் மூலம் இந்த உலக சாதனையை படைத்தார். இதற்கு முன் அவுஸ் திரேலிய வீரர் கில்கிறிஸ்ட் 472 பேரை அவுட்டாக்கியது குறிப்பிடத்தக்கது.



இலங்கை அணி பந்து வீச்சில் எரங்கா, குலசேகரா, சமீரா ஆகியோர் தலா 2 விக்கெட் விழ்த்தினர். இதனால் 7 போட்டிகள் கொண்ட தொடரை நியூசிலாந்து அணி 4:2 என்ற கணக்கில் வென்று அசத்தியது. ஆட்டநாயகன் விருது சங்ககாராவிற்கு வழங்கப்பட்டது. தொடர் நாயகனாக வில்லியம்சன் தேர்ந் தெடுக்கப்பட்டார். (க)

# ‘முல்லைக் கிண்ணம்’ கூடைப்பந்தாட்ட போட்டி



முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் "முல்லைக் கிண்ணம்-2015" சுற்றுப் போட்டி கடந்த 24,25 ஆம் திகதிகளில் மு/மல்லாவி மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றது.

வடமாகாண ரீதியாக ஆண்கள் அணிகளுக்கிடையே நடத் தப்படவுள்ளது. இச்சுற்றுப்போட்டியில் வடமாகாணத்தின் முன்னணி அணிகள் பல பங்குபற்றின.

போட்டிகளின் ஆரம்ப வைபவத்தில் விருந்தினர்களாக மு/ மல்லாவி மத்திய கல்லூரி அதிபர், துணுக்காய் பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளை ஆரம்பித்து வைத்தனர்.

இடம்பெற்ற போட்டிகளின் படி கே.கே.எஸ் விளையாட்டுக் கழகமும் முல்லைத்தீவு ஏ விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 43:36 என்னும் புள்ளிகள் கணக்கில் கே.கே.எஸ்.விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது,

முல்லைத்தீவு ஏ விளையாட்டுக் கழகமும் வவுனியா விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 39:37 கே.கே.எஸ் விளையாட்டுக் கழகமும் முல்லைத்தீவு ஏ விளை யாட்டுக் கழகமும் மோதிய போட்டி யில் 43:36 என்னும் புள்ளிகள் கணக்கில் கே.கே.எஸ் விளையாட் டுக் கழகம் வெற்றி பெற்றது,

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 47:25 என்னும் புள்ளிகள் கணக்கில் சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது, முல்லைத்தீவு பீ விளையாட்டுக் கழகமும் கேசீசீ விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 37:17 எனும் புள்ளிகள் கணக்கில் கேசீசீ விளையாட் டுக்கழகம் வெற்றி பெற்றது,

முல்லைத்தீவு பீ விளை யாட்டுக் கழகமும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதிய போட்டியில் 46:34 என்னும் புள்ளிகள் கணக்கில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது,

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் கேசீசீ விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 59:50 என்னும் புள்ளிகள் கணக்கில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது,

கே.கே.எஸ் விளையாட்டுக் கழகமும் வவுனியா விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 42:34 என்னும் புள்ளிகள் கணக்கில் கே.கே.எஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது,

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் முல்லைத்தீவு பீ விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 58:29 என்னும் புள்ளிகள் கணக்கில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் கேசீசீ விளையாட்டுக்கழகமும் மோதிய போட்டியில் 56:34 என்னும் புள்ளிகள் கணக்கில் கேசீசீ விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (க-23)

## அவுஸ்திரேலிய ஓபன் டெனிஸ்; இறுதிப் போட்டியில் மரியா, செரீனா



அவுஸ்திரேலிய ஓபன்டெனிஸ்போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதி போட்டிக்கு மரியா ஷரபோவா மற்றும் செரீனா வில்லியம்ஸ் தகுதி பெற்றுள்ளனர். அரையிறுதி போட்டியில் ஷரபோவா அவர் தனது சொந்த நாடான ரஷ்யாவைச் சேர்ந்த மாக்கரேவாவை எதிர்கொண்டார். இப்போட்டியில் ஷரபோவா 63:62 என்ற கணக்கில் மாக்கரேவாவை வீழ்த்தி இறுதி போட்டிக்கு தகுதி பெற்றார். மற்றொரு அரையிறுதி போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், மடிசன் கீஸ் மோதினர். இப்போட்டியில் செரீனா வில்லியம்ஸ் 7:6, 6:2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றார். (க)

விளையாட்டுச் செய்திகள்

## இல்லமெய்வல்லுநர் போட்டி

கோப்பாய் கிறிஸ்தவ க[illegible]யின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பி.ப 1.00 மணியளவில் நடைபெறவுள்ளது. விளையாட்டுப் போட்டிக்கு முன்னாள் அதிபர் த.முத்துக்குமாரசாமி பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய ஆசிரியை திருமதி ய. சந்திரலிங்கமும் கிராமசேவையாளர் திருமதி ர.றஜீவனும் கலந்து சிறப்பிக்கின்றனர். (க-23)

▪ ▪ ▪ ▪ ▪ ▪ ▪ ▪ ▪ ▪ ▪ ▪ ▪ ▪ ▪

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர போட்டி அதிபர் ஜி.விமலன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இன்று மதியம் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக கல்வி அமைச்சின் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.ராஜேந்திரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியர். டீ.பிரகாசன் கலந்து கொள்வார்.

நிகழ்வுகளில் வெற்றி பெறும் வீர வீராங்கனைகளுக்கான பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி ச.ராஜேந்திரன் வழங்குவார்.(க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி சலுகைகளுடன்...

புதிய அரசாங்கம் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில தலைமையிலான புதிய அரசாங்கம் இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில், மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான வாக்குறுதிகளையும் அரசாங்கத்தின் செலவுகளைக் குறைப்பதற்கான திட்டங்களையும் முன்வைத்துள்ளது.

ஏற்கெனவே தேர்தல் வாக்குறுதியில் உறுதியளித்திருந்ததன்படி, அரச ஊழியர்களுக்கு அடுத்த மாதம் முதல் 5 ஆயிரம் ரூபா சம்பளம் உயர்த்துவதாக புதிய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மேலும் 5 ஆயிரம் ரூபாய் உயர்த்தி அரச ஊழியர்களின் சம்பளத்தை மொத்தமாக 10 ஆயிரம் ரூபாயால் அதிகரிப்பதாக கருணாநாயக்க கூறினார்.

தனியார் துறை ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் சம்பள உயர்வு வழங்கு மாறும் நிதிய மைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமைய அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் இவ்வாண்டு 47 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் மிகப் பெரிய சம்பள அதிகரிப்பாகும்.

இதேவேளை GSP+ சலுகையை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இச்சலுகை நிறுத்தப் [redacted]டமையினால் இலங்கைக்கு மாதாந்தம் 5 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர் நட்டமேற்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் ஓய்வூதியம் ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளது. சமுர்த்தி கொடுப்பனவு இவ்வாண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் 200 ரூபாயால் அதிகரிப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரஜைகளின் வைப்புக்கான வட்டி வீதத்தை ஒரு மில்லியனாக அதிகரித்து அதற்கான வட்டி வீதத்தை 15 வீதமாக வழங்கப்படும்.

இலத்திரனியல் அட்டைகளினூடாக சலுகைகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதுடன் பிறக்கும் பிள்ளைகளுக்கு 20 ஆயிரம் ரூபாய் உடனடியாக வழங்க நடவடிக்கை.

[redacted] சலுகையாக வணிகக் [redacted] லட்சமாகவும் வரி 50 வீதமாக குறைக்கப்படும்.

தாவர வகை - நெல் போன்றவற்றுக்கான விலை கீழ்வருமாறு:

நெல் - 50.00, கிழங்கு 80.00, தேயிலைக் கொழுந்து 80.00, றப்பர் 350.00

தற்போதுள்ள பசளைக்கான சலுகை விலை தொடர்ந்தும் வழங்கப்படும்

பால் ஒரு லீட்டரின் விலை 60 ரூபாயிலிருந்து 70 ரூபாயாக எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் அதிகரிக்கப்படும்

ஊழல் மிகு, தேசத்துக்கு மகுடம் திட்டத்திற்கான 3400 கோடி ரூபாய் நிறுத்தப்படும்.

மருத்துவமனைகளின் வெளிநோயாளர் பிரிவு 24 மணிநேரமும் இயங்கும்

சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்படும்.

கல்விக்கான ஒதுக்கீடு தேசிய வருமானத்தில் 6 வீதமாக அதிகரிக்கப்படும்.

மேலும் வாழ்க்கைச் செலவு கீழ்வருமாறு குறைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெயின் விலை முன்னர் குறைக்கப்பட்ட விலையை விட குறைக்கப்பட்டு 59 ரூபாயாக விற்கப்படும்.

13 அத்தியவசியப் பொருட்களின் விலை குறைப்பு:

சீனி ஒரு கிலோவின் விலை10.00 ரூபாயால் குறைப்பு, 400 கிராம் பால்மாவின் அதிகூடிய சில்லறை விலை 325.00, கோதுமை மாவின் விலை 12.50 குறைப்பு, பாண்- ரூ.6.00 குறைப்பு, நெத்தலி கருவாடு ரூ.15.00 குறைப்பு, ஒரு கிலோ பாசிப்பயறு ரூ.30.00 குறைப்பு, டின்மீன் விலை ரூ.60.00 குறைப்பு, கொத்தமல்லிக்கான விஷேட பண்ட வரி 30 ரூபாயால் குறையும், ஒரு கிலோ உழுந்து ரூ.60.00 குறைப்பு, சமையல் எரிவாயு ரூ.300.00 குறைப்பு, ஒரு கிலோ மாசி கிலோ 200.00 ரூபாயால் குறைப்பு,

அரசவங்கிகளில் 2லட்சம் ரூபாவுக்கு மேல் நகை அடகு வைத்திருப்பவர்களுக்கான வரி தள்ளுபடி, அதிசொகுசுவாய்ந்த வீடுகளுக்கு வருடாந்தம் ஒரு மில்லியன் ரூபாய் இல்ல வரி, இலங்கை பிரஜாவுரிமையை கை விட்டு செல்கின்றவர்கள் கொண்டு செல்லும் பணத்துக்கு 20 சதவீதம் வரி, சொகுசு வீடுகளுக்கு ஒரு தடவை மட்டும் வரி அறவிடப்படும், 2,000 மில்லியன் ரூபாவுக்கு கூடுதலாக வருமானம் பெறுவோருக்கு 20 சதவீதம் வரி, உற்பத்தியின் போது செலுத்தப்படும் ஆகக்குறைந்த வரிமட்டம் 750,000 வரை உயர்த்தப்படும், 1,000 இயந்திரவலுவுக்கு குறைவான வாகனத்துக்கான வரி 15 சதவீதம் குறைப்பு,

சீமெந்து மற்றும் உருக்கு க்கான தீர்வை குறைப்பு. இதன் மூலம் சீமெந்து மூடையொன்றின் விலை 90 ரூபாயால் குறையுமென எதிர்பார்ப்பு,

மோட்டார் வாகனங்களை சேகரிக்கும் நிறுவனங்கள் செலுத்தாத வரிகளை மீளப் பெற யோசனை. இதன் மூலம் 12 ஆயிரம் மில்லியன் வருமானம் எதிர்பார்ப்பு.

மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி சேகரிக்கும் நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய வரிக்கு தள்ளுபடி.

எதனோல் இறக்குமதியை கட்டுப்படுத்த சுங்க பிரிவுகளில் ஸ்கேன் இயந்திரம் பொருத்த நடவடிக்கை.

5 ஆயிரம் ரூபாயாக இருந்த திருமண மற்றும் பதிவுக்கட்டணம் ஆயிரம் ரூபாயாக குறைப்பு,

25 சதவீதமாக இருந்த அலைபேசிகளுக்கான மீள்நிரப்பு அட்டைக்கான வரி குறைப்பு,

விளையாட்டு நிகழ்ச்சிகளை மட்டும் ஒளிபரப்பும் தொலைக்காட்சிகளுக்கு ஆயிரம் மில்லியன் ரூபாய் வரி,

மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு விலைமனுக்கோரல். ஒருவருக்கு 3 அனுமதிப்பத்திரமே வழங்கப்படும். மதுபான அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணம் 2 மடங்காக அதிகரிக்கப்படும்,

அங்கவீனமடைந்த இராணுவ வீரர்களுக்கு, ஆகக்குறைந்தது 5 இலட்ச ரூபாய் கடன்,

மஹாபொல புலமைப்பரிசில் 5 ஆயிரம் ரூபாயால் அதிகரிப்பு,

அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு 250 ரூபாய் கொடுப்பனவு,

ஸ்ரீ லங்கன் மற்றும் மிஹின் லங்கா நிறுவனங்களின் நட்டம் நாட்டுக்கு பெரும் பாரமாக இருப்பதனால் இரு நிறுவனங்களும் இணைக்கப்படும். இந்நிறுவனங்களினால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு 100 பில்லியன் ரூபாயை கடந்தது,

சிரேஷ்ட பிரஜைகளுக்கான பஸ் கட்டணம் 50 சதவீதத்தால் குறைப்பு, மீனவர்களுக்கு ஆயுட் காப்புறுதி 250 ரூபா செலுத்தி வங்கிக் கணக்கு ஆரம்பிக்க நடவடிக்கை.

அரச நிறுவனங்கள் அரசசெலவில் விளம்பரம் செய்தல் நிறுத்தப்பட வேண்டும் என பல திட்டங்களை உள்ளதாக இடைக்கால பட்ஜெட் வரையறை செய்யப்பட்டுள்ளது.(செ-11)

## நாவலர் வித்தியாலய பரிசளிப்பு விழா

(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசாவும், சிறப்பு விருந்தினராக முத்துக்குமாரசாமி தம்பதியினரும் கலந்து கொள்வர். (ரு)

# இங்கிலாந்து-இந்தியா இன்று பலப்பரீட்சை




இங்கிலாந்து-இந்தியா அணிகள் மோதும ஒருநாள் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இது குறித்து இந்திய அணித் தலைவர் தோனி தெரிவிக்கையில்,

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளை பொறுத்த வரையில் கடைசி 10 ஓவர்களில் ஓட்டங்களை குவிப்பது மிக முக்கியம் என அணித் தலைவர் தோனி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பெர்த்தில் இன்று இங்கிலாந்து-இந்தியா மோதும் கடைசி லீக் போட்டி நடைபெறவுள்ளது.

வெற்று பெறும் அணி இறுதிச்சுற்றில் அவு ஸ்திரேலியா அணியுடன் மோதும்.

இந்நிலையில் இதுகுறித்து அணித்தலைவர் தோனி கூறுகையில், ஒருநாள் போட்டியை பொறுத்த வரையில் ஜோடி சேர்ந்து ஓட்டங்களை எடுப்பது மிக முக்கியம்.

போதிய ஓட்டங்கள் இல்லாமல் 2 போட்டிகளில் பந்து வீச நேரிட்டது. வீரர்கள் தங்களது சிறு தொடக்கத்தை பெரிய இன்னிங்சாக மாற்றத் தவறுகின்றனர்.

இந்த 2 போட்டிகளில் இதனை நாங்கள் செய்யவில்லை. கடைசி ஓவர்களில் அதிக ஓட்டங்களை எடுக்க முடியாமல் போனது.

இதனை சரிசெய்ய பல உத்திகளை பரிசீலனை செய்து வருகிறோம்.

கடைசி 10 அல்லது 12 முக்கிய ஓவர்களில் ஓட்டங்களை குவிப்பது அவசியம், அதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (க)

# ரொனால்டோவை தண்டியுங்கள் பிரேசில் வீரர் நெய்மர் கோரிக்கை



எதிரணி வீரரை அறைந்தும், உதைத்தும் முரட்டுத்தனமாக நடந்து கொண்ட பிரபல வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என பிரேசில் வீரர் நெய்மர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஸ்பெயினில் தற்போது லா லிகா கால் பந்துத் தொடர் நடந்து வருகிறது. இதில் பார்சிலோனா அணி சார்பில் நெய்மரும், ரியல் மாட்ரிட் அணியில் கிறிஸ்டியானோ ரொனால்டோவும் விளையாடி வருகின்றனர்.

இந்நிலையில் ரியல் மாட்ரிட்- கொர்டோபா ஆகிய அணிகளுக்கு இடையிலான போட்டியின் போது ரியல் மாட்ரிட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆனால் போட்டியின் நடுவே ரொனால்டோ நடந்து கொண்ட விதம் சர்ச்சையை ஏற்படுத்தியது.

கொர்டபோ அணியின் தடுப்பாட்டக்காரர் எடிமர் பிராகாவை ஒரு கட்டத்தில் திடீரென உதைத்த ரொனால்டோ, இன்னொரு வீரரான ஜோஸ் கிரஸ்போவை கன்னத்தில் அறைந்து விட்டார். இதனால் சிவப்பு அட்டை கொடுக்கப்பட்டு போட்டியிலிருந்து விலக்கப்பட்டார்.


இச்சம்பவம் குறித்து நெய்மர் கூறுகையில், இது தவறான செயல், அவரை கடுமையாக தண்டிக்க வேண்டும்.

முன்கள வீரர்களுக்கு இதுபோல நேரிடுவது இயல்புதான், ஆனால் இது தவறானது, நாம் தான் அடக்கமாக இருக்க வேண்டும்.

ஜினெடின் ஜிடேனுக்கும் இதுபோல நேர்ந்துள்ளது, எனக்கும் நேர்ந்துள்ளது.

ரொனால்டோவையும் அதுபோலத்தான் எதிரணியினர் தூண்டியுள்ளனர். ஆனால் அதற்காக எதிரணியினரை உதைப்பது, அறைவது என்பது தவறானது. கண்டிப்பாக அவரைத் தண்டிக்க வேண்டும், கடுமையாக தண்டிக்க வேண்டும் என்று கோபமாக கூறியுள்ளார். (க)

# 2016 இருபது-20 உலகக்கிண்ணம் இந்தியாவில் நடைபெறவுள்ளது




இந்தியாவில் வருகிற 2016ம் ஆண்டு இருபது-20 ஓவர் உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளது.

20 ஓவர் உலக கிண்ணப் போட்டிகள், 2016-ஆம் ஆண்டு மார்ச் 11-ல் தொடங்கி ஏப்ரல் 3-ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

நேற்று டுபாயில் ஐசிசி சபைக் கூட்டத்தில் திகதிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதே போன்று 2017-ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகள் இங்கிலாந்தில் ஜூன் 1 முதல் 19-ஆம் திகதி வரை நடைபெறும்.

2019-ஆம் ஆண்டு உலக கிண்ணப் போட்டிகளும் இங்கிலாந்தில் மே 30-ஆம் திகதி முதல் ஜூன் 15-ஆம் திகதி வரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொந்த இடங்...

மாகாண முதலமைச்சரினை சந்தித்துப் பின்னர் யாழ் பொது நூலகத்திற்கு சென்று மக்கள் சந்திப்புக்களிலும் ஈடுபட்டார்.

அதன் பின்னர் பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் சபாபதிபிள்ளை முகாமிற்கு சென்று அங்குள்ள மக்களினைச் சந்தித்ததோடு பாடசாலை மாணவர்களுக்கு சப்பாத்துக்களினையும் வழங்கி வைத்தார்.

இந்திகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணம் வந்திருந்தார். நான் இரண்டாவது தடவையாக வந்துள்ளேன்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டு வருகின்ற ஏனைய மாற்றங்களோடு உங்களுக்கும் மாற்றம் ஏற்படும் என நம்புகின்றேன்.

பாடசாலைக்குச் செல்லும் போது நாம் வழங்கியுள்ள சப்பாத்துக்களினை அணிந்து கொண்டு செல்லலாம்.

உங்களுடைய சொந்த இடங்களிற்கும் இதே சப்பாத்துக்களினை அணிந்து கொண்டு செல்லுங்காலம் வரும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இதன்போது வலி வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சுகிர்தன் மற்றும் வலி வடக்கு மீள்குடியேற்றக்குழுவின் தலைவர் எஸ்.சஜீவன் ஆகியோர் வலி வடக்கில் இராணுவம் பிடித்து வைத்துள்ள காணிகள் விடுவிக்கப்படவேண்டிய காணிகள் குறித்தும் பிரிட்டன் அமைச்சருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர். (செ-4)

## அரச ஊழியர்...

ச்சர் இவ்வாறு தெரிவி ததுள்ளார்.

பெப்ரவரி மாதம் 5ஆயிரம் ரூபாயும் ஜூன் மாதம் 5ஆயி ரம் ரூபாயும் அதிகரிக்கப்படும்.

இதே வேளை தனியார் ஊழியர்களுக்கு 2ஆயிரத்து 500 ரூபாய் சம்பள உயர்வு வழங்குமாறு தனியார் நிறுவன உரிமையாளர்களிடம அமைச்சர் ரவி கருணாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## பயங்கரவாதத்...

ப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள கீழே தரப்படுகிறது, இலங்கை மக்களின் சமாதானமான வாழ்வை உறுதிப்படுத்தும் பொருட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சகல அரசியல் கட்சிகளின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளையும் ஜனாதிபதியையும் இச்சபை கோருகிறது.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் போது சபை பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டது.

1) இந்தச் சட்டம் அப்பாவிப் பொதுமக்களை விசாரணை எதுவுமின்றி தன்னிச்சையாகக் கைதுசெய்து தடுத்து வைக்க பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அதிகாரமளிக்கிறது. மேலும் பொய்க் குற்றச்சாட்டுக்களை புனைந்து அப்பாவிப் பொதுமக்களை காலவரையறையின்றி தடுத்து வைக்க வாய்ப்பளிப்பதுடன் ஊழல் முறைக் கேட்டுக்கும் வழி வகுத்துள்ளது.

2) பொலிஸாரால் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி எவரையும் பயங்கரவாதச் சட்டத்தில் சிக்க வைக்கவும், பிணை வழங்குவதை மட்டுப்படுத்தவும் இந்தச் சட்டம் வழிவகுத்துள்ளது.

3) தடுத்து வைக்கப்படும் காலத்தில் எவரையும் துன்புறுத்தவும், கட்டாய வாக்குமூலங்களைப் பெறவும் அதிகாரிகளால் முடிகிறது.

4) பொதுவாக இந்தச் சட்டம் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை முழுமையாக மீறுகின்றது.

5) இந்தச் சட்ட ஏற்பாடுகள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடின்றியும், வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கைச் சேர்ந்தவர்கள் என்ற வேறுபாடின்றியும் சகல மக்களது கருத்துத் தெரிவிக்கும் உரிமைகளை நசுக்கவும் உபயோகப்பட்டுள்ளது.

எனவே 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் இந்தச் சட்டத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வேண்டுகின்றோம். என்றுள்ளது. (செ-11)

## சர்வதேச விசா...

ஆட்சி மாற்றத்தின் பின்னரும் இங்கு பல சிக்கலான விடயங்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமாகிய சி.வி.விக்னேஸ்வரனுடனான சந்திப்பொன்று யாழ்ப்பாணத்தில் உள்ள முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போதே முதலமைச்சரிடம் அவர் மேண்டவாறு தெரிவித்தார்.

சந்திப்புத் தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் முதலமைச்சர் தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கம் வந்த பிற்பாடு வட மாகாணத்தை பொறுத்தவரையில் ஏற்பட்ட மாற்றங்கள் சிந்தனையில் ஏற்பட்ட வேறுபாடுகள் தொடர்பில் கேட்டுக்கொண்டார்.

புதிய அரசாங்கம் எங்களுக்குப் பல நன்மைகளை செய்து வருவதைக் கூறினேன். வட மாகாண ஆளுநர், பிரதம செயலாளரை மாற்றியதும் வரவேற்கத்தக்கது. பெரியது என்று பார்த்தால் இராணுவத்தை வெளியேற்றுவதுதான் முக்கியமானதொன்று அல்லது இராணுவம் பிடித்து வைத்துள்ள பொது மக்களின் காணிகளைக் குறைத்து மக்களுக்கு திருப்பிக் கொடுப்பதுதான் முக்கியமான பிரச்சினை என்பதைக் குறிப்பிட்டேன்.

அதற்கு இராணுவம் பிடித்து வைத்துள்ள காணிகளை விடுவிக்கப்போவதாக அரசு அறிவித்துள்ளதாக, பிரிட்டன் தூதுவர் கூறினார். அதற்குப் பிரதம மந்திரி இங்குள் இராணுவ முகாம்களை அகற்றமாட்டேன் எனக் கூறியதையும் சுட்டிக்காட்டி இது குழப்பமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளதையும் சுட்டிக்காட்டினேன்.

இது சம்பந்தமாக் நாங்கள் மீள்குடியே... அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுடன் பேசியத... தேவையான இடங்களை வைத்துக்கொண்டு ஏனைய இடங்களை திருப்பித்தருவதாகக் கூறியிருந்தார்.

திருப்பித்தருகின்ற காணிகளை நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என கேட்டார். அதற்கு நான், சென்றமுறை பிரிட்டன் பிரதமர் வந்த போது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு முகாம்களில் தங்கியுள்ள மக்களை அவரே நேரில் சென்று சந்தித்ததை நினைவு படுத்தியிருந்தேன்.

ஆகவே இராணுவம் பிடித்து வைத்துள்ள காணிகள் மக்களின் சொந்த இடங்களா? அரச காணிகளா? எனக் கேட்டார்.

அதற்கு நான் சொந்த இடங்கள் தான் எனக்கூறியிருந்தேன்.

வெளிமாகாண மக்கள் இங்கு குடியேறுவதால் பாரிய மாற்றத்தினை ஏ... கேட்டார்.

அதற்கு நான், இன்னும் பத்து வருடங்களுக்குள் 99 வீதம் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட வட மாகாணத்தில் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வரக்கூடிய கட்டம் வரலாம் எனக் கூறியிருந்தேன்.

விகிதசாரப் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக எடுத்துப்பார்த்தால் 12.5 வீதம் ஒரு கட்சிக்கு கிடைத்தால் அந்தக் கட்சியில் உள்ளவருக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கிறது என அவருக்கு தெளிவுபடுத்தினேன்.

அப்பொழுதுதான் இங்குபாரிய சிக்கலான விடயங்கள் நடைபெறுகின்றன என்பதை ஏற்றுக்கொண்டார்.

போர்க்குற்ற விசாரணை தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுவதாக தெரிவித்தேன் குறிப்பாக எதிர்வரும் மார்ச் 28 ஆம் திகதி ஐ.நா தீர்மானம் கொண்டுவரப்படாமல் தாமதப்படுத்தப்படுமோ என்ற அச்சம் மக்களிடம் இருக்கிறது.

தங்களைப் பொறுத்தவரையில் அவ்வாறான தாமதம் இருக்கப் போவதில்லை என அவர் கூறினார்.

ஆனால் இதனை விசாரணைக்கு வித்திட்ட நாடுகள் தான் தீர்மானிக்கும் எனவும் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் கூறியிருந்தார் என முதலமைச்சர் தெரிவித்தார். (செ-4)


எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்....

STUDENT VISA – WORK VISA MIGRATION / PR

UK, Australia, New Zealand, Switzerland, Germany, France, Denmark, Norway, Netherlands, China, Russia, Italy, Canada, America, Malaysia, Singapore & More

| | |
|---|---|
| A/L அல்லது O/L முடித்தவர்களுக்கு | பகுதிநேர வேலைவாய்ப்புடன் மாணவர் விசா & PR |
| பட்டதாரிகளுக்கு | வேலைவாய்ப்புடன் நிரந்தர குடிரிமை (PR) |
| தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு | வெளிநாட்டு வேலையுடன் குடியுரிமை (PR) |

மற்றும் Visit Visa, Tourist Visa, Spouse Visa, Parent Visa, Medical Visits, Dependent Visa, Green Card & Visa Rejection Appeals

மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk

info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி பொருத்தமான வாய்ப்புக்களை அறிந்துகொள்ளுங்கள்

(சி-9966)

SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions

Sikaram (Pvt) Ltd., 275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி. யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்) Tel: 0773616798 / 021 222 00 11

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் உங்களின் எதிர் காலம்?

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

Spoken English With Grammar - Quick Learning Course

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

Diploma In English Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நானாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

IELTS Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

We gurantee success rate 6.5 band and above

A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)

(சி-9955)

30.01.2015 @ 9 am
31.01.2015 @ 8.30 am
01.02.2015 @ 11 am
02.02.2015 @ 3 pm

No.15, Sirambiyadi Lane, Off Stanley road (Above Sathosa SM), Jaffna. Tel : 021-2224550

Head Office: No.30 15/2, W.A. D. Silva Mawatha, Colombo -06. Tel : 0112500207

Hot Lines : 0777585913, 0777222422, 07[illegible]

Architectural CAD Centre

Personal - Group - Visiting Classes

Jaffna - Vavuniya - Colombo

Diploma in Engineering Drawing &

Auto CAD

Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
Cert. in Auto CAD [Software (2D &3D)]
University of Peratheniya
Cert. in Auto CAD [Advance 3D - Modeling]
University of Moratuwa
Contact No:0718617972

(சி-9965)

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள டாடா இண்டிகோ கார் விற்பனைக்கு உண்டு.
0773720154
0776720792
(9283)

வீடு விற்பனைக்கு உண்டு

ஓட்டுமடம் சந்தியிலிருந்து 100 அடி தூரத்தில் மானிப்பாய் வீதியில் வீட்டுடன் கூடிய 1 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

விபரங்களுக்கு :-

இல.600/6, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

எனும்முகவரியில் தொடர்பு கொள்ளவும் (சி-9963)

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

இடம் : யாழ் புத்தகசாலை (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) (305, 307, 309 ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)

காலம் : 29.12.2014 முதல் 15.02.2015 வரை

நேரம் : காலை 8.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

Grade 6க்கு உரிய Science வெளிவந்துவிட்டது (2015 New Syllabus), English literature உரிய புத்தகங்கள் வெளிவந்துவிட்டது, (The vendor of sweets, bringing Tony home, The prince and the pauper)

யாழ். புத்தகசாலை

305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)

(C-9946)

தொடர்புகளிற்கு : 077 8349 507, 021 4545 552


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, விறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org